அஞ்சுவையமுது

கட்டுரைத் தொகுப்பு

முதல் மலர்

ஸ்ரீ மாலோலன்

பழவேரி சக்ரவர்த்தி
ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ஸாரஸாரஜ்ஞ ராஜகோபாலாசாரியர்
குமாரன் லக்ஷ்மீநரஸிம்ஹதாஸன்

பழவேரி சக்ரவர்த்தி ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ஸாரஸாரஜ்ஞ ராஜகோபாலாசாரியரின்
87வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் வெளியிடப்பட்டது



ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்ரீ ராமானுஜன் ஸ்ரீ ஸ்வாமி தேஸிகன்

ஸ்ரீமதாதிவண் ஸடகோப ஜீயர்

42 ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்

43 ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்

44 ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்

45 ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்

46 ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ।
श्रीमते रामानुजाय नमः ।
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।
श्रीमदादिवण्शठकोपयतीन्द्रमहादेशिकाय नमः ।
श्रीमते श्रीलक्ष्मीनृसिंहदिव्यपादुकासेवक श्रीवण्शठकोप
श्रीनारायणयतीन्द्रमहादेशिकाय नमः ।
श्रीमते श्रीवण्शठकोप श्रीरङ्गनाथयतीन्द्रमहादेशिकाय नमः ।

அஞ்சுவையமுது

கட்டுரைத் தொகுப்பு

முதல் மலர்

பழவேரி சக்ரவர்த்தி
ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ஸாரஸாரஜ்ஞ ராஜகோபாலாசாரியர்
குமாரன் லக்ஷ்மீநரஸிம்ஹதாஸன்

பதிப்பகத்தார் :
மாறன் பதிப்பகம்
மாலோல பவனம், 56, ஆறாவது குறுக்குத் தெரு,
பாபுஸாபாளையா, பெங்களூர் 560043.
கைபேசி +919844124542

பதிப்பகத்தார் : மாறன் பதிப்பகம்
மாலோல பவனம், 56, ஆறாவது குறுக்குத் தெரு,
பாபுஸாபாளையா, பெங்களூர் 560043.
கைபேசி +919844124542
முதற்பதிப்பு : அக்டோபர் - 2012
ஆசிரியர் : பழவேரி சக்ரவர்த்தி லக்ஷ்மீநரஸிம்ஹன்
படைப்பு : அஞ்சுவையமுது - முதல் மலர்
படிகள் : 500

கிடைக்குமிடம் : மாறன் பதிப்பகம்
மாலோல பவனம், 56,
ஆறாவது குறுக்குத்தெரு,
பாபுஸாபாளையா, பெங்களூர் 560043.
கைபேசி +919844124542.

ஸ்ரீ பராஶர குருகுலம்
லக்ஷ்மீநரஸிம்ஹ க்ஷேத்ரம்,
ஸ்ரீனிவாஸ க்ஷேத்ரம் சாலை,
பெலகொளா, மைசூர் - கே ஆர் எஸ் - சாலை,
ஸ்ரீரங்கப்பட்டினம் தாலுகா- 571606.
கைபேசி +919343129499.

ஆர். லக்ஷ்மீநரஸிம்ஹன்
1701/12, 20 -C கிராஸ், 7வது மெயின்,
C பிளாக், ஸஹகார நகர்
பெங்களூர் 560092
கைபேசி +917353746458

அச்சகம் : பட்டாபி எண்டர்ப்ரைசஸ், மைசூர்.

© உரிமை : ஆசிரியருக்கே.

அஞ்சுவையமுது

கட்டுரைத் தொகுப்பு

முதல் மலர்

பொருளடக்கம்

1)	பதிப்புரை	i
2)	சமர்ப்பணம்	v
3)	ஸ்ரீ. உ. வே மஹாவித்வான் ஸாரஸாரஜ்ஞ பழவேரி சக்ரவர்த்தி ராஜகோபாலாசார்யர் ஸ்வாமியின் சரிதைச் சுருக்கம்	1
4)	ஸ்ரீபரதாழ்வான்	5
5)	சிறை இருந்தவள் ஏற்றம்	27
6)	அடையாளம்	34
7)	நன்னோய்	39
8)	ஆழ்வார்களின் நாயிகாபாவம்	47
9)	ஆத்மாபஹாரம்	56
10)	ஆதியான் அடியாரும் அடிமையின்றித் திரிவாரும்	63
11)	வேருக்கு நீர்	98
12)	ஸ்ரீஸாரஸாரஜ்ஞ பழவேரி ஸ்வாமி - வாழ்த்துப்பா	103

பதிப்புரை

ஸ்ரீய:பதியான எம்பெருமான் இவ்வுலகில் உள்ளோர் உஜ்ஜீவிக்க, தானே அவதரித்தும், ஆழ்வாராசார்யர்களை அவதரிப்பித்தும் கருணை புரிகிறான். ஆழ்வார்களும், ஆசார்யர்களும் பகவானுக்கொப்பர். இதை ஸ்வாமி தேஶிகன்,

अज्ञानध्वान्तरोधादघपरिहरणादात्मसाम्यावहत्वात्
जन्मप्रध्वंसिजन्मप्रदगरिमतया दिव्यदृष्टिप्रभावात् ।
निष्प्रत्यूहानृशंस्यान्नियतरसतया नित्यशेषित्वयोगात्
आचार्य: सद्भिरप्त्युपकरणधिया देववत्स्यादुपास्य: ।। என்று அருளிச் செய்துள்ளார்.

அஜ்ஞான இருளை நீக்குவதிலும், பாவங்களைப் போக்குவதிலும், (ஜ்ஞானகுண அனுஷ்டானங்களில்) தன்னைப் போல் மாற்றுவதிலும், ஸம்ஸாரத்தை நீக்க தத்வ ஜ்ஞானத்தை உண்டாக்கி உயர்ந்த ஜ்ஞானப் பிறவியை அளிப்பதிலும், குளிரக் கடாக்ஷித்து நல்ல கதியைப் பெறச் செய்வதிலும், தன்னை வந்து அடைந்தவர்களுக்கு வள்ளல் பெரும் பசுக்கள் போல் எல்லையற்ற கருணையைச் சுரப்பதிலும், இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கப்படும் இன்பப் பொருளாய் இருத்தலிலும், எல்லாக்காலத்தும் ஸ்வாமியாய் இருப்பதினாலும் ஆசார்யன் எம்பெருமானுக்கு ஸமமாக இருப்பதால் எம்பெருமானைப்போல ஆசார்யனும் உபாஸிக்கத்தக்கவன் என்கிறார் ஸ்வாமி தேஶிகன். இத்தகைய எல்லாப் பண்புகளுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ. வே. பழவேரி ராஜகோபாலாசார்ய ஸ்வாமியிடம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபம் செய்யும் பாக்யத்தை இப்பிறவியில் எங்களைப் போன்ற பலருக்கு பகவான் அருளினான்.

ஸ்ரீமத் அஹோபிலமடாஸ்தானத்தில் 45வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீநாராயணயதீந்த்ர மஹாதேஶிகன், ஒரு சமயம் பெங்களூரில் திருப்பாவை உபந்யாஸத்தில், ஸ்வாமியின் பெருமைகளை எடுத்துச் சொல்லி, எங்களுக்கு அறிமுகப்படுத்தி, அவரிடம் முறையாகப் பிரார்த்தித்துக் காலக்ஷேபம் செய்யும்படி நியமித்தாயிற்று. ஸ்வாமியும் கருணையோடே சிறியஜ்ஞானத்தவரான எங்களுக்கு ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபத்தைச் சுமார் ஐந்து வருட காலம் சாதித்து அருளினார்.

ஆத்மகுணங்களோடு கூடின ஸ்வாமியின் வாழ்க்கையை ஏட்டில் எழுதிமுடிக்கவியலாது. போற்றி உகந்து, புந்தியில் கொண்டு, அவர் புகழ் சாற்றி வளர்ப்பதும் அவர் நமக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறாகாது.

நம் ஸ்வாமி ஸம்பிரதாயத்திற்குச் செய்த உபகாரங்களில் மிகச் சிறந்ததாகப் பெரியோர்கள் கருதுவது தன்னைப் போலவே தனது குமாரரை ஜ்ஞாதாவாக விளங்குமாறு செய்ததையே. அன்னாரும் தன் தந்தையின் அடியொற்றி பலருக்குக் காலக்ஷேபங்கள் சாதித்து வருகிறார்.

ஸ்ரீ. உ. வே. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி தனது தகப்பனாரும், எங்களது ஸ்வாமியுமான ஸ்ரீ. உ. வே. பழவேரி ஸ்வாமியின் திருநக்ஷத்ர வைபவத்தில் தனது திருத்தந்தையாரிடமிருந்து க்ரஹித்த விஶேஷார்த்தங்களைக் கட்டுரைகளாகத் தொகுத்து 'அஞ்சுவையமுது' என்ற தலைப்பில் முதல் பாகமாக வெளியிட விரும்பினார்.

ஜ்ஞானத்தந்தையான ஸ்வாமியின் திருநக்ஷத்ர வைபவத்தில் அதைப் புத்தகமாக வடிவமைத்து வெளியிடும் கைங்கர்யத்தைப் பெற்றது எங்கள் பாக்கியமே! பழவேரி ஸ்வாமி ஸ்ரீமத்ராமாயணத்தில் உள்ள வேதாந்த, தர்மஶாஸ்திர நுணுக்கங்களை அறிய ஒரு பிறவி போதாது, ஒவ்வொருமுறை வாசிக்கும் போதும் புதுப்புது அர்த்தங்கள் விளங்கும் வண்ணம் செய்யும் என்று சாதிப்பது வழக்கம். இக்கட்டுரைத் தொகுப்பில் ஸ்ரீ. உ. வே. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி ஸ்ரீமத் ராமாயணத்தில் இருந்தும், ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளிலிருந்தும், இவைகளுக்கு வ்யாக்யானம் அருளிச்செய்துள்ள நம் பூர்வர்களின் க்ரந்தங்களிலிருந்தும் விஷயங்களை எடுத்தாண்டிருப்பது இவருடைய ஆழ்ந்த அறிவாற்றலைக் காட்டுகிறது.

இதில் ஆசிரியரின் எட்டு கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளோம். இக் கட்டுரைகளின் சிறிய முன்னோட்டம் காண்போம்.

ஸ்ரீபரதாழ்வான், சக்ரவர்த்திதிருமகனான ஸ்ரீராமபிரான் ஸீதாபிராட்டியுடன் புல் படுக்கையில் ஶயனித்திருந்ததை குஹப்பெருமாள் காட்ட அறிந்து, பாதரஸ நிலைக்கு உருகி மயங்கிக் கிடந்தார். அத்தகைய ஸ்ரீபரதாழ்வான் தான் சிறிதும் ஸம்பந்தப்படாத தவற்றிக்குப் பழி சுமத்தப்பட்டு, தன்னைச் சார்ந்த சுற்றம் அனைத்தும் தவறான நோக்கில் பேச்சிலும், நடத்தையிலும் அம்பாகத் தைத்த பொழுதிலும், ஸ்ரீவைஷ்ணவலக்ஷணத்தோடே எங்ஙனே

எழுந்தருளியிருந்தார் என்பதை இந்த ஸ்வாமி விவரித்திருக்கும் நடையைப் பயில்பவர் மனம் உருகி ஸ்ரீபரதாழ்வான் பக்கலில் இனி தனி பக்தி கொள்வர் என்பது உறுதி.

இராவணனால் சிறையெடுக்கப்பட்டு, பிறர் துயர் தீர்க்கவே தான் சிறையுற்று, பழிச் சொல்லேற்று, பெருமாளைவிட அதிக துன்பத்துக்கு இலக்காகிய ஸீதையின் சிறையிருந்த ஏற்றத்தையே ஆதிகாவியம் கூறுகின்றதென்று 'சிறை இருந்தவள் ஏற்றம்' என்ற கட்டுரையில் மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறார்.

அனுமனின் தூதின் பெருமையும், ஸ்ரீபெரியாழ்வாரால் அடையாளமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வின் மேன்மையையும், மஹாகவியின் ஸ்லோகத்தோடு ஒப்பிட்டு ஸ்ரீபெரியாழ்வாரின் பாசுரத்தின் ஆழத்தையும் 'அடையாளம்' என்ற கட்டுரை அழகாகக் காட்டியுள்ளது.

யாரும் தனக்கு வரக்கூடாது என வேண்டுவதொன்று நோய். இந்நூலசிரியரால் கட்டுரைத்தலைப்பு 'நன்னோய்' என இடப்பட்டிருப்பதை நோக்கின் நாம் அறிந்தவரை நோயில் எந்த நற்குணங்களையும் கண்டவரல்லோமே, அப்படியிருக்க இதில் என்ன கூறப்போகிறார் என்ற அவாவுடனே வாசிக்க முற்படுவோம். பகவத்விஷயமானால் நோயும் நன்றே என விளக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியக்கிறோம்.

'ஆழ்வார்களின் நாயிகாபாவம்' என்ற கட்டுரை, ஆசிரியர் கூறியுள்ளதுபோல், நம் பூர்வாசார்யர்களின் கருத்துத் தொகுப்பு என்றாலும் நன்மாலையாய் மட்டுமின்றி அதில் உள்ள தேன் சுவையைத் தீஞ்சுவைத் தமிழில் நமக்கு அளித்திருக்கிறார் என்பதை வாசித்தறிவது சாலச் சிறந்தது.

'ஆத்மாபஹாரம்' மற்றும் 'ஆதியான் அடியாரும் அடிமையின்றித் திரிவாரும்' ஆகிய கட்டுரைகள், 'ஸ்ரீபரதாழ்வான்' என்ற கட்டுரையைப் போலவே இந்நூலாசிரியரின் ஆய்வுக்கட்டுரைகள் என்றே கொள்ளலாம். இவ்விரண்டு தலைப்புகளின் விஷயம் நெடுநாள் காலக்ஷேபம் பண்ணினால் அன்றி சட்டென விளங்காது. அதை எளிய முறையில் புரியும்படி விளக்கியுள்ளார். இக்கட்டுரைகளின் மூலம் நம் ஸம்ப்ரதாய விஷயங்களின் ஆழமும், அவற்றில் தெளிவுபெற ஆசார்யர்களை அணுகுவது ஒன்றே வழி என்பதும் புலனாகும்.

இப்புத்தகத்தின் ஈற்றுக் கட்டுரையான 'வேருக்கு நீர்', 'தேஹிக தர்சனம்' என்னும் ஆன்மிக பத்திரிகையில் வெளியாகியுள்ளது. காலத்திற்கு தக்க அறிவுரைகளைத் தாங்கி நிற்கும் இக்கட்டுரை பல வாசகர்களாலும், பெரியோர்களாலும் பாராட்டப்பெற்றது. இன்னும் பலர் பயனுற இந்நூலிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆக இந்நூல் தாங்கிவரும் கட்டுரைகள் எல்லாமே இந்நூலாசிரியர் அவர் உரையில் கூறியுள்ளதுபோல் பலகாலம் பெரியோர்களிடம் காலக்ஷேபம் செய்தும், தான் பிரவசனம் பண்ணியும் கண்ட பலனால் எழுந்துள்ளது. இதை வாசிப்பவர்கள் நன்கு உணரும் வண்ணம் ஸம்ப்ரதாய வழி மீறாமலும், அதே சமயம் காலத்திற்குத் தக்கவாறு ஓரளவு எளிய நடையிலும் வழங்கிப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

இக்கட்டுரைத்தொகுப்புடன் ஸ்ரீமான் பார்த்தசாரதி அவர்கள் நம் ஸ்வாமியின் ஆத்ம குணங்களையும், அவரின் சில வாழ்க்கை ஸம்பவங்களையும் எளிய செய்யுட்களாக வடிவமைத்துத் தந்ததையும் பிரசுரித்துள்ளோம்.

இப்புத்தகத்தை நல்ல முறையில் மிகக் குறுகிய காலத்தில் பேருதவியாய் வடிவமைத்துக் கொடுத்த ஸ்ரீ பராஶரகுருகுல மாணவன் சிரஞ்சீவி அநிருத்தனுக்கு பகவான் வரும் நாட்களிலும் இதேபோல் கைங்கர்யம் கிடைக்க வழி வகுக்கப் பிரார்த்திக்கிறோம்.

இந்நூலை அழகிய வடிவில் நல்ல தரத்துடன் அச்சிட்டுக் கொடுத்த மைசூரைச் சேர்ந்த பட்டாபி எண்டர்ப்ரைசஸ் உரிமையாளர் ஸ்ரீமான் பட்டாபி அவர்களுக்கும் பூர்ண பகவத் கடாக்ஷம் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஆண்டுதோறும் இந்த ஸ்வாமி இம்மாதிரியான கட்டுரைகளைத் தன் தந்தையார் திருநக்ஷத்ரத்தில் எழுத, இவ்வஞ்சுவையமுதின் பல மலர்களை வெளியிடும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஸ்ரீமாலோலனிடம் பிரார்த்திக்கிறோம்.

வாசுதேவன் ஸம்பத்குமார்
இயக்குனர் மாறன் பதிப்பகம்
பெங்களூரு,
நந்தன வருடம் புரட்டாசி பூரம்
அக்டோபர் 2012

சமர்ப்பணம்

அடியேனால் எழுதப்பட்டுள்ள (சிறு கட்டுரைகளை உள்ளடக்கியுள்ள) 'அஞ்சுவையமுது' என்ற இந்நூலை,

மாலுகந்தவாசிரியர்களான ஆழ்வார்கள் திருவடிகளிலும், ஸ்ரீபராஶர முனிவரின் திருவடிகளிலும், பூர்வாசார்யர்கள் அனைவரின் திருவடிகளிலும்,

அடியேனுக்கு ஸ்ரீவைஷ்ணவப் பிறவியளித்தவரும், அடியேனின் ரக்ஷாபரத்தை ஸ்ரீமாலோலனுடையதாய் ஆக்கியவரும், பல அத்யாத்மக்ரந்த நிர்மாணம் செய்து அந்வர்த்தமான வ்யாக்யாமுத்ரையுடன் விளங்குபவரும், உயரிய ஆஹ்நிகக்ரந்தமருளிச்செய்து ஸ்ரீவைஷ்ணவ உலகுக்குப் பேருதவி புரிந்தவரும், பல திவ்யதேஶங்களில் பல விதமான கைங்கர்யங்களை மேற்கொண்டவரும், இவரைப் போன்றே நாமும் ப்ரவசனம் செய்யவும் நூல்களை இயற்றவும் வேண்டும் என என் மனதிலே பெருந்தா(க்)கத்தை ஏற்படுத்தியவரும், ஸ்ரீமத் அஹோபிலமடாஸ்தானத்தில் 45வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியுமுள்ள ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீநாராயணயதீந்த்ர மஹாதேஶிகன் திருவடிகளிலும்,

அடியேன்பால் ஓர் தந்தையைப் போலே கருணையுடையவரும், இருக்வேதவிநீதரும், பல அத்யயனஸம்பந்னர்களை உருவாக்கியவரும், பண்டிதாக்ரேஸரரும் ஸ்ரீமத் அஹோபிலமடாஸ்தானத்தில் 46வது பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீரங்கநாதயதீந்த்ர மஹாதேஶிகன் திருவடிகளிலும்,

ஸ்ரீமத் இஞ்சிமேடு அழகியசிங்கரின் கருணைமழையில் நனைந்தவரும், அன்னாரால் ''ஸாரஸாரஜ்ஞ:'' என்ற பிருதினாலே அனுக்ரஹிக்கப்பட்டவரும், ஸ்ரீமத் பெரிய அழகியசிங்கராலே ''ஸ்ரீபாஷ்யபாவஜ்ஞ:'' என்ற பிருதினாலே அனுக்ரஹிக்கப்பட்டவரும், ந்யாய வேதாந்தவித்வானும், ஹிந்தி பாஷையில் ப்ரவீணரும், க்யாதிலாபபூஜாவிமுகரும், அடியேனுக்குச் செந்தமிழையும் வடமொழியையும் ந்யாயஶாஸ்திரத்தையும் போதித்து ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தசதுஷ்டயத்தையும் அருளியவரும், அருளிச்செயலை அடியேனுக்கு அருளியவரும், தவறு செய்யும் ப்ரஜைகள் முன்தோன்றும் ஶக்திகொண்ட கார்த்தவீர்யார்ஜுனனைப்போலே அடியேன் மனதில்

தவறான எண்ணங்கள் தோன்றும் முன்பே ஶிக்ஷிக்க என் முன் தோன்றுபவரும், அடியேனின் தகப்பனாருமான வைகுண்டவாசி ஸ்ரீ. உ. வே பழவேரி சக்ரவர்த்தி மஹாவித்வான் ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி திருவடிகளிலும்,

பரமஸாத்வியும், அடியேனின் தகப்பனாரின் வருமானத்துக்குத் தக்கபடி வாழ்க்கை நடத்தி அவருடைய முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான யாரிடமும் கையேந்தாமை என்ற விரதத்தை நன்கு நடத்திக்கொடுத்தவரும், கடின உழைப்பாளியும், படிக்காவிட்டாலும் கூர்ந்த அறிவும், ஒரு செயலின் முன்பின் விளைவை நன்கு உணருமாற்றலும், தைரியமும் பெற்றவருமான அடியேனுடைய தாயார் வைகுண்டவாசி வஸந்தலக்ஷ்மீ அம்மாளுடைய திருவடிகளிலும் இந்நூலை அனந்தமான ப்ரணாமங்களுடன் சமர்ப்பிக்கிறேன்.

இது அடியேனின் முதல் நூலாகும். அடியேன் அனுபவமற்றவன். ஆயினும் இந்நூலை இயற்றியதற்குக் காரணம் 30 வருடகாலம் அடியேன் ஸாமான்ய மற்றும் பல வேதாந்த க்ரந்தங்களைத் தகப்பனாரிடம் கேட்ட அனுபவத்தையும், 12 வருட காலங்களாக ப்ரவசனம் பண்ணியதால் ஏற்பட்ட அனுபவத்தையும் பதிவுசெய்ய எண்ணியதாம். ஓர் பெரிய பண்டிதரிடம் கற்றும் அடியேனின் அறிவின்மையாலும் எழுத்தாற்றலின்மையினாலும் தவறுகள் ஏற்பட்டிருந்தால் பண்டிதர்கள் அடியேனை மன்னித்தருள வேண்டுகின்றேன்.

ஸ்ரீமாலோலன் மற்றும் ஸ்ரீமத் அழகியசிங்கர்களின் அனுக்ரஹத்தை முன்னிட்டு, ப்ரதிவருடமும் இவ்வாறே தகப்பனார் ஸ்வாமியின் திருநக்ஷத்ரதினத்தில், அவரிடமிருந்து கேட்ட விஷயங்களை 'அஞ்சுவையமுது' என்ற இதே தலைப்பிலே ஒவ்வொரு மலராக வெளியிட எண்ணியுள்ளேன்.

கட்டுரைகளைக் கடாக்ஷித்து அனுக்ரஹித்த ஸ்ரீ. உ. வே திருநாகை வீரராகவாசார்யர் ஸ்வாமிக்கும், ஸ்ரீ. உ. வே சோகத்தூர் ராமானுஜாசார்யர் ஸ்வாமிக்கும் அனந்தமான ப்ரணாமங்களைச் சமர்ப்பிக்கிறேன். இக்கட்டுரைகளைப் படிக்கப்போகிறவர்களின் நிலையிலே தங்களை நிறுத்தி தேவையான மாற்றங்களைச் செய்ய உதவிய புதுஅக்ரஹாரம் ஸ்ரீமான் பார்த்தசாரதி மற்றும் ஸ்ரீமான் வாசுதேவாசாரியர் ஸ்வாமிகளுக்கு அடியேனின்

அனந்தமான ப்ரணாமங்களைச் சமர்ப்பிக்கிறேன். இவ்விருவரும் அடியேன் தகப்பனார் ஸ்வாமியிடம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபம் பண்ணியவர்கள். அடியேனின் தகப்பனார் ஸ்வாமியைப்பற்றி ஸ்ரீமான் பார்த்தசாரதி ஸ்வாமி யாத்துள்ள வெண்பாக்களும் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. புத்தகமாக வடிவமைத்துக்கொடுத்த புதுஅக்ரஹாரம் சிரஞ்சீவி அநிருத்தனுக்கு அடியேனின் நன்றியைத் தெரிவித்து ஆசீர்வதிக்கின்றேன்.

அடியார்க்கடியன்,
பழவேரி சக்ரவர்த்தி லக்ஷ்மீநரஸிம்ஹதாஸன்,
பெங்களூர்.
கைபேசி +917353746458
ஸ்ரீநந்தன ஹை புரட்டாசி மீ, பூரம்

ஸ்ரீ. உ. வே மஹாவித்வான் ஸாரஸாரஜ்ஞ பழவேரி சக்ரவர்த்தி ராஜகோபாலாசார்யர் ஸ்வாமியின் சரிதைச் சுருக்கம்

(1925 - 2011)

தோற்றம்:

பலவித்வான்களையும், அத்யயன ஸம்பன்னர்களையும், அத்யாபகர்களையும், ஆசாரஶீலர்களையும் நம் ஸம்ப்ரதாயத்துக்கு அளித்த பெருமையுடையது தொண்டைமண்டலத்திலுள்ள, ஸ்ரீபழவேரி கிராமம். இவ்வூரில் ஸ்ரீ. உ. வே கோபாலதேஶிகாசார்யர் என்று அத்யயனஸம்பன்னராய், பரமைகாந்தியாய், ஆசாரஶீலராய் எழுந்தருளியிருந்த மகானுக்கு மூன்று புத்ரர்கள் தோன்றினர். இக்குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே தாயின் பிரிவு ஏற்பட அவற்றைக் காக்கவேண்டியதை எண்ணியும், ப்ரம்மயஜ்ஞாதி அனுஷ்டானத்தின் பொருட்டும் கோபாலதேஶிகாசார்யர் ஸ்வாமி முதல் பார்யையின் தங்கையான கமலா என்ற வதுவை மணந்தார். இவ்விருவருக்கும் ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண்குழந்தைகளும் பிறந்தனர். இந்த ஆண் குழந்தையே இச்சரிதையில் கூறப்படுகிற ஸ்ரீ. உ. வே ராஜகோபாலாசார்யராவார். 1925ம் ஆண்டு புரட்டாசிப் பூரத்தில் தோன்றினார்.

கல்வி:

கர்பாஷ்டமத்தில் உபநயனம் செய்விக்கப்பட்டு, தன் தகப்பனாரிடமே பஞ்சஸூக்தம், அனுஷ்டானத்திற்குத் தேவையான மந்திரங்கள், ஶ்ராத்த தர்ப்பண ப்ரயோகங்கள் முதலியவற்றை அதிகரித்தார். பின்பு பத்து வயதில் திருப்பதி கலாஶாலையில் சேர்ந்து ந்யாயஶாஸ்த்ரத்தைக் கற்றார். மிகக்கடினமான ந்யாயநூல்களைப் பூர்வாவலோகனமின்றி மந்தமதிகளும் அறியும்படி போதிக்கவல்லவரும், ஸ்ரீ. உ. வே திருக்கள்ளம் ஸாரஸாரஜ்ஞ ஸ்ரீநரஸிம்மராகவாசார்யர், ஸ்ரீ. உ. வே என். எஸ். ராமானுஜதாதாசார்யர், ஸ்ரீ. உ. வே வேளுக்குடி வரதாசார்யர் முதலிய ஸ்வாமிகளுக்கு ந்யாயஶாஸ்த்ரம் கற்பித்தவருமான தன் தமையனார் ஸ்ரீ உ. வே. வேங்கடவரதாசாரிய ஸ்வாமியிடமும், அபிநவதேஶிக ஸ்ரீ. உ. வே உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமியிடமும் ந்யாயஶாஸ்த்ரத்தைக் கற்றார். உத்யோக நிமித்தமாக SSLCயும், ஹிந்தி பாஷையில் மேல்படிப்பும் படித்தார்.

ஆசார்யஸம்பந்தம்:

உபநயனமானவுடன் ஸ்ரீமத்இஞ்சிமேடு அழகியசிங்கரால் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து அனுக்ரஹிக்கப்பட்டார். ஸிரோமணி வாசித்த பின்பு ஸ்ரீமத்இஞ்சிமேடு அழகியசிங்கரிடம் காலக்ஷேபம் செய்யச் சென்றும், மிகவும் நோயுற்றதால் காலக்ஷேபம் செய்யமுடியாமல் போயிற்று. அச்சமயத்தில் ஸ்ரீமத் அழகியசிங்கர், ''உன் தமையன் வேங்கடவரதன் நல்ல பண்டிதனாய் ஸ்தானார்ஹனாயிருந்தும் சிறுவயதிலேயே பரந்யாஸம் ஆகாமலே சென்றுவிட்டான். நீ பரந்யாஸத்தைப் பண்ணிவிடு. ஜன்மமெடுத்ததின் பலன் கிடைத்துவிடட்டும்'' என்று அருளிச்செய்ய, நான் அழகிய சிங்கரிடம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் காலக்ஷேபம் செய்தபின்பே பரந்யாஸம் பண்ணிக்கொள்ள விரும்புகின்றேன் என நோயுற்ற நிலையிலும் ஸ்வாமி கூறினார். ஆனால் அழகியசிங்கரோ மிகுந்த க்ருபையுடன் தானே நேராகவும், ஸ்ரீகார்யம் ஸ்வாமியை முன்னிட்டும் பல உபதேஶம் செய்து, ஆசார்யநிஷ்டையில் பரந்யாஸம் செய்து ஸ்வாமியை அனுக்ரஹித்தார்.

காலக்ஷேபம் :

பரந்யாஸத்தின் ஆநுஷங்கிகபலனாக விரைவில் நல்ல ஆரோக்யம்பெற்று மீண்டும் ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவடிவாரத்தில், 45வது பட்டம் ஸ்ரீமத் பெரிய அழகியசிங்கர் (வித்வந்மணி வில்லிவலம் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி), திருக்கள்ளம் ஸாரஸாரஜ்ஞ ஸ்ரீநரஸிம்மராகவாசார்யர் ஸ்வாமி, ஸாரஸாரஜ்ஞ பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்யர் ஸ்வாமி முதலியோர்களுடன் ஸதீர்த்தராய் ஆஹ்நிகம் மற்றும் க்ரந்தசதுஷ்டய காலக்ஷேபம் செய்யும்படியான பாக்யம் பெற்றார்.

கைங்கர்யம்:

ஸ்ரீமத் அழகியசிங்கர் ஓரிருமுறை அந்தரங்க கைங்கர்யத்தில் நியமிக்க, ''அழகியசிங்கரின் ஸந்தோஷ்டத்தை நினைத்தால் அடியேனுக்கு அதற்குத் தகுதியுள்ளதா என எண்ணி மனம் கூசுகின்றது. பயமேற்படுகின்றது. ஸ்ரீமடத்தின் நிர்வாஹ கைங்கர்யத்திலும், அழகிய சிங்கரின் க்ரந்தங்களைப் பட்டோலை பண்ணும் கைங்கர்யத்திலும் அடியேனை நியமித்தருளவேணும்'' என வேண்ட ஸ்ரீமதழகியசிங்கரும் இசைந்தாயிற்று. ஆயினும் ஸ்ரீமத் அழகியசிங்கர் பரமபதிப்பதற்கு முன்பாக நோவுசாற்றிக்கொண்டு எழுந்தருளியிருந்த நாட்களில் ஒருசில அந்தரங்க கைங்கர்யம் செய்ததாகக் கூறுவதுண்டு.

விருது பெருதல்:

ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திற்கு ''ஸாரபோதிநீ'' என்ற உரையிடத் திருவுள்ளம்பற்றி பட்டோலை சாற்றும்படி அடியேனுடைய தகப்பனார் ஸ்வாமி, திருக்கள்ளம் ஸ்ரீநரஸிம்மராகவாசார்யர் ஸ்வாமி, பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்யர் ஸ்வாமி ஆகிய மூவரையும் நியமித்தாயிற்று. வ்யாக்யானம் பூர்த்தியான தினத்தில் கண்பார்வை மங்கிய தனக்கு கண்ணின் நிலையிலே இருந்து வ்யாக்யானத்தைப் பூர்த்திசெய்யக் காரணமாயிருந்த இம்மூவரையும் 'ஸாரஸாரஜ்ஞ:' என்ற விருதினாலே அனுக்ரஹித்தாயிற்று. ஸ்ரீமத் பெரிய அழகியசிங்கராலே ''ஸ்ரீபாஷ்யபாவஜ்ஞ:'' என்ற விருதினாலே அனுக்ரஹிக்கப்பட்டவர்.

ஆத்மகுணபூர்த்தி:

நல்ல ஞானத்தின் பலன் நல்லொழுக்கமும் நற்பண்புமேயாம். முக்கியமான ஆசாரவிஷயங்களில் சிறிதும் விலகமாட்டார். ஸ்ரீமத் ராமாயணபாராயணம் செய்யாமல் ஒருநாளும் இருந்ததே கிடையாது. ஸ்ரீமத் இஞ்சிமேடு அழகியசிங்கரிடம் அசஞ்சலமான பக்தியுடையவர். ஒருவரிடமும் கையேந்திய வழக்கமே கிடையாது. பணத்தாசையே இல்லாதவர். யாரேனும் ஸம்பாவனை செய்யக் கூப்பிட்டாலும் செல்லார். ஜிஹ்வாசாபல்யமே இல்லாதவர். பரான்னத்தை சாப்பிட்டவரே கிடையாது. கீழாரோடு சேரமாட்டார். ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கர் இவரை ஜாத்யபவம் (ஜாதிகுதிரை) என்றே வ்யவஹரிப்பது வழக்கம். மனதில் பட்டதை மறைக்காமல் பேசுவார். தவற்றைக் கண்டிக்கத் தயங்கமாட்டார். ராமனைப்பற்றிப் பேசியே பொழுதுபோக்குவார். அர்ச்சை எம்பெருமான்களில் ஸ்ரீமாலோலனையும், ஸ்ரீவீரராகவனையும் நினைக்கும்போதெல்லாம் கண்ணீர் மல்குவார். எல்லோரோடும் கலந்து பழகுவார். வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் ஶாஸ்த்ரத்தை மீறாமல் இதிஹாஸபுராணக் கதைகளைக்கொண்டு நல்ல அறிவை ஏற்படுத்தவேண்டியது நம் கடமை என்பார். இவரிடம் பள்ளியில் படித்த மாணவர்கள் எந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்களானாலும் நன்னடத்தையுடனே விளங்குகின்றார்கள். ஆடம்பரமின்றி வாழ்ந்தவர்.

இல்வாழ்க்கை:

குடும்பசூழ்நிலையால் வெகுகாலம் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்தார். பின்பு ஸ்ரீமத் பரமஹம்ஸ கோழியாலம்

ஸ்வாமியின் பரிபூர்ண அனுக்ரஹத்திற்குப் பாத்ரரானவரும், நல்ல ஆசாரஶீலரும், ராமாயணபாராயணத்தையே தனக்குப் பொழுதுபோக்காகக் கொண்டவருமான ஸ்ரீ. உ. வே ஓரத்தி வரததேஶிகாசார்ய ஸ்வாமியின் பௌத்ரியான வஸந்தலக்ஷ்மீ என்கிற வதுவைமணந்தார். இவர்களுக்கு இரண்டு ஆண்குழந்தைகளையும், நான்கு பெண் குழந்தைகளையும் எம்பெருமான் அனுக்ரஹித்தான். வாசுதேவன் எனப்பெயரிடப்பட்ட ஓர் மகன் சிறுப்ராயத்திலேயே மறைந்தான். பெண் குழந்தைகளைச் சிறுவயதிலேயே ஸத்பாத்ரத்தில் தானம் செய்தார். ஒடுகத்தூர் மற்றும் தையார் அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் ஹிந்தி ஆசிரியராகவும், clerical பதவியிலுமிருந்து ஓய்வுபெற்றார்.

காலக்ஷேபம் ஸாதித்தல்:

பழவேரியிலேயே ஏகாந்தஶீலராய் எழுந்தருளியிருந்ததால் காலக்ஷேபம் ஸாதிக்கும் வாய்ப்பின்றியிருந்தார். ஆயினும் அடியேனுக்கு காவ்யநாடகங்கள், ந்யாய ஶாஸ்த்ரம் மற்றும் அருளிச்செயலை போதித்துக் கொண்டேயிருப்பார். ரகுவம்ஶம், சம்பூராமாயணம் முதலிய க்ரந்தங்களை ஒருவரியும் விடாமல் இலக்கணநுட்பங்களுடன் ஸாதிப்பார். தர்க்கஸங்க்ரஹத்திற்கு உள்ள எல்லா உரைகளையும் கொண்டு போதிப்பார். அடியேனுக்கு க்ரந்தசதுஷ்டயம், அதிகரணஸாராவளி, சில்லரை ரஹஸ்யங்கள் முதலியவற்றைக் காலக்ஷேபமாக ஸாதித்தார். பெங்களூருக்கு எழுந்தருளியபின் பல ஸாத்விகர்களுக்கு ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார, பஞ்சஸ்தவ, ஸ்ரீவிஷ்ணுபுராண, ஸ்ரீமத்கீதாபாஷ்ய காலக்ஷேபங்கள் ஸாதித்தார். சிலருக்கு ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் சொல்லிவைத்து தினமும் அவற்றை அனுஷ்டிப்பவர்களாகச் செய்தார். காலக்ஷேபம் பண்ணும் ஶிஷ்யர்களிடம் தன் குழந்தைகளைவிட அதிகபாசம் வைப்பார்.

திருநாட்டுக்கு எழுந்தருளல்:

இப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த ஸ்வாமி ஸ்ரீகர வர்ஷம் வைகாசிமாதம் க்ருஷ்ணபக்ஷ சதுர்த்தியன்று அனாயாஸமாக ஆசார்யன் திருவடிகளை அடைந்து ஆசார்யனுடன் பகவானை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

அடியார்க்கடியன்,
பழவேரி சக்ரவர்த்தி லக்ஷ்மீநரஸிம்ஹதாஸன்,
பெங்களூர்

ஸ்ரீபரதாழ்வான்

முன்னுரை:

நம் ஸம்ப்ரதாயத்தில் இதிஹாஸபுராணபுருஷர்கள் மற்றும் ஆழ்வார் ஆசார்யர்கள் ஒரு சிலரின் திருநாமங்களுடன் சில விபூஷசொற்களைச் சேர்த்து வழங்கி வருகிறோம். ''பெருமாள்'' என்ற சொல்லை குஹனுடனும் (ஸ்ரீகுஹப்பெருமாள்), திருப்பாணாழ்வாருடனும் (பாண்பெருமாள்), குலபூகராழ்வாருடனும் (ஸ்ரீகுலபூகரப்பெருமாள்) வழங்குவதைக் காணலாம். ''ஆழ்வான்'' என்ற சொல்லை ப்ரஹ்லாதனுடனும் (ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான்), விபீஷணனுடனும் (ஸ்ரீவிபீஷணாழ்வான்), கஜேந்த்ரனுடனும் (ஸ்ரீகஜேந்த்ராழ்வான்), ஶத்ருக்னனுடனும் (ஸ்ரீஶத்ருக்னாழ்வான்), கூரேஶனுடனும் (ஸ்ரீகூரத்தாழ்வான்) வழங்குவதைக் காணலாம். வடமொழியிலே ஆழங்காட்பட்ட பெருந்தமிழர்களான ஸ்ரீவைணவப் பெரியோர்கள் வெறுந்தமிழனைப்போலே கம்பன் என்னாதே ஸ்ரீகம்பநாட்டாழ்வான் என வழங்குவதிலும் இதைக் காணலாம்.

இங்கு ஒன்றை உற்று நோக்கவேண்டும். ''பெருமாள்'' என்ற சொல் வேடுவனோடு ஆழ்வார்களோடு வாசியற சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே ''ஆழ்வான்'' என்ற சொல்லும் இதிஹாஸபுருஷனோடு, ராக்ஷஸனோடு, மிருகத்தோடு, ஆசார்யனுக்காகக் கண்களை இழந்த ஆசார்ய(ஶிஷ்ய)ஶிகாமணியோடு வாசியற சேர்க்கப்பட்டுள்ளது.

அவ்வாறே வசிட்டனாலே பரதன் என்று நாமகரணம் செய்யப்பட்டு ஸ்ரீபரதாழ்வானாய் விளங்கும் ஓர் மஹாபுருஷனின் பெருமையை இனியறிவோம்.

ஸ்ரீபரதாழ்வானும் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானும்:

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ஸ்ரீபராஶரர் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானின் பெருமையைக் கூறும்போது ''उपमानमशेषाणां साधूनां यस्सदाऽभवत्'' என்றருளிச்செய்தார். எல்லா ஸாதுக்களுக்கும் எப்போதும் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானே உபமானபூமியாய்த் திகழ்பவர் என்பது இதன் பொருளாகும். ஒவ்வொரு குணங்களாலே மற்ற உலகிலுள்ள ஸாதுக்கள் உயர்ந்தவர்களென்றால் எல்லா குணங்களினாலும் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் உயர்ந்தவராகையாலே இவரே எப்போதும் எல்லா ஸாதுக்களுக்குள்ளும் உயர்ந்தவராவார் என்பது ஸ்ரீபராஶரரின் திருவுள்ளமாகும். ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தின் இரண்டாவது ஶ்லோகத்திலே ஸ்ரீபரதாழ்வானைப் பின்வருமாறு துதிக்கிறார்.

भरताय परं नमोऽस्तु तस्मै प्रथमोदाहरणाय भक्तिभाजाम् ।
यदुपज्ञमशेषत: पृथिव्यां प्रथितो राघवपादुकाप्रभाव:।।

ஸ்ரீபராஶரர் ''उपमानमशेषाणां साधूनां यस्सदाऽभवत्'' என்று ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் திறத்து அருளிச்செய்ததை, ''प्रथमोदाहरणाय भक्तिभाजाम्'' என்று ஸ்ரீபரதாழ்வான் திறத்து ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்துள்ளதை மிகவும் கூர்ந்து ஆராயவேண்டும்.

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பள்ளியிலோதிவந்த சிறுவனாயிருந்த போதே வாயிலோர் ஆயிரநாமம் உடையனாயிருந்தான். பரதெய்வம் எது என்பதில் ''தலையறுப்புண்டும் சாவேன் சத்தியம் காண்மின் ஐயா! சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்'' என்ற ஸ்ரீதொண்டரடிப்பொடி ஆழ்வாரைப்போலே நிச்சயம் உடையவனாயிருந்தான். பகவானிடமும் பகவானைத் தவிர்ந்த மற்றொன்றை வேண்டாத பரமைகாந்தியாமவன். இப்படிப்பட்ட ஸாத்விகனைப் பிள்ளையாய்ப் பெற என்ன நோன்பு நோற்றோமோ என்று பெருமை கொள்ள வேண்டிய தந்தையாலேயே தீயிலிடப்பட்டவன். இப்படிப்பட்ட கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு பக்தஶிகாமணியாய் அவன் வாழ்ந்தான். பிறர் யாரும் இவனையொத்த துன்பம் அனுபவித்திலர். ஆகையினாலே இவனே உபமானபூமியாய்த் திகழவேண்டியவன் என்பது ஸ்ரீபராஶரரின் திருவுள்ளமாகும்.

உலகிலேயும் பரமபக்தர்களாய் இருந்து பெருந்துன்பத்துக்கு இலக்காகி பின் பகவானாலே ரக்ஷிக்கப்பட்டோர் பட்டியலிலே திரௌபதி, ப்ரஹ்லாதாழ்வான், கஜேந்த்ராழ்வான் முதலியவர்களையே கூறுகின்றனர். இப்பட்டியலிலே ஸ்ரீபரதாழ்வானையும் சேர்க்கவேண்டுமென்பது ஸ்வாமி தேஶிகனின் திருவுள்ளமாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட பக்தர்களைப்போலே ஸ்ரீபரதாழ்வான் பெருந்துன்பத்துக்கு இலக்காகியவனாய்த் தெரியவில்லையே! தானறியாத நிலையிலே தர்மிஷ்டனான தன் தமையன் காட்டுக்கு அனுப்பப்பட்டதை அறிந்து துன்புற்று தானும் காடேறி மீட்டுவர முயற்சித்தான். தமையன் அதற்கு உடன்படாமையால் தமையனின் பாதுகைகளைக் கொண்டு அவன் நினைவாகவே வாழ்ந்து ஆட்சிபுரிந்தான். பதினான்கு ஆண்டுகள் கழித்து நாடேறிய தமையனிடம் அரசை ஒப்படைத்து மகிழ்ச்சியுற்றான். ஸாத்விகனாய் இருந்ததாலே பதினான்கு ஆண்டு பிரிவைப் பொறுக்கமுடியாமையாலே வருந்தினானெனில் அது பல பக்தர்களிடமும் உள்ளதே.

ஸபையிலே துயிலுறிதல், தீயிலிடுதல் முதலான கொடுமைகளேதும் இவனுக்கு ஏற்படவில்லையே. அவ்வாறிருக்க ஸ்வாமி தேஶிகன் இவனையும் பட்டியலிலே சேர்க்கமுற்பட்டது மேற்குறிப்பிட்டவர்களை எல்லாம்விட பரதன் அதிக துன்பத்தை அனுபவித்தவன் என்று திருவுள்ளம் பற்றியதாலேயாக வேண்டும். இனி இதை அறிவோம்.

மரணத்தைவிடக் கொடுமையானது அகீர்த்தியும் வீண்பழியுமேயாகும். பெருமாளின் பிரிவினால் வாடியிருந்த பிராட்டியை சிறியதிருவடி கண்டதைப் பல உவமைகளினாலே வெளியிட்ட வால்மீகி பகவான், ''अभूतेनापवादेन कीर्तिं निपतितामिव - தவறு செய்யாத நிலையிலே உண்டான வீண்பழியினாலே புகழை இழந்ததையொத்து'' என்றான்.

இப்படிப்பட்ட வீண்பழி பரதனுக்கேற்பட்டது. இதுபோல் திரௌபதிக்கோ, ப்ரஹ்லாதாழ்வானுக்கோ, கஜேந்த்ராழ்வானுக்கோ வீண்பழி ஏற்படவில்லை. இவர்களை தவறாக/எதிரியாக நினைத்தவர்கள் ரஜோகுணமே கொண்ட துர்யோதனனும், துரஹங்காரியான தந்தையும், ஓர் நீர்ப்புழுவுமேயாம். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பஞ்சபூதங்களில் ஒன்றான தீயிலிடப்பட்டான். ஆனால் ஸ்ரீபரதாழ்வானோவென்னில் நாவாகிய தீயிலே வெந்துபோனவன். எல்லோருமறியும் பெரிய வள்ளுவனின் சிறிய குறள் இதோ:

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

தீயுக்கும் கடுமையான சொற்களுக்கும் சுடுதலாகிய செயலால் ஒற்றுமையுண்டாகிலும் ஆறாமையை நோக்குங்கால் வெஞ்சொற்கள் தீயினும் கொடியதாகையால் ''நாவினால் சுட்ட புண்'' என்னாதே ''நாவினால் சுட்ட வடு'' என்றான். உலகில் புண் துன்பத்தைக் கொடுக்கும். ஆறிய பின் துன்பமொழிந்து வடுவாகும். ஆனால் வெஞ்சொற்களினால் ஏற்படும் வடுவானது புண்ணிலும் கொடியது. புண் சில நாட்களிருந்து துன்பமளித்து வடுவாகும். வடுவே வெகுநாட்கள் (உடலிருக்கும்வரை) இருக்கும். ஆகையால் நாவினால் சுட்ட வடு காலத்தால் அழியாத துன்பமளிக்கும் என்றபடி. ''நெல்லைக்கொட்டினால் வாரலாம். சொல்லைக் கொட்டினால் வாரமுடியாது'' என்று கிராமமக்கள் கூறுவதையும் பார்க்கிறோமல்லவா? முதலில் வெஞ்சொற்களால் வெந்துபோன பரதனின் விரக்தியை உணர்வோம்.

ஸ்ரீபரதாழ்வானின் விரக்தி:

வடமொழி இலக்கணப்படி விரக்தி என்ற சொல்லுக்கு ஆசையின்மை (விகதா ரக்தி:) மற்றும் அதிக ஆசையுடைமை (விசேஷண ரக்தி:) என்ற இரு பொருள்கள் கொள்ளலாம். ''परमात्मनि यो रक्त: विरक्तः स अपरमात्मनि'', ''மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு'' என்பவை நோக்குக. இவ்விருவகைகளிலுமே பரதன் விரக்தனாம். ஆம்! ராமனுடைய கைங்கர்யத்திலே அதிக ஆசையும் அரசாள்வதில் ஆசையற்றுமிறே அவன் இருந்தான். ''தில்லைநகர் திருச்சித்திரகூடந்தன்னுள் அரசமர்ந்தான் அடிசூடுமரசையல்லால் அரசாகவெண்ணேன் மற்றரசுதானே'' என்ற ஸ்ரீகுலசேகராழ்வார் போலே கைங்கர்ய சாம்ராஜ்யத்தையே ஆளவெண்ணியவனிறே ஸ்ரீபரதாழ்வான். ஆகையாலிறே இவனை ''படியில் குணத்துப்பரதநம்பி'' என்றார் ஸ்ரீபெரியாழ்வார்.

போஜராஜன், பரதன் கைகேயி வீட்டிலிருந்து கோபத்துடன் வெளியேறியதை ''जननीतिविहीना मे जननीति स धर्मवित् । निरयात् निरयात् वीरो निरयात् इव सानुज: ।।'' *(முதல் நிரயாத் = நிலயாத் = கைகேயி வீட்டிலிருந்து) (ஜனமரியாதையை இழந்த தன் தாயின் வீட்டிலிருந்து, நரகத்திலிருந்து வெளியேறியதைப் போன்ற உணர்வுடன் கிளம்பினான்)* என்றான்.

மஹாகவி காளிதாஸன் பரதனின் விரக்தியாகிற மஹாகுணத்தை விளக்கும் விதம் இதோ:

स हि प्रथमजे तस्मिन् अकृतश्रीपरिग्रहे । परिवेत्तारमात्मानं मेने स्वीकरणात् भुव: ।।

(परिवेत्ता – மூத்தோனிருக்க மணம் செய்துகொள்ளும் இளையோன்). மூத்தோனிருக்க இளையோன் மணம் செய்துகொள்ளுவதைப் பெரும்பாபமாக தர்மசாஸ்த்ரம் கூறுகிறது. ராஜ்யத்தை அரசனின் மனைவியாகக் கூறுவது கவிமரபு. அயோத்திராஜ்யத்தை மணம் கொள்ளவேண்டியவன் ராமன். அவனிருக்க தான் முடிசூடினால் பரிவேத்தாவுக்கு வரும் பாபம் தனக்குமுண்டு என்று பரதன் கருதியதாகக் கவி கூறியுள்ளான். அதுவும் நிச்சயிக்கப்பட்டு நின்ற திருமணமன்றோ?

பரதனின் விரக்திபற்றி ஓர் மஹாகவி கூறியதில் அதிசயமில்லை. ஓர் வேடுவன் கூறினான் அன்றோ! அது கூறும் ஸ்ரீகம்பநாட்டாழ்வானின் பாடலிதோ:

தாயுரை கொண்டு தாதையுதவிய தரணிதன்னைத்
தீவினை என்ன நீத்துத் சிந்தனை முகத்தில் தேக்கிப்

போயினையென்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழாவரோ தெரியினம்மா!
(அம்மா - வியப்பிடைச்சொல்; கேழ் - சமம்; உதவிய - கொடுத்த)
இப்பாட்டு மிகவும் எளிமையானது. ஆகையால் அதிக விவரணம் தேவையில்லை. ஆயினும் இரண்டு விஷயங்களை இங்கு அவசியம் அறியவேண்டும்.

1. இச்சொல் ஸ்ரீகுஹப்பெருமாளுடைய வாயினின்று அனுபவபரீவாஹமாய் (ஆழ்வார்களின் பகவதனுபவம் பாசுரமாய் புறவெள்ளமிட்டபடி) வந்தது. முதலில் குஹன், பரதன் ராமனைக் கொல்லவருகிறானென தவறாய் எண்ணினான். (இதன் விவரணம் மேலே விளக்கப்படவுள்ளது.) ஆனால் பரதனோ தொழுதகையனாய், துவண்டவாயனாய், அழுதகண்ணினனாய் ராமனைப் பார்த்தவுடன் வெட்டப்பட்ட மரம்போல் பெருமாளின் திருவடிகளில் விழுகிறான். பகவானின் கண் தாமரையிலிருந்து ஓர் கங்கை பெருக்கெடுத்து பரதனின் ஜடையில் பட்டு பூமியில் ஓடுகிறாள். அன்று பெருமாளின் திருவடித்தாமரைகளிலிருந்து கங்கை பிறந்தாள். இன்று திருக்கண்தாமரைகளிலிருந்து கங்கை பிறக்கிறாள். அன்று சிவன் தலையில் தங்கினாள். இன்று பரதன் தலையில் தங்குகிறாள். அன்றும் இன்றும் பெருக்கெடுத்தோடிய நீரின் அளவில் வித்யாசமில்லை. என்னே கவிச்சக்ரவர்த்தியின் வர்ணனை! ஆம். இந்நிலையில் ஸ்ரீகுஹப்பெருமாளின் மனயெழுச்சியைத்தான் கம்பன் பாட்டாக அமைத்தான். அவன் பாடலிதோ:

உண்டுகொலுயிரென வொடுங்கினானுருக்
கண்டணன் நின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீகம் பொழிபுனலவன் சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே.

2. தாயுரை என்ற பாட்டிலுள்ள கடையடிக்கு ஆயிரம் ராமன்கள் ஓர் பரதனுக்கு சமமாகமாட்டார்கள் என்று பொருள் கொள்ளல் கூடாது. ராமனுடைய எல்லா குணங்களையும் ஆயிரம் மடங்காக்கினாலும் அது பரதனின் விரக்தியாகிற ஓர் குணத்திற்கு ஈடாகாது என்றே பொருள் கொள்ளவேண்டும். பாட்டில் அப்படிக்கூறப்படவில்லையே என எண்ணவேண்டாம். சொல்லைவிடப் பொருளிலே அதிகம் நோக்கம் வேண்டுமென்பர் மீமாம்ஸகர்கள். ராமனிடம் பழகி அவன் மேன்மை, நீர்மை முதலிய எல்லா குணங்களையுமனுபவித்து, சற்று முன்பே பார்க்கப்பட்ட பரதனின் நிலைகண்டு பேசும் குஹனின் பேச்சன்றோ

இது. பரதனின் விரக்தியாகிற ஒரே குணத்தைமட்டுமனுபவித்த குஹனின் பேச்சன்றோவிது. ஆகையால் இப்பாட்டிலுள்ள முதல் மூன்றடிகளினாலே காரணத்தைச் சொல்லி நான்காமடியில் தன் முடிவைக் கூறி அமைத்தான் கவி. இவ்வளவு விரக்தனான பரதன் திறத்தும் பலர் பொறுப்பரியனகள் பேசினார்களாகையாலே ஸ்ரீபரதாழ்வானே மிகவும் துன்பப்பட்டவன் என்பதைக் கூற இவ்வளவு கூறப்பட்டது.

ஸ்ரீபரதாழ்வான் ஶரணாகதி:

ஸ்ரீபரதனின் ஶரணாகதி பலித்தபடியை ஸ்வாமி தேஶிகன் அபயப்ரதானஸாரம் என்னும் நூலில் அருளிச்செய்துள்ளதை மிகவும் கூர்ந்து ஆராயவேண்டும். அந்த ஸ்ரீசூக்திகள் இதோ:

''முற்பாடரான தேவர்கள் பண்ணின ப்ரபத்திக்காக ராவணவதத்துக்கு எழுந்தருளுகையும், பிற்பாடரான ஸ்ரீபரதாழ்வான் பண்ணின ப்ரபத்திக்காக மீண்டு திருவபிஷேகம் பண்ணி ராஜ்யம் பண்ணுகையும் விருத்தமானபடியாலே ஸ்ரீபரதாழ்வானுக்கு ப்ரபத்திபண்ணியபோதே பரமபலம் சடக்கெனத் தலைக்கட்டிற்றிலையேயாகிலும், அவருக்குக் கைகேயிவரத்தாலே ப்ரஸக்தமான அவத்யம் தீரும்படி, 'மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போய் வானோர் வாழ' என்கிறபடியே அப்போது ஸாக்ஷாத்பலமான திருவடிகளுக்குப் ப்ரதிநிதியான ஸ்ரீசடகோபனாலே (ஸ்ரீபாதுகைகளாலே) ஸபலத்வம் சொல்லி, பின்பு பூர்வப்ரதிஜ்ஞாதமான தேவகார்யம் தலைக்கட்டினவாறே ஸ்ரீபுஷ்பகவிமானத்தாலே ஸாக்ஷாத்பலமான திருவடிகள் ஸ்வயமாகதங்களாய் அயத்நலப்தங்களானபடி (ஸ்ரீவால்மீகிபகவான்) சொன்னான்.'' மேலுள்ள ஸ்ரீசூக்திகள் மிகவும் எளிமையாயிருப்பதால் விவரணம் தேவையில்லை. பரதனின் ஶரணாகதி பொய்க்கவில்லை; சற்று தாமதமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இதன் ஸாரம் என எல்லோருமறியலாம். மேற்படி ஸ்ரீசூக்திகளில் ஆராய்ந்தறியவேண்டியவற்றை மட்டும் நோக்குவோம்.

ஸ்ரீபரதாழ்வான் இராமபிரானை நாடேற வற்புறுத்துகிறான். அதற்கு மனிதனாய் தன்னை நினைத்துத் தான் மீண்டு நாடேறுவதிலுள்ள தந்தைசொல் பொய்த்தல் முதலிய தோஷங்களைக் கூறி ஸ்ரீபரதாழ்வானையே ஆட்சிசெய்ய பெருமாள் வற்புறுத்துகிறார். ஸ்ரீபரதாழ்வான், பெருமாள் தன் முடிவைமாற்றிக்கொள்ளும் வரை பர்ணஶாலை வாயிலிலேயே விழுந்துகிடக்கப்போவதாகக் கூறுகின்றார். பெருமாள் அது தவறென்று உபதேஶம் செய்கிறார். அங்கு கூடியிருந்த ருஷிகளும் ராமனின் பேச்சை அங்கீகரித்து அதற்கு உடன்படுதலே

நலமென பரதனை வற்புறுத்துகின்றனர். ஏனெனில் அவர்கள் ராமனின் அவதாரப்ரயோஜனமாக இராவணவதத்தை அறிந்தவர்கள். பின்பு பரதனும் இராமன் சொல்லுக்கு உடன்படுகின்றான். ஆயினும் தான் அரசாளமுடியாதென்றும், இராமபாதுகையை முன்னிட்டே இராஜ்யம் நடத்தப்போவதாகவும் கூறி, பாதுகையைப் ப்ரார்த்தித்துப் பெற்று, பதினான்கு வருடம் கழிந்து மீண்டெழுந்தருளி பெருமாள் இராஜ்யத்தை ஸ்வீகரியாவிடில் அக்னிப்ரவேஶம் செய்வதாயும் கூறி தேரிலேறினான்.

ततः शिरसि कृत्वा तु पादुके भरतस्तदा । आरुरोह रथं हृष्टः शत्रुघ्नेन समन्वितः।।

''பரதன் (பெருமாளும் ருஷிகளும் செய்த உபதேசத்தை அங்கீகரித்த) பிறகு இராம பாதுகைகளைத் தலையில் தாங்கி ஸந்தோஷத்துடன் ஶத்ருக்னாழ்வானுடன் தேரிலேறினான்'' என்பது இதன் பொருளாகும். ''आरुरोह रथं हृष्टः - ஸந்தோஷத்துடன் தேரிலேறினான்'' என்பதிலிருந்தும் பெருமாள் பதினான்கு வருடம் கழித்து அயோத்திக்கு மீண்டெழுந்தருளாவிடின் அக்னிப்ரவேஶம் செய்வேன் என்று கூறியதையும் கொண்டு அவனே அவன் மனநிலையை மாற்றிக்கொண்டபின் அவன் ஶரணாகதி பலிக்கவில்லை என்ற பேச்சுக்கிடமேது? என்று நாமாகில் பதிலுரைப்போம்.

यदि त्वार्यं न शक्ष्यामि विनिवर्तयितुं वनात् । वने तत्रैव वत्स्यामि यथार्यो लक्ष्मणस्तथा ।।

''ஆர்யனான இராமனைக் காட்டிலிருந்து மீட்டுவரமுடியாமல் போனால் ஆர்யனான லக்ஷ்மணனைப்போலே காட்டிலேயே வாழ்வேன்'' என்றவனிறே மனம் மாறியுள்ளான். இந்த பதில் உசிதமாகத் தோன்றினாலும் ஸ்வாமி தேஶிகன் ஏன் இவ்வாறு பதிலுரைக்கவில்லை என்பதை ஆராய வேண்டும். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. மேற்கூறியபடி பதிலுரைத்தால் பெருமாள் ஏன் பரதனின் மனநிலையை மாற்றினார் என்பதற்கு பதிலுரைத்ததாகாது.

2. ஆழ்வார்கள் கூறிய பதிலையே (வழியையே) தாமும் கூறவேண்டுமென்ற திருவுள்ளம்.

தான் அயோத்திக்கு மீண்டால் அது தேவர்கள் செய்த ஶரணாகதியை நிறைவேற்றுவதற்குத் தடையாவது மட்டுமின்றி ஸ்ரீபரதாழ்வானுக்கும் அது கேடுவிளைப்பதாகும் என்றெண்ணியே ருஷிகளும் ராமனும் அவன் மனதை மாற்றினர் என்பதை ஸ்வாமி தேஶிகன், ''முற்பாடரான தேவர்கள் பண்ணின ப்ரபத்திக்காக ராவணவதத்துக்கு எழுந்தருளுகையும்'', மற்றும் ''அவருக்குக் கைகேயிவரத்தாலே ப்ரஸக்தமான அவத்யம் தீரும்படி'' என்ற

சொற்றொடர்களினாலே அருளிச்செய்தார்.

நல்ல பரமைகாந்திகளானவர்கள் பகவானிடம் அஹிதத்தை ஹிதமென்றெண்ணி ப்ரார்த்தித்தாலும் அதை எம்பெருமான் பூர்த்திசெய்யமாட்டான். நெருப்பைத் தொடவெண்ணும் குழந்தையைத் தாய் தடுப்பாள் அல்லவா? ''याचितोऽपि सदा भक्तैः नाहितम् कारयेद्धरिः । बालमग्नौ पतन्तं तु माता किं न निवारयेत्?।।'' என்பதை நோக்குக. ''பக்தர்கள் அஹிதமென்றறியாமல் தனக்கு அஹிதத்தை தொடர்ந்து ப்ரார்த்தித்தாலும் அதை எம்பெருமான் நிறைவேற்றிவைப்பதில்லை, நெருப்பைத் தொடவெண்ணும் குழந்தையைத் தாயானவள் தடுப்பதில்லையா?'' என்பது இதன் பொருளாகும்.

பரமைகாந்திகளும் தாம் ப்ரார்த்தித்து அதை பகவான் நிறைவேற்றாவிடில் அவனை நிந்திக்காது பெருமாள் நல்ல கருணையாலேயே தன் ப்ரார்த்தனையை நிறைவேற்றவில்லை என்றே எண்ணுவார்கள். மேலும் நாம் ப்ரார்த்தித்ததை பகவான் சற்று மாற்றி பூர்த்தி செய்தாலும் அது கருணாகரனுக்கு ஏற்றதே.

ஸ்ரீபெரியாழ்வாரும், ''மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போய் வானோர் வாழ'' என்றருளிச்செய்ததாலே ப்ரபத்தி வீணாகவில்லை என்றே அருளிச்செய்துள்ளார். இங்கு பணையம் என்னாதே வான் (உயர்ந்த) பணையம் என்றருளிச்செய்ததை நோக்கவும். உலகிலும் பணையம் (அடகு) வைக்கும்போது, அடகு வைக்கப்படும் பொருளின் மதிப்பு அடகுவைப்பவன் பெறப்போகும் பணத்தைவிட அதிகமாகவே இருக்கும். அவ்வாறே பணையம் என்ற சொல்லை உபயோகப்படுத்தியதால் ராமனை விட ராமபாதுகைக்கு மதிப்பு அதிகம் என ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். ராமனை விட ஓர் மரக்கட்டைக்கு ஏற்றம் அதிகமா? என எண்ணவேண்டாம். ஆம். ஏற்றம் அதிகம்தான். भरतः तदनु प्रार्थ्य लेभे लाभविदां वरः । काकुत्स्थपादुकाकारं महार्घं मकुटद्वयम् ।। என்றானன்றோ போஜராஜன். ராமன் மீண்டெழுந்தருளி அரசாண்டிருந்தால் பரதனுக்கு ஏற்பட்டிருந்த பழி தீர்ந்திராது. பாதுகை ஆண்டதால் பழி தீர்ந்தது. அதெங்ஙனே என்று பின்பு விளக்கப்படும். அதனாலேயே ஆழ்வார் பணையம் என்னாதே வான் (உயர்ந்த) பணையம் என்றருளிச்செய்தார்.

பரதனுக்கேற்பட்ட பழியை அறியும் முன் ஸ்ரீகுலசேகராழ்வார் தயரதன் நிலையிலே புலம்பிய பாசுரமொன்றை இங்கு அறியப்ப்ராப்தம்.

'பொன்பெற்றாரெழில் வேதப்புதல்வனையும் தம்பியையும் பூவைபோலும்
மின்பற்றாநுண்மருங்குல் மெல்லியல் என் மருகியையும் வனத்தில்போக்கி

நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு என்னையும் நீள்வானில் போக்க என்பெற்றாய்? கைகேசி! இருநிலத்தில் இனிதாகவிருக்கின்றாயே.'

(பொன்பெற்றார் - ப்ராம்மணர்களின் தனமான வேதத்தைப்பெற்றுள்ள வசிட்டன்; வேதப்புதல்வன் - வசிட்டனின் ஞானப்புதல்வனான இராமன்; மருகி - மருமகள்)

''உலகில் ஒரு பெண் பெறும் ஸந்தோஷமானது நல்ல கணவனுடனும் மக்களுடனும் வாழ்வதேயாம். ஆனால் இரு பிள்ளைகளையும், மருமகளையும் காட்டுக்கனுப்பி, நல்ல ஸாத்விகனான பரதனுக்கும் வீண்பழியை ஏற்படுத்தி என்ன ஸந்தோஷத்தைப் பெறமுயலுகிறாய், அடி பாபீ!'' என்று தயரதன் கைகேயியை ஏசுவதாய் அமைந்த பாசுரமிது.

பரதன் உயர்ந்தவனானாலும் கைகேயியின் மேல் கொண்ட வெறுப்பினால் ''நின்மகன்'' என்று தன் மகனை தயரதன் கூறியதாக ஆழ்வார் அருளிச்செய்தார். இப்பாசுரத்திலுள்ள ''நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு'' என்ற சொற்றொடரை திருவுள்ளம் பற்றியே ஸ்வாமி தேஶிகன், ''அவருக்குக் கைகேயிவரத்தாலே ப்ரஸக்தமான அவத்யம் தீரும்படி'' என்றருளிச்செய்தார் போலும். செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே!

கைகேயியுடன் சேர்ந்து திட்டம் தீட்டி இராமனைக் காட்டுக்கனுப்பிய பாபி என்றும் இராமனைக்கொல்ல நினைப்பவன் என்றும் பலபடியாக பரதாழ்வானைப் பலர் எண்ணியதை இராமாயணம் கொண்டு அறிவோம். தவறாக எண்ணாத சிலர் வார்த்தையும் தவறாக எண்ணியதாக நினைக்கும்படியும் அமைந்துள்ளதையும் பார்க்கலாம். அவற்றை முறையே அறிவோம்.

1. தயரதன் பேச்சு:

சக்ரவர்த்தி தன் மகனிடம் அரசை ஒப்படைக்க எண்ணி இராமனை அழைத்து அவனிடம் நாளை புஷ்ய நக்ஷத்திரம் கூடிய நல்ல நாளில் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போவதாகக் கூறுகின்றான். ''பரதன் ஊரிலில்லை. இத்தருணமே உன் அபிஷேகத்திற்கு ஏற்ற காலம் என்பதைப் பின்வருமாறு கூறுகின்றான்:

विप्रोषितश्च भरतो यावदेव पुरादितः । तावदेवाभिषेकस्ते प्राप्तकालो मतो मम ।।

மேல் வாக்கியத்தால் பரதனால் பட்டாபிஷேகத்திற்குத் தடங்கல் ஏற்படும் என தயரதன் எண்ணியுள்ளது புலனாகிறது. ஆனால் பரதன் மிகவும் நல்லவனென்பதையும் அவனே பின்வருமாறு கூறுகின்றான்:

कामं खलु सतां वृत्ते भ्राता ते भरतः स्थितः । ज्येष्ठानुवर्ती धर्मात्मा सानुक्रोशो जितेन्द्रियः ।।

ஆனாலும் ''किं तु चित्तं मनुष्याणाम् अनित्यमिति मे मतिः - மனிதனின் மனது

நிலையற்றது'' என்று தயரதன் கூறுவதிலிருந்து, தர்மாத்மாவான பரதன் மனதும் கூட மாறலாம் என்று பரதனை அவன் சந்தேகப்படுவதாயும் ஏற்படுகிறது.

முன் எடுத்துக்காட்டப்பட்ட ஸ்ரீகுலமோகரப்பெருமாள் பாசுரத்தில், ''நின்பற்றாநின்மகன்மேல்பழிவிளைத்திட்டு'' என்றுள்ளதால் தயரதனுக்கு பரதன்மேல் சந்தேகமில்லை என்பது புலனாகிறது. ஆயின் ''किं तु चित्तं मनुष्याणाम् अनित्यमिति मे मतिः'' என்ற வாக்கியத்தை தயரதன் கூறியதற்குக் காரணம், ''அதிக பாசம் வைக்குமிடத்தில் கேடு என்ன விளையுமோ என்ற பயமுண்டாகும்'' என்ற பழமொழிக்கேற்ப ராமனிடம் கொண்ட பொங்கும் பரிவால் பரதனை இவ்வாறு நினைத்தான் என்றே கொள்ளவேண்டும். ஸ்ரீபெரியாழ்வாரும் ஸர்வமோக்தனான எம்பெருமானுக்கு என் வருமோ? என்று வயிறுபிடித்து பொங்கும்பரிவாலே பல்லாண்டு பாடினார் அல்லவா? அல்லது பரதன் நேராக பட்டாபிஷேகத்திற்குத் தடையாகாவிட்டாலும் அவன் ஒரு நிமித்தமாகலாம் என தயரதன் எண்ணினான் போலும். ஏதேனுமாகுக. இங்கு ஒன்றை மட்டும் நாம் நோக்கவேண்டும். பரதன் தான் கேகயநாட்டிலிருந்தபோதே தன் தந்தை ராமனுக்குப் பட்டாபிஷேகம் பண்ண எண்ணியதை அறிந்து எவ்வளவு மனவேதனை அடைந்திருப்பான் என்பதைச் சிந்திக்கவும்.

2. மந்தரையின் பேச்சு:

தெளிந்த ஓடையை யானை கலக்குவதுபோல் ராமனிடம் மிக்கவன்பு கொண்டிருந்த கைகேயியின் மனதைக் கலக்கியவள் இக்கூனி. கூனுலாவிய மடந்தை கைகேயியிடம் கூறும் கொடுஞ்சொற்கள் இதோ:

भरतादेव रामस्य राज्यसाधारणाद्भयम् । तद्विचिन्त्य विषण्णास्मि भयं भीताद्धि जायते ।।
रामस्तु भरते पापं कुर्यादेव न संशयः ।

''ராமனுக்கடுத்து பரதனே பெரியோனாகையாலே பரதனிடமிருந்துதான் தனக்கு ராஜ்யம் கிடைக்காமல்போக நேரிடுமோ என்ற பயம் ராமனுக்கேற்படும். ஆகையால் அவன் பரதனுக்கு ஏதாவது தீங்கிழைத்தே தீருவான். உலகில் யாரிடமிருந்து ஒருவனுக்கு பயமேற்படுகிறதோ அவனை அழிக்க நினைப்பது இயற்கை. இதை எண்ணி எண்ணி நான் பயப்படுகிறேன்'' என்பது இதன் பொருளாகும்.

மேலும் லக்ஷ்மணமோத்ருக்னர்களால் ராமனுக்கு பயமேற்பட வாய்ப்பில்லை என்பதையும் கூனி பின்வருமாறு கூறுகிறாள்:

लक्ष्मणो हि महेष्वासो रामं सर्वात्मना गतः । शत्रुघ्नश्चापि भरतं काकुत्स्थं लक्ष्मणो यथा ।।

''முக்கரணங்களாலும் ராமனைக் குறித்து லக்ஷ்மணன்

பரதந்த்ரனாயிருக்குமாப்போலே ஶத்ருக்னன் பரதனைக் குறித்து பரதந்த்ரனாயிருக்கிறான். ஆகையால் இவ்விருவர் திறத்தில் ராமனுக்கு பயமேற்படவழியேயில்லை'' என்பது இதன் பொருளாகும்.

மேல் வாக்யங்களால் மந்தரை லக்ஷ்மணஶத்ருக்னர்களை தாஸ்யரஸமறிந்தவர்களாய் புகழ்ந்துள்ளது புலனாகிறது. ராமனைத் தவறாக புரிந்து கொண்டுள்ளாள் என்றும் தேறுகிறது. ஆனால் பரதனைப் புகழவும் இல்லை; தவறாக எண்ணவுமில்லை என்றே தோன்றும். ஆனால் இவ்வாக்யங்களை ஆராய்ந்து பார்க்கில் அவள் பரதனைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளாள் என்பதும் விளங்கும்.

1. தர்மத்திற்கு அஞ்சி நடப்பவரான பரதாழ்வானிடமிருந்தும் ஒருவனுக்கு (ராமனுக்கு) பயமேற்படும் என்று கூனி கூறியதே பரதனை அவள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது.

2. தான் இவ்வாறு கலகம் செய்து ராஜ்யத்தை வாங்கிக் கொடுத்தால் பரதன் அதை ஏற்பான் என்றெண்ணியதே அவள் பரதனை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது. ஆனால் ஒன்றுமட்டும் இங்கே ஆறுதலான விஷயம். உலகத்தில் கூனிபோன்ற கெட்டவர்கள் தவறாக எண்ணுவது ஸாத்விகனுக்கு அதிக வருத்தத்தை ஏற்படுத்தாது. உயர்ந்தோர் ஒருவர் தவறாக எண்ணினாலல்லவா மனம் பொடியாவது !

3. கைகேயியின் வார்த்தை:

பெற்ற தாயானவிவளும் தன் மகனைச் சான்றோன் என அறிந்துகொள்ளவில்லை. கொங்கைவன் கூனி சொற்கொண்டு எவ்வாறு இவள் வரம் கேட்டாள்? தன் மகன், தன் ஸ்வரூபமறிந்தவனாயிற்றே; மூத்தோனிருக்க முடிசூடானென்றிறே இவள் எண்ணியிருக்க வேண்டும். ஆகையால் கைகேயியும் பரதனைச் சரியாகப் புரிந்துகொள்ளாதவளே.

4. கௌசல்யையின் வார்த்தை:

பரதன் அயோத்தி திரும்பியவுடன் தன் தாயான கைகேயி வீடு சென்று, நடந்ததையெல்லாம் சொல்லக்கேட்டு, தன் தாயை நிந்தித்து, மூர்ச்சையுற்று விழுந்தான். பின்பு எழுந்து ஶத்ருக்னாழ்வானுடன் ஸ்ரீகௌசல்யையின் வீட்டை அடைந்தான். அவளிடம் நடந்தவற்றிற்கு மன்னிப்புக் கேட்கவே சென்றான். தவறு செய்யாதவனாயினும் நேர்கொடுநேர் கௌசல்யையின் முகம்காண வெட்கப்படுகிறான். சற்று தொலைவில் நின்றபடியே விம்மியழுகிறான். அழுகைக் குரலைக்கேட்டு பரதன் வந்துள்ளதையறிந்த கௌசல்யை மகனை ''அருகில் வா'' என்று அழைக்காமல், ''தீர்க்கதர்ஶியான கைகேயியின் மகன் வந்துள்ளான்;

அவனைக் காண விரும்புகிறேன்'' என்று கூறுகிறாள். அவள் பேச்சு இதோ:

आगतः क्रूरकार्यायाः कैकेय्या भरतः सुतः । तमहं द्रष्टुमिच्छामि भरतं दीर्घदर्शिनम् ।। மேலும், ''நீ நினைத்தபடி ராஜ்யத்தை அடைந்துவிட்டாயல்லவா? इदं ते राज्यकामस्य राज्यं प्राप्तमकण्टकम्'' என்றும் பேசினாள். மேலுள்ள கௌசல்யையின் வாக்கியத்தில் राज्यं என்ற சொல்லுக்கு अकण्टकम् என்று அடைமொழியிட்டுள்ளதை நோக்கவும். இவ்வடைமொழிக்கு ''முள்ளற்ற - எதிரியற்ற'' என்று பொருளாகும். அதாவது, இராமன் நாட்டிலிருந்தால் தன்னை அரசாளவிடாமல் ஏதாவது தொந்தரவு செய்துகொண்டேயிருப்பான் என்றெண்ணி தன் தாயிடம், ''நான் அரசாளவேண்டுமென்று மட்டுமின்றி இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்றும் வரம் கேள்'' என்று பரதன் கூறியிருக்கவேண்டும் என்று கௌசல்யை எண்ணியதை இது காட்டுகிறது. இது எவ்வளவு பெரிய பழி என்று நோக்கவும்.

உடனே பரதன் இக்கடுஞ்சொல் கேட்டு புழுவாய்த் துடிக்கிறான். தான் இராமன் காடேறக் காரணமாயின் பல பெரும்பாவங்கள் செய்தோர்க்கேற்படும் கதியெல்லாம் தனக்கும் ஏற்படட்டுமென சபதம் செய்கிறான். இராமாயணத்தில் இந்த ஸர்கத்தை எல்லாரும் வாசிக்கவேண்டும். வடமொழி தெரியாதார் ஸ்ரீகம்பனின் சொல்லால் அறியவும். நாத்திகர்கள் படித்தால் ஆத்திகனாகலாம்.

இது நம்பாடுவான் சபதம்போலே இருந்தது. இதுகேட்டு கௌசல்யை தன் தவற்றையுணர்ந்தாள். ஸ்ரீபரதாழ்வானைக் கட்டித்தழுவி உச்சிமுகர்ந்து மன்னிப்புக் கேட்கிறாள்.

5. சுமித்ரையின் மௌனம்:

மேற்படி கௌசல்யை பேசியபோது அவ்விடத்திலே சுமித்ரையுமிருந்தாள். கீழுள்ள ஸ்லோகத்தால் இது தெரியவருகிறது. तथैव क्रोशतस्तस्य भरतस्य महात्मनः । कौसल्या शब्दमाज्ञाय सुमित्रामिदमब्रवीत् ।। மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பார்களே. சுமித்ரையாவது கௌசல்யையிடம், ''பரதன் அப்படிப்பட்டவனிலன்; பழிக்காதே'' என்று கூறியிருக்கவேண்டுமிறே. ஆகையால் சுமித்ரையும் பரதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கூறத் தோன்றுகிறது. தன்னைத் தவறாக நினைத்தவள் தான் சபதமிட்டபின் மனம்மாறி கட்டியணைக்கும்படியாயிற்றென்றால், பரதனின் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கவேண்டும் என அறியலாம். அதாவது அவனுடைய சபத வார்த்தைகளும், அச்சமயத்திலவன் தோற்றமும் உடனே கௌசல்யையின்

மனதை மாற்றிற்றென்றால் அப்போதிருந்த பரதனின் மனோபாவத்தை அனுமானிக்கவும்.

6. அரசவையின் தீர்மானம்:

பரதாழ்வான் சக்ரவர்த்திக்கு ஈமக்கடன்களைச் செலுத்தினான். பதினான்கு நாட்கள் உருண்டன. அரசவை கூடிற்று. ''त्वमद्य भव नो राजा - நீயே உடனே எங்களுக்கு அரசனாகவேண்டும்'' என்று ஒரு மனதாகக் கூறிற்று. பரதனின் ஸ்வரூபத்தைக் கணிசித்து, ''உன்னுடன் நாங்களும் வருகிறோம். இராமனை மீட்டு வருவோம்'' என்றிறே அரசவை கூறியிருக்கவேண்டும்.

7. வசிட்டனின் வார்த்தை:

வசிட்டருக்கு பரதன் ஒருக்காலும் நாடாளான் என நன்கு தெரியும். மரவுரியை கைகேயி கொடுக்கும் போது வசிட்டர் மிகவும் கோபமுற்று பரமஸாத்விகனான பரதன் நாடாள இசையமாட்டான் என்றும் அவனுக்கும் ஓர் மரவுரியை தயாராக வைக்கும்படி மறைமுகமாகக் கூறியதையும் நோக்குக. ஆயினும் அவையில் ''पित्रा भ्रात्रा च ते दत्तं राज्यं निहतकण्टकम् । तद्भुङ्क्ष्व...'' என்று கூறினார். ''தந்தையாலும் தமையனாலும் கொடுக்கப்பட்ட அரசில் முடிசூடி அரசனாய் ஸந்தோஷமடைவாயாக'' என்றார்.

இது கேட்டு பரதன் மனமுடைந்தான். கூனி இவ்வாறு பேசலாம். வசிட்டன் பேசலாமோ? 'विललाप सभा मध्ये जगर्ह च पुरोहितम् (அவையில் அழுதான், அவையில் புரோஹிதனையும் நிந்தித்தான்'') என்றபடியே அழுது, வசிட்டனை ஏசிப் பேசினான். இழந்த பொருளுக்கீடாயிறே கூப்பீடிடுவதும்!

ஓர் தீரனான ஆண்மகனுக்கு, அதிலும் க்ஷத்ரிய வாலிபனுக்கு அழுகையே வராது. அதுவும் அவை நடுவே வரவே வராது. ஆசார்யனிடம் ஏதேனும் குறைகண்டாலும் அவரிடம் மர்யாதையுடனே இருந்து தனிமையிலே குறையை எடுத்துக்கூறித் திருத்துவது ஶாஸ்த்ர ஸம்மதம். அவ்வாறு கூறும் நிலையிலில்லாதோர் பகவானிடம் தன் ஆசார்யனிடம் ஏற்படவேண்டிய மாற்றத்தை வேண்டிப்பெறலாம். ஆனால் ஆசார்யனை ஏசுவதை ஶாஸ்த்ரம் அனுமதிக்கவேயில்லை.

அப்படியிருந்தும் அவை நடுவே பரதன் வசிட்டனை ஏசியது எப்படி நியாயமாகும்? என்கிற கேள்வி எழுகிறது. பரதன் ஶாஸ்த்ரமறிந்த தர்மிஷ்டனிறே. ஆகையால் தர்மிஷ்டனான தமையன் காடேறியதால்

ஏற்பட்ட மனவுலைச்சல் மஹாவீரனாயிருந்தும் அவையில் கோழைபோல் அழவைத்தது; புரோஹிதனை ஏசவைத்தது என்றே கொள்ளவேண்டும். அதாவது தன்னை மறந்து என்ன செய்கிறோம் என்றறியாத நிலையிலே பரதனிருந்ததையே இது காட்டுகிறது. வசிட்டர் இவ்வாறு கூறியதற்குக் காரணம் இந்நிலையை பரதன் அடைவான்; அது கண்டு அவன் பெருமையைப் பிறர் அறியட்டுமென்ற நோக்கத்தினாலேயாம்.

8. ஸ்ரீகுஹப்பெருமாள் வார்த்தை:

தூரத்திலிருந்து குஹப்பெருமாள், பரதாழ்வான் ஸேனையுடன் வருவது கண்டு கோபமடைகிறார். அங்கிருந்த வேடுவர்களிடம் உண்மையில் போர்புரிய பரதன் வருவானேயாகில் தான் பரதனைக் கொலைசெய்யப் போவதாகவும் கூறுகிறார். அது கூறும் ஸ்ரீகம்பனின் பாடலிதோ:

அஞ்சனவண்ணனென்னாருயிர் நாயகனாளாமே
வஞ்சனயாலரசெய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சரமென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடினாய்க்குகனென்றெனை ஓதாரோ?

(உஞ்சுதல் - பிழைத்தல்) என் அம்புகளுக்கு மிருகங்களின் உடம்பில் மட்டுமே நுழையும் ஶக்திமட்டுமா உள்ளது? பரதன் உடலிலும் நுழையும். நான் இராமனை அழிக்கவரும் பரதனை பிழைக்கவிட்டு அவன் அயோத்தி சென்றால் என்னை நன்றி கெட்ட நாய் என்று தானே உலகம் கூறும். ஆகையால் பரதனின் உடல் மட்டுமே அயோத்தி செல்லவேண்டும் என்கிறான்.

ஆனால் இவ்வாறாக குஹன் பரதனைத் தவறாக எண்ணியது பரதனுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஏனெனில் பின்பு பரதனை நல்லவனாக உணர்ந்த குஹன் அவனிடம் இராமனைவிட அதிகமான அன்பையே காட்டினான். ஆயினும் பலர் தன்னை நேரே பழிக்காவிடினும் மனதாலே தவறாக எண்ணியதை ஸ்ரீபரத்வாஜரிடம் பேசும்போது பரதன் வெளியிட்டதிலிருந்து அறியலாம்.

9. ஸ்ரீபரத்வாஜரின் வார்த்தை:

ஸ்ரீபரத்வாஜரின் ஆணையாலே பெருமாள் தம்பியொடு தாமொருவர் தன் துணைவி காதல் துணையாக சித்திரகூடம் சென்று இனிது வாழ்ந்துவந்தார். சித்திரகூடம் செல்லும் முன் பரதனும் ஸ்ரீபரத்வாஜரை வணங்கி நிற்கிறான். ஸ்ரீபரத்வாஜரோ ஒரு அரசன் தன் இருப்பிடம் வந்தால் அவனை ஶாஸ்த்ரம் நன்கு உபசரிக்கக் கூறுவதின்படி,

திருவுடைமன்னனான பரதனைக் கண்டு திருமாலைக் கண்டதுபோல் உபசரிக்கிறார். அவருக்கு பரதன் பட்டாபிஷேகம் செய்துகொள்ளவில்லை என நன்கு தெரியும். ஆயினும் அறியாதவர்போலே நடக்கிறார். அவர் வார்த்தை இதோ:

किमिहागमने कार्यं तव राज्यं प्रशासतः । एतदाचक्ष्व सर्वं मे न हि मे शुध्यते मनः ।।
कच्चिन्न तस्यापापस्य पापं कर्तुमिहेच्छसि । अकण्ठकं भोक्तुमना राज्यं तस्यानुजस्य च ।।

''நாட்டையாண்டுகொண்டிருக்கிற நீ ஏன் இங்கு வந்தாய்? என் மனதில் தெளிவில்லை. பாபமே அறியாத இராமனுக்குக் கேடிழைக்க வந்துள்ளாயா? நீ வந்துள்ள காரணத்தை விளக்குவாயாக!'' என்கிறார் ஸ்ரீபரத்வாஜர். இது கேட்ட பரதனின் கண்கள் குளமாகின்றன. இல்லையில்லை. ஆறாகின்றன. இல்லையில்லை. பொங்கும் கடலாகின்றன. யாரோ ஓர் பாமரன் தன்னை தவறாக எண்ணுவதற்கும் ஓர் பெரியமஹான் தவறாக எண்ணுவதற்கும் வித்தியாசம் உண்டல்லவா? பரதனின் பதிலிதோ:

''हतोऽस्मि यदि मामेवं भगवानपि मन्यते - தேவரீரும் அடியேனை தவறாக எண்ணியாயிற்றென்றால் நான் இறந்தவனானேன்'' என்றான். அதாவது தான் வாழ்வதைவிட சாவதே பொருத்தமுடைத்து என்று கூறுகிறான். பரதனின் பேச்சிலுள்ள अपि என்ற உம்மைத்தொகை தன்னைப்பற்றி நல்லவன் என்ற எண்ணம் பலருக்கில்லை என்கிற அவன் எண்ணத்தைக் காட்டுகிறது.

ஸ்ரீபரத்வாஜர் எல்லாமறிந்தவறாயிற்றே. பின்பு அவரும் ஏன் பாமரர்களைப் போலே பேசினார் என்று நாம் எண்ணலாம். அவர் பரதனின் பெருமையை வெளியிடவே அவ்வாறு பேசினார். ராஜோபசாரத்தை ஏற்காமல் பரதன் தன்னை சாதாரண விருந்தாளியாய் நடத்திக்கொண்டான். ராஜோபசாரத்தை ஏற்படுத்தினால்தானே அதை பரதன் விரும்பவில்லை என உலகத்திற்குக் காட்டமுடியும்? மேற்படி ஸ்ரீபரத்வாஜர் கேள்விகேட்கவேயிறே, பரதன் அது கேட்டு ''தேவரீருமா அடியேனைத் தவறாக நினைப்பது'' என்று அழ, அதுகண்டு அருகிருந்தாரெல்லாம் பரதனை அறியமுடிந்தது.

தான் பரதனின் பெருமையை வெளியிடவே, இராமனுக்குத் தீங்கிழைக்கச் செல்லுகின்றாயா? என வினவியதாக பரத்வாஜரே கூறுகிறார். அந்த ஸ்லோகம் இதோ:

जाने चैतन्मनस्थं ते दृढीकरणमस्त्विति । अपृच्छं त्वां तवात्यर्थं कीर्तिं समभिवर्धयन् ।।

ஆயினும் ஸ்ரீபரத்வாஜரின் இவ்விருவகைப்பட்ட பேச்சுக்களுக்கு இடைப்பட்ட காலத்து ஸ்ரீபரதாழ்வான் இருபாடெரிகொள்ளியின்

உள் எறும்பேபோல் துடித்திருப்பான் என்பது திண்ணம்.

10. இளையபெருமாள் பேச்சு :

பர்ணஶாலையருகிலே மிருகங்கள் பயந்து அங்குமிங்குமோடுகின்றன. பக்ஷிகள் கூச்சலிடுகின்றன. இதைப்பார்த்து பெருமாள் இளையபெருமாளிடம், ''யாரேனும் வேட்டையாட வந்துள்ளார்களெனத் தெரிகிறது. காரணமறிவாயாக'' என்கிறார். இளையபெருமாள் மரமேறி சுற்றும் பார்க்கிறார். சற்று தொலைவில் ஸேனை தெரிகிறது. ஸேனை அருகில் வர அது அயோத்தி ஸேனை என்பதும் புலனாகிறது. கோபம் பொங்க பெருமாளிடம் இளையபெருமாள் வார்த்தை இதோ:

सपत्न राज्यमिच्छंस्तु व्यक्तं प्राप्याभिषेचनम् । आवां हन्तुं समभ्येति भरतः कैकयीसुतः ।।

''ஏற்கனவே பட்டபிஷேகம்செய்துகொண்டுள்ள பரதன், நாம் உயிரோடிருந்தால் தான் அரசாள என்றாவது ஒரு நாள் பாதகம் ஏற்படுமென்றெண்ணி நம்மைக் கொல்ல வருகிறான்'' என்கிறார் இளையபெருமாள். இங்கு கௌசல்யாதேவியாரிட்ட ''कैक्याः सुतः'' (கைகேயியினுடைய புத்ரன்) என்ற அதே அடைமொழியை பரதனுக்கு இளையபெருமாளும் இட்டுள்ளதை நோக்கவும். மேலும், ''நம் விரோதியான பரதன் நெருங்கிவருகிறான். இவன் என்னால் கொலைசெய்யப்படவேண்டியவனே, அவனைக் கொலை செய்வதில் யாதொரு தவறுமில்லை'' என்றும் இளையபெருமாள் கூறுகிறார். संप्राप्तोऽयमरिर्वीर भरतो वध्य एव मे । भरतस्य वधे दोषं नाहं पश्यामि राघव ।। என்பது இளையபெருமாளின் வாக்யமாகும்.

11. சீதாப்பிராட்டியின் வார்த்தை:

மாயாவி மாரீசனின் ''ஹா சீதே! ஹா லக்ஷ்மண! '' என்ற போலியான குரல் கேட்ட பிராட்டி இளையபெருமாளை ராமனிடம் செல்லுமாறு இரக்கிறாள். ஆனால் இளையபெருமாளோ இராமன் கட்டளைப்படி பிராட்டியைத் தனியே விட்டுச்செல்லமுடியாதென்கிறார். பிராட்டி எவ்வளவு வலியுறுத்தியும் இளையபெருமாள் தன் முடிவை மாற்றிக்கொள்வதாகத் தெரியவில்லை. பிராட்டி ஓர் முடிவுக்கு வருகிறார். நடத்தை பற்றி அவதூறு பேசினால் அது ஓர் ஸாத்விகனுக்கு பொறுக்கமுடியாதாகையாலும், தன் மைத்துனர் பரம ஸாத்விகராகையாலும், உடனே இடம்பெயர்ந்து இராமனிடம் செல்வார் என்றெண்ணி, தன்னிடம் தவறான நோக்கிலேயே இளையபெருமாள் காட்டுக்கு உடன்வந்ததாக பிராட்டி பின்வருமாறு பழி கூறினாள்:

मम हेतोः प्रतिच्छन्नः प्रयुक्तो भरतेन वा । तन्न सिध्यति सौमित्रे तव वा भरतस्य वा ।। ''என் நிமித்தமாக நீயே காட்டுக்கு வந்தாயா? அல்லது பரதன் அனுப்பி வந்தாயா? நன்றாகக் கேள். உன் நினைவோ பரதன் நினைவோ பலிக்காது'' என்பது இதன் பொருளாகும். இங்கு இளையபெருமாளை மட்டுமின்றி பரதாழ்வானையும் பிராட்டி வம்புக்கிழுத்துள்ளதை நோக்குக.

எடுத்துக்கொண்ட தலைப்புக்கிணங்க அடியேன் இவ்வளவிலே நிறுத்திக்கொள்ளப் ப்ராப்தமாயிருக்க, தவறு செய்த காகத்தையே தன் கருணையால் காத்தவிவள், தவறே செய்யாத இளையபெருமாளை இப்படிப்பேசியதும், பாமரப் பெண் போலே வெஞ்சொல் கூறியதும் பொருந்துவது எப்படியென்ற எண்ணம் சிலர் மனதில் எழலாமென்றெண்ணி சற்று எழுத ஆசைப்படுகிறேன். உண்மையில் பிராட்டிக்கு இளையபெருமாளிடம் சிறிதும் கெட்ட அபிப்ராயம் கிடையாது. இராவணனிடம் பேசும்போதுகூட இளையபெருமாளுக்கு ''ஜிதேந்திரியன்'' என பட்டம் கட்டினவள் அல்லவா! இப்படிப்பட்ட கொடுமொழி காதில் விழுந்தாலொழிய தன் மைத்துனன் ஓரடியும் நகரமாட்டான் என்றெண்ணியே கூறியதாமிது. இந்நிலையில் கற்புடைய ஓர் பெண்ணின் நிலையிலே பிராட்டியைக் காணவும்.

தன் கணவனின் கூக்குரல் கேட்ட எந்த மனைவியும் எந்த உபாயத்தைச் செய்தாகிலும் அவனைக் காக்க முற்படுவது முறைதானே. இளையபெருமாள் சென்று தன் கணவனுடன் திரும்பிய பின் தான் கடுஞ்சொற்கள் பேசியதற்கான காரணத்தைக்கூறி மன்னிப்புக் கேட்க எண்ணிய பிராட்டிக்கு, ராவணன் தன்னை அபஹரித்துச் சென்றுவிட்டபடியால் அது முடியாமல் போனது.

மேல் கூறிய பதில் பொருத்தமுடைத்தாயின் ''பரதன் அனுப்பி வந்தாயா?'' என்ற பிராட்டியின் வார்த்தை எப்படிப்பொருந்தும்? என்ற கேள்வி எழும். இங்குதான் பிராட்டியின் அறிவுக் கூர்மையை நாம் அறியவேண்டும்.

பரதனை முதலில் தவறாக எண்ணி பின்பு அவன் நல்லெண்ணத்துடன் காட்டுக்கு வந்துள்ளதை அறிந்து தான் மிகவும் வருந்தினார் இளையபெருமாள். அதுமுதல் தன்னைவிட பன்மடங்கு உயர்ந்தவனாய் பரதனை நினைத்து வாழ்ந்துவரும் இளையபெருமாளிடம் பரதனால் அனுப்பப்பட்டு வந்தாயா? என்று கேட்டால் அது அவருக்கு அதிகம் நோவை உண்டாக்கும். உடனே அவ்விடம் விட்டுச்செல்வார் என்றே பிராட்டி அவ்வாறு பேசினாள். அதாவது தன் சொல் மிகவும் கொடுமையாய் இருக்கவேண்டுமென்றெண்ணியே பரதனால்

அனுப்பப்பட்டு வந்தாயா? என்று பிராட்டி கூறினாள். உண்மையில் பரதாழ்வான் அப்படிப்பட்டவன் என்ற திருவுள்ளத்தாலன்று.

பிராட்டியின் திருவுள்ளப்படியே இவ்வார்த்தை இளையபெருமாளின் திருவுள்ளத்தைப் புண்ணாக்கியதை, ஸீதையைத் தனியே விட்டு ஏன் இங்கு வந்தாய்? என்று கேட்ட பெருமாளிடம், இளையபெருமாள் ஸீதையின் வார்த்தையை ''विनष्टे भ्रातरि प्राप्तुं न च त्वं मामवाप्स्यसि । संकेतात् भरतेन त्वं रामं समनुगच्छसि ।।'' (பரதனும் நீயும் கொண்ட உடன்படிக்கையில் இராமனைப் பின் தொடர்கிறாய். உடன்பிறந்தவன் இறப்பினும் என்னை நீ அடைய முடியாது.) என்று அனுவதித்துக் காட்டியதிலிருந்தும் அறியலாம்.

12. பெருமாள் வார்த்தை:

இராவணவதத்திற்குப் பிறகு மீளுமளவிலே சிறியதிருவடியை பரதனின் இங்கிதமறிந்து வருமாறு பெருமாள் அனுப்பினார். பெருமாளின் வாக்கிதோ:

सर्वकामसमृद्धं हि हस्त्यश्वरथसंकुलम् । पितृपैतामहं राज्यं कस्य नावर्तयेन्मनः ।।
संगत्या भरतः श्रीमान् राज्यार्थी चेत् स्वयं भवेत् । प्रशास्तु वसुधां सर्वामखिलां रघुनन्दनः ।।
''எல்லா தேவைகளின் ஸம்ருத்தியுடனும் யானை, குதிரை தேர்படைகளுடன் கூடியதும் முன்னோர்களினால் ஆளப்பட்டதுமான இராஜ்யத்தை ஆண்டருசியால் பரதனே தொடர்ந்து ஆளவெண்ணினால் ஆளட்டும்'' என்பது இதன் பொருளாகும். இதை மேலோட்டமாகப் பார்க்கும்போது பதினான்கு வருடத்திற்குமுன் விரக்தனாயிருந்த பரதன் இன்று ருசிகண்ட பூனைபோல் இராஜ்யத்தைவிட மனமில்லாதவனாய் மாறியிருப்பானோ என்ற எண்ணம் பெருமாள் திருவுள்ளத்தில் தோன்றியுள்ளதாகத் தோன்றுகிறது. ஆனால் இது பெருமாளின் முன்பின் வாக்யங்களுக்கு முரணாவதால் ''भरतादन्यस्य कस्य - பரதன் தவிர்ந்த யாருக்குத்தான் மனம் மாறாது?'' என்று ஸ்ரீகோவிந்தராஜரால் உரை செயப்பட்டது. பரதன் தவிர்ந்த எல்லோர்க்கும் மாறும்; ஆனால் பரதனுக்கு மாறாது என்றபடி. இவ்வாறு ஓர் சொல்லைக் கூட்டி உரைசெய்ததற்குக் காரணங்களுண்டு. அவையாவன :

1. இராமன் பெருமாளாயிருப்பதால் அவர் பாமரர்களைப்போலே சரியாக எடைபோடாமல் பேசமாட்டார்.

2. இவ்வாறு சிறியதிருவடியிடம் பரதனின் நிலையை அறிந்துவருமாறு கூறிவிட்டு, அனுமன் திரும்பிவரும்வரை காக்காமல் பரதனிடம் எழுந்தருளியதிலிருந்து பரதன் தன் நிலையில் நின்று ஒருகாலும் திரியாதவன் என்பதை அவர் வெளிப்படுத்தியது.

3. பஞ்சவடியிலே ஸ்ரீபரதாழ்வானை துதித்த இளையபெருமாளுக்கு, கைகேயியின் நினைவுவர அவளை தூஷிக்கத்தொடங்கியவளவிலே, பெருமாள், தாயை நிந்திப்பதை நிறுத்தி, பரதனின் பெருமையப் பற்றி பேசச்சொல்லியதிலிருந்தும் பரதன் ஒருக்காலும் மாறுபவனில்லை என்பதை வெளிப்படுத்தினார்.

(ஸ்ரீகம்பநாட்டாழ்வான் இதை, இளையபெருமாள், வாலி ஸுக்ரீவனிடையேயிருந்த விரோதத்தைப்பற்றி இப்படியுமா அண்ணன் தம்பியரிடையே விரோதம் வரக்கூடுமென வியந்து சில வார்த்தைகள் சொல்ல, அப்போது இராமன் ''பின்பிறந்தோர்களெல்லாம் ஒத்தால் பரதன் பெரிதுத்தமனாதல் உண்டோ?'' என்று கூறியுள்ளதை நோக்குக).

4. பெருமாள் தான் முடிசூடியபின்பு யுவராஜாவாக இளையபெருமாளை நியமிக்க அவர் அதை ஏற்க மறுத்தார். பின் பரதனை பகவான் யுவராஜாவாக நியமித்தார். இதை வால்மீகி,

''सर्वात्मना पर्यनुनीयमानो यदा न सौमित्रिरुपैति योगम् ।

नियुज्यमानोऽपि च यौवराज्ये ततोभ्यषिञ्चद्भरतं महात्मा ।।'' என்று அருளிச்செய்தார். இங்கு உற்று நோக்கவேண்டியது ஒன்றுண்டு. பெருமாளின் தம்பியரில் பரதனே பெரியவர். பெரியோனிருக்க எப்படி இளையோனை பெருமாள் யௌவராஜ்யத்தை ஏற்க அழைக்கலாம்? என்று நமக்குத் தோன்றும். இளையபெருமாள் பதினான்கு வருடம் காட்டில் கஷ்டப்பட்டதால் யுவராஜாவாகி ஸுகம் பெறட்டும் என்று பெருமாள் எண்ணியிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இளையபெருமாள் பதினான்கு வருடம் காட்டில் செய்த பணிவிடையைத் தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற கைங்கர்யமாகவே எண்ணியவர் என பெருமாளுக்குத் தெரியாதோ? ''त्वयि वर्षशतं स्थिते'' ''अहं सर्वं करिष्यामि''– தேவரீர் பதினான்காண்டு களென்ன? நூறுவருடங்கள் காட்டில் எழுந்தருளியிருந்தாலும், தேவரீர் விழித்திருக்கும் போதும், திருக்கண்வளர்ந்தருளும் போதும் எல்லாப் பணிவிடையும் அடியேன் செய்ய வல்லேன்'' என்றவன் அன்றோ இளையபெருமாள். ஆகையால் அது காரணமாகமாட்டாது. பின்னை பரதனின் பெருமையை அவையில் வெளிப்படுத்தவேயாம். பரதனைத் தவிர வேறு யாராயினும் பெருமாள் இளையபெருமாளை யௌவராஜ்யத்தை ஏற்கச் சொன்னபோது நான் பெரியோனிருக்க இளையோனை எப்படி நியமிக்கலாம் என்று கேட்பார்கள். ஆனால் பரதாழ்வான் முகத்தில் கூட சற்றும் மாற்றமின்றியிருந்தார். அன்று காட்டிலே பரதாழ்வானைத் தவறாக எண்ணிய இளையபெருமாளைப்

பார்த்து, ''பரதனே! லக்ஷ்மணனுக்கு ராஜ்யத்தைக் கொடு. நீ இங்கிருந்து எனக்குப் பணிவிடை செய்''என்று நான்கூறினால்''அப்படியேயாகட்டும்'' என்பான் என்று கூறியதை மெய்ப்பித்துக்காட்டுவதைப்போலே இருந்தது பரதாழ்வானின் திருமுகம்.

ஆயின் அனுமனை பரதாழ்வானிடம் அனுப்பியதற்குக் காரணம் தான் மீண்டு வருகிற நற்செய்திகேட்டு ஸந்தோஷமுற்று தன் பாதுகைகளைத் தலையில் தாங்கி பரதன் எதிர்கொண்டழைக்க பரதாழ்வானுக்கு வாய்ப்பளிக்கவேயாம். இதனால் பரதாழ்வானின் ஸுத்தபாவத்தை உலகறியப்படுத்துவதே பகவானின் நோக்கமாகும். தான் சடக்கென பரதன் முன் நின்றால் அவன் பெருமையை உலகுக்கு அறியப்படுத்தமுடியாதன்றோ? மற்றும் தான் சடக்கென பரதன் எதிரே நின்றால் அதிக மகிழ்ச்சியால் அவன் உன்மத்தனாகாதிருக்கவே அவனுக்கு மகிழ்ச்சியான செய்தியை சிறிது சிறிதாக வழங்கவே பெருமாள் திருவடியை அனுப்பியதாகவும் கூறுவர்.

இது ஈறாக பெருமாள், பிராட்டி வார்த்தைகளை மேலோட்டமாகப் பார்க்கில் பரதனைத் தவறாக எண்ணியதாகத் தோன்றினாலும் உண்மையில் அவர்கள் தவறாக எண்ணவில்லை என்பது தெளிவாகிறது.

பரத்வாஜர் மற்றும் வசிட்டர் மனதில் பரதனைத் தூய்மையானவனாக அறிந்தும் அவன் பெருமையை வெளியிடவே மாறுபட்டுப் பேசினர். ஆயினும் இது பரதனின் மனதை சிலமணித்துளிகள் புண்படுத்தும்படியாயமைந்தது.

மற்றையோரெல்லாம் உண்மையிலேயே பரதழ்வானைத் தவறாக எண்ணியவர்களே.

இராமாயணத்தில் வரும் முக்கியமானவர்களில் யாரெல்லாம் பரதாழ்வானைத் தவறாக எண்ணினார்கள் என்பதை மட்டுமே இக்கட்டுரையில் அடியேன் காட்டியுள்ளேன். நாட்டில் வாழ்ந்த பாமரர்களில் எவ்வளவு பேர் தவறாக எண்ணியிருப்பார்களென்பது கண்டிப்பாக எண்ணிக்கையில் அடங்காது.

இனி மீண்டும் ''அவருக்குக் கைகேயிவரத்தாலே ப்ரஸக்தமான அவத்யம் தீரும்படி'' என்ற ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீசூக்திகளுக்குத் திரும்புவோம். இதை விளக்குவதன் பொருட்டே யாரெல்லாம் பரதாழ்வானைத் தவறாக எண்ணினார்கள் என்பது விளக்கப்பட்டது.

ஸ்ரீபரதாழ்வான் பெருமாள் மீண்டு வராமையால் நந்திக்ராமத்திலேயே பாதுகைகளை ஆராதித்துக்கொண்டு தானும் ஜடைமுடி தரித்து பாதுகைகளை முன்னிட்டு ஸ்ரீஶத்ருக்னாழ்வானின்

உதவியுடன் அரசாண்டார். இதனாலேயே பரதாழ்வானைத் தவறாக எண்ணியவர்களும் நாட்டுமக்களும் உண்மையை உணர்ந்தனர். ஸ்ரீபரதாழ்வானுக்கேற்பட்ட பழியும் நீங்கியது.

பெருமாள் பரதன் ப்ரார்த்தித்தவளவிலே நாட்டுக்கு மீண்டிருந்தால் உண்மையாக யாரும் பரதனை சரியாகப் புரிந்துகொண்டிருக்க மாட்டார்கள்.

ஸ்ரீபரதாழ்வான் பரமவிரக்தனாய் இருந்துவைத்தும் தவறாகப் பேசியவர்கள் பெருமாள் உடன் மீண்டிருந்தால் வேறுவிதமாகவும் பேசியிருப்பார்கள். அதாவது ''தாயுடன் சேர்ந்து நாடகமாடி, தமையனைக் காட்டுக்கனுப்பிய பரதன், தன் மேல் பழிவரக் கூடாது என்பதற்காக உண்மையில் பெருமாளை மீட்டுவரகாட்டிற்குச் சென்றதெல்லாம் வெறும் நாடகமே. எப்படியும் பித்ருவாக்யபரிபாலனம் ராமன் செய்தேதீர்வான் என்ற நம்பிக்கை பரதனுக்கிருந்ததால் ராமன் ஒருக்காலமும் திரும்பி வரமாட்டாராகையால் நாம் தான் அரசாளவேண்டிவரும். அராஜகமாக நாடு போய்விடக்கூடாதே என்பதற்காக பதவி ஏற்றுக்கொண்டதாகக் கூறிக்கொள்ளலாம் பின் ஜனங்கள் நம்மை தவறாக எண்ணமாட்டார்கள். நம்மேல் பழியும் வராது என்றெண்ணியே பரதன் பெருமாளை மீண்டுவரும்படி வேண்டினான். ஆனால் பரதனின் இந்த எண்ணத்திற்கு மாறாக நடந்துவிட்டது. பரதன் வேண்டினவளவிலேயே பெருமாள் நாடேறி முடிசூடிக்கொண்டார். வேறுவழியின்றி ராஜ்யத்தை இழக்கவேண்டியதாயிற்று. ஏன் காட்டுக்குச் சென்று பெருமாளை வேண்டினோமோ என்று பரதன் நினைத்துக்கொண்டிருக்கிறான். இப்போது வேறு ஏதவது வழியையும் ஆராய்ந்துகொண்டிருக்கவேண்டும்'' என்று நாகூசாமல் நாட்டுமக்கள் கூறியிருப்பர்.

ஆகையால் இவ்வளவால் பெருமாள் பரதாழ்வானின் ப்ரபத்தி ஸபலமாகும்படி தன் திருவடிநிலைகளை உடனே அனுக்ரஹித்து, அவன் பரமவிரக்தன் என்பதை உலகுக்குக்காட்டி, அவன் புகழை வளர்த்து, அவனுக்கு வந்த/வரவிருந்த பழியைத் தீர்த்து, தான் அவன் குறித்தகாலத்திலே மீண்டு எழுந்தருளி அவனுக்குத் தன் திருவடிகளில் கைங்கர்யத்தைக் கொடுத்து அவன் செய்த ப்ரபத்தியை பூர்த்திசெய்துவைத்தான் என்பது உணரத்தக்கது.

முடிவுரை:

பொதுவாக உலகில் நமக்கு நாம் செய்த தவற்றை சுட்டிக் காட்டினாலே பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. பரதாழ்வானோ தவறேதும் செய்யாதவர். பரம ஸாத்விகர். பலர் தன்னைத் தவறாக

எண்ணியபோதும், பேசியபோதும் கூட அதை தான் செய்த பாபத்தின் பயனாகவே எண்ணினார். தன் தாய், தந்தையின் மரணத்திற்குக் காரணமாயிருந்ததையும், ஓர் தர்மாத்மாவான தமையனைக் காட்டிற்கு அனுப்பக் காரணமாயிருந்ததை நினைத்தும், ஆசார்யன் தன்னை அரசாளக் கூறியபோதும் தன் நிலை மறந்து தாயையும் ஆசார்யனையும் ஏசியதையும் இராமாயணத்தில் காணலாம். அவர்களிடமும் பின்பு மிகுந்த மரியாதையுடனே நடந்தார். மற்ற யாரையும் ஏசவேயில்லை.

''सममतिः आत्मसुहृत् विपक्षपक्षे'' என்றும், ''நானேதானாயிடுக'' என்றும் பாகவதனுக்குக் கூறப்பட்ட அடையாளமுடையவராய், ''பரராலே பரிபவாதிகள் உண்டாம்போது தன் தேஹாதிகளைப் பற்றப் பரிபாவகர் சொல்லுகிற குற்றங்கள் தன் ஸ்வரூபத்தில் தட்டாதபடி கண்டு விஷாதாதிகளற்றிருக்கையும்...ஸ்வதந்த்ர போஷியாலே ப்ரேரிதராய் அவர்கள் பரிவாதாதிகள் பண்ணுகிறார்கள் என்று அவர்கள் பக்கல் நிர்விகார சித்தத்தையும்...'' முதலிய ஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்வநிஷ்டாபிஜ்ஞானாதிகாரத்தில் ஓர் ப்ரபன்னன் தனக்குள்ள நிஷ்டையைத் தானே அறிந்துகொள்ளக் கூறும் அடையாளங்களையெல்லாம் பரதாழ்வானிடம் நாம் கண்டு, அறிந்து அனுஷ்டிக்கப் ப்ராப்தம்.

மேலுள்ள ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ஸ்ரீசூக்திகள் சொல்லால் மிகவெளியதானாலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது மிகவும் கடினமானது. இதை உண்மையில் கடைபிடிப்பவன் தானேகூட தன் பெயருடன் ஆழ்வான் என்ற சொல்லைக் கூட்டிக்கொள்ளலாம். ஆனால் கண்களையிழக்கக் காரணமாயிருந்தவனுக்கும் மோக்ஷமளிக்கும்படி வரதனை வேண்டின கூரத்தாழ்வானைத் தவிற வேறொருவனுக்கும் இது சாத்யமல்ல. ஆனால் ஓரளவாவது அந்நிலையை அடைய நாமும் ஆசைப்படலாமே!

।। शुभं भूयात् ।।

சிறை இருந்தவள் ஏற்றம்

உலகில் நல்வாழ்க்கைக்கு ஓர் ஆண்மகனுக்கு நல்ல மனைவியமைவதும், அவ்வாறே ஓர் பெண்ணிற்கு நல்ல கணவன் அமைவதும் மிகவும் இன்றியமையாததொன்றாகும். கணவன் மனைவியர் மனம் ஒத்தவர்களாகயிருந்தால்தான் நல்ல ஸந்ததியை உருவாக்க முடியும். ஆகையினாலேயே மனம் ஒத்த தம்பதிகளைப் புலவர்களும் போற்றுகின்றனர்.

''यज्ञो गन्धर्वः तस्य दक्षिणा अप्सरसः'' என்று வேதமும் யாகத்தை கந்தர்வனாகவும் தக்ஷிணையை அப்ஸரஸாகவும் கூறிற்று. மஹாகவியும் திலீபனுக்கு ஸுதக்ஷிணை மனைவியானதை ''अध्वरस्येव दक्षिणा'' (வேள்விக்குத் தக்கணை போல்) என்று புகழ்ந்தான்.

இனி திவ்யதம்பதிகளைப் பற்றிப் பார்ப்போம்.

இவர்கள் நம் எல்லோர்க்கும் தாய்தந்தையராவார்கள். பிராட்டியை ரூபத்தாலும் அபிமதத்தாலும் எம்பெருமானுக்கு ஒத்தவள் என எம்பெருமானார் கத்யத்ரயத்தில் அருளிச்செய்தார்.

பகவான் தர்மத்தை நிலைநாட்ட அவதரிக்கும் போதெல்லாம் பிராட்டியும் உடன் அவதரிக்கிறாள் என ''राघवत्वेऽभवत् सीता रुक्मिणी कृष्णजन्मनि । अन्येषु चावतारेषु विष्णोरेषाऽनपायिनी ।।'' (பகவான் ராமனான போது ஸீதையாயும், கிருஷ்ணனானபோது ருக்மிணியாயும் பிறக்கிறாள். எல்லா அவதாரங்களிலும் பிராட்டி பகவானைப் பிரியாமல் அவதரிக்கிறாள்.) என்று ஸ்ரீபராஶரரும் அருளிச்செய்தார். ''நின்படிக்கெல்லாம் தன்படியேற்க அன்புடன் நின்னோடவதரித்தருளி'' என்றும், ''यद्भावेषु पृथग्विधेष्वनुगुणान् भावान् स्वयं बिभ्रती यद्धर्मैरिह धर्मिणी विहरते नानाकृतिर्नायिका'' (உலகமெனும் நாடகமேடையில்) பகவான் எந்தெந்த வேடமிட்டாலும் அதற்குத் தக்க வேடத்தைப் பிராட்டியும் புனைகிறாள் என்றும் ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்தார்.

ஆயினும் எல்லா அவதாரங்களைக்காட்டிலும் ஸீதையாக அவதரித்தபோதே பிராட்டி படாதனபட்டாள் என்பது எல்லோருமறிந்ததே. ஆகாயமார்கத்தில் திரிபவர்களாலும் காணமுடியாதபடி வளர்க்கப்பட்ட ஸீதை, தன் கணவன் தாதைபணியால் அரசொழிந்து, பொன்னகரம் பின்னே புலம்ப வலம்கொண்டு, மன்னும் வளநாடு கைவிட்டு, மாதிரங்கள் மின்னினுருவில் விண்தேர் திரிந்து வெளிப்பட்டு, கல்நிறைந்து தீந்து கழையுடைந்து கால்சுழன்று, பின்னும் திரைவயிற்றுப்

பேயே திரிந்துலவா கொன்னவிலும் வெங்கானத்தூடு கொடுங்கதிரோன் துன்னுவெயில்வறுத்த, வெம்பரல்மேல் பஞ்சடியால் மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்கும் அன்னநடைய அணங்கு நடந்தாள் என்று ஸ்ரீகலியனும் அருளிச்செய்தார்.

ஆயினும் இதைவிட அவள் பத்துமாதம் அசோகவனத்திலேபட்ட துன்பம் ஓர் குழந்தை பத்துமாதம் தாய் வயிற்றில் படும் துன்பத்தைவிடவும் பன்மடங்கு கொடிதாகும்.

காட்டுக்கு நடத்தல் கொடியதாயினும் இராமனுடன் வாழ்ந்ததால் அது சஹித்துக்கொள்ளமுடிந்தவொன்றாகும். ஆனால் அஶோகவனத்திலே இராமனைவிட்டு இருந்ததுடன் ராக்ஷஸிகளாலும் துன்பமுற்றிருந்தாள். ஆகையாலேயே ஸ்ரீமத்ராமாயணம், ''காடு நடந்தவள் ஏற்றம்'' கூறியதாகக் கூறாமல் ''சிறையிருந்தவள் ஏற்றம்'' கூறியதாக ஸ்ரீபிள்ளை உலகாசிரியர் அருளிச்செய்தார்.

ஸ்ரீவால்மீகி பகவான் தன் காவ்யத்திற்கு இராமாயணம் என்று திருநாமம் சூட்டி பின்பு அதன் பொருளை விளக்குங்கால், ''रामायणं कृत्स्नं सीतायाः चरितं महत्'' *(ஸீதையின் சரித்திரம் இராமாயணம் முழுவதிலுமே பேசப்பட்டுள்ளது)* என்று இராமாயணம் முழுவதுமே ஸீதையைப்பற்றியே பேசுவதாக அருளிச்செய்தான். ''रामस्य अयनम् = रामायणम् *(ராமஸ்ய அயனம் = ராமாயணம்) ராமனின் சரிதம்''* என்பதுடன், ''रामायाः अयनम् = रामायणम् *(ராமாயா: அயனம் = ராமாயணம்) ஸீதையின் சரிதம்''* என்றும் பொருள்படும்படி தன் காவ்யத்திற்கு பெயரிட்டான். *(*रामा = सीता *=சீதா)* रामा *என்ற சொல்லை ஸீதையைக்குறித்து,* ''विरराम रामा'' *(விரராம ராமா) என்று உபயோகித்தும் காட்டினான்.*

ஸ்ரீபராஶரபட்டரும் ஸ்ரீகுணரத்னகோசத்தில், ''श्रीमद्रामायणमपि परं प्राणिति त्वच्चरित्रे *ஸ்ரீமத்ராமாயாணமும் உன் சரிதத்தைக் கூறுவதினாலேயே உயிர்பெற்றுள்ளது''* என்று அருளிச்செய்தார். பிராட்டியின் பெருமை பேசாமல் ஸ்ரீமத்ராமாயணம் அமைந்திருக்குமானால் அது உயிரற்ற உடலுக்கிணையாய்ப் போந்திருக்குமென ஸ்ரீபட்டரின் திருவுள்ளமாகும். ஸ்ரீபட்டரின் ஸ்ரீகுணரத்னகோசத்திலுள்ள ஓர் ஶ்லோகத்தை உட்கொண்டே இந்த வ்யாசம் எழுதப்படுவதால் அதன் பொருளறிவோம்.

मातर्मैथिलि ! राक्षसीस्त्वयि तदैवार्द्रापराधाः त्वया
रक्षन्त्या पवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठी कृता ।
काकं तं च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सा नः सान्द्रमहागसः सुखयतु क्षान्तिस्तवाकस्मिकी ।।

(தாயே! மைதிலி! நலிந்து கொண்டிருந்த ராக்ஷஸிகளை (உன் எதிரிலே மஹாவிஶ்வாசத்துடன் பேசிய திரிஜடையின் வார்த்தையைக் கேட்டு) அனுமனிடமிருந்து காப்பாற்றிய ஈரநெஞ்சு படைத்த உன் செயல், சரணம் என்று கூறி காலில் விழுந்த விபீஷணனையும், காகத்தையும் காப்பாற்றிய இராமனின் கோஷ்டியை, மிகவும் தாழ்த்தியது. அப்படிப்பட்ட உன் நிர்ஹேதுகக்ருபை பாபியான எங்களுக்கு சுகம் அளிக்கட்டும்)

காகாஸுரன் மூவுலகும் தன் பிழையைத் தானே சாற்றி அபயம் வேண்டினான். எல்லோரும் கதவடைத்தனர். வேறுவழியின்றி பெருமாள் திருவடியிலேயே விழுந்தான். ''त्राहि त्राहि'' (காப்பாத்து காப்பாத்து) என்று காகாஸுரனைக் காக்குமாறு பிராட்டி வேண்ட, ராமன், அவன் செய்த தவறுக்காக ஓர் கண்ணைமட்டும் வாங்கி உயிரை வாங்காமல் காத்தார். ஸ்ரீவிபீஷணாழ்வான், ''त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः'' (மனைவியையும் மக்களையும் துறந்து இராமனைச் சரணடைந்தான்) என்கிறபடியே மனைவி மக்களைத் துறந்து ராமனை சரணமடைந்தான்.

''सर्वलोकशरण्याय राघवाय महात्मने। निवेदयत मां क्षिप्रं विभीषणमुपस्थितम् ।।'' *(அனைவருக்கும் புகலான மஹாத்மாவான இராமனிடத்தில் விபீஷணனான என்னை (என் ஆத்மாவை) சமர்ப்பியுங்கள்) என்றும் வேண்டினான். அவனைச் சேர்த்துக்கொள்ளலாமா?வேண்டாமா? என ஓர் பெரும்விவாதமே நடந்தேறியது. விபீடணன் ஆகாயத்திலேயே காத்துக்கிடந்தான். சேர்த்துக்கொள்ளவேண்டாமென்றவர்களையும்* இசைவித்தபின்பே பெருமாள், ''सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते । अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतं मम।।'' *என்று அபயமளித்தார். ''ஒருகால் தன்னை ஶரணமாக அடையுமனைவருக்கும் உனக்கடிமையாகின்றேன் என்கின்ற அனைவருக்கும் அனைவரிடமிருந்தும் அபயமளிக்கிறேன்'' என்பது இதன் பொருளாகும்.*

ராக்ஷஸிகள் ராவணனாலே ஸீதையைப் பாதுகாப்பதற்கும், கொடுஞ்செயல்களால் ஸீதையின் மனதை மாற்றுவதற்காகவும் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களில் திரிஜடையுமொருவள். அவள் ஓர் நாள் கனவு காண்கிறாள். அதில் ராமன் வெற்றிவாகைசூடி பிராட்டியுடன் அயோத்திக்குச்செல்கிறான். இராவணன் அழிகிறான். உடனே அவள் மற்ற ராக்ஷஸிகளிடம், ''நாம் ஸீதையை அபயம் வேண்டுவோம்; நாம் பலவாறு இவளைக் கொடுமைப்படுத்தியிருந்தாலும், கருணையே வடிவெடுத்த இவளால் நம்மைக் கைவிட இயலாது, ராகவனிடமிருந்து இவள் நம்மைக் காப்பாற்றுவாள். இதில் சந்தேஹமே வேண்டாம்'' என மஹா விஶ்வாசத்துடன் கூறுகிறாள். இதை திருச்செவிசாற்றிய

பிராட்டி அவர்களை ரக்ஷ்யவஸ்துவாக ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கிறாள். ராக்ஷஸிகள் சிறு தண்டனையும் பெறவில்லை. காலம் தாழ்த்தப்படாமல் உடனேயும் அபயம் பெற்றனர். ஆகையால் ராமனின் அபயப்ரதானத்தையும் ஸீதையின் அபயப்ப்ரதானத்தையும் ஒப்பிட்ட ஸ்ரீபட்டர், ஸீதையின் செயலால் ராமனின் கோஷ்டி மிகவும் தண்ணியதானதாக அறிவித்து, அப்படிப்பட்ட பிராட்டியின் பொறுமையாகிற பெருங்குணம், தவறு செய்வதையே நியதமாகக்கொண்ட நம்மை ஸுகமானவர்களாக ஆகட்டும் - அதாவது நம்மைப் பாபத்திலிருந்து விடுவிக்கட்டும் என வேண்டுகிறார் மேல் ஸ்லோகத்தில்.

மற்றும் நோக்கவேண்டிய ஒன்றிங்குண்டு. பெருமாள் ''सर्वभूतेभ्यः'' என்று கூறியதற்கு ''அனைவர்க்கும்'' என்றும் ''அனைவராலும்'' என்றும் இரண்டு பொருள்களுண்டு. திரிஜடை, ''अलमेषा परित्रातुं राघवात् राक्षसीगणम्। - இவள் ராகவனிடமிருந்து ராக்ஷஸிகளின் கூட்டத்தைக் காக்கவல்லவள்'' என்று கூறினாள். அதன்படியே எல்லா ராக்ஷஸிகளுக்கும் அபயமளித்து ''அனைவர்க்கும்'' என்பதை நடத்திக்காட்டினாள்.

''அனைவராலும்'' என்ற பகவானின் சொல்லைப் பிராட்டி நடத்திக்காட்டியதை அறிவோம். ராக்ஷஸிகள் ராகவனிடமிருந்துதான் அபயம் கேட்டனர். ஆனால் பிராட்டியோ ராகவனிடமிருந்தும், ராவணனிடமிருந்தும், ஹனுமனிடமிருந்தும் ராக்ஷஸிகளைக் காப்பாற்றினாள். ராமனிடமிருந்து காப்பாற்றியதை எல்லோருமறிவோம். மற்றதை நோக்குவோம்.

1) ராவணனிடமிருந்து ராக்ஷஸிகளைக் காத்தது:

அசோகவனத்திலிருந்த காவலில் நியமிக்கப்பட்ட ராக்ஷஸிகளைக் குறித்து ராவணனின் ஆணை இதோ:

''यथा नेमां पुमान् स्त्री वा सीतां पश्यत्यसंमतः ।'' ''अज्ञानात् यदि वा ज्ञानात् न तस्या जीवितं प्रियम् ।'' ''ஓர் பெண்ணோ ஆணோ என் அனுமதியில்லாமல், அறிந்தோ அறியாமலோ உங்கள் காவல் சோர்வால் ஸீதையைப் பார்க்க நேர்ந்தால் ப்ரியமான உங்களுயிர் உங்களுடையதல்ல'' என்பது இதன் பொருளாகும்.

சிறிய திருவடி பிராட்டியுடன் பேசுகிறார். பின்மாலை நேரம். தூக்கக்கலக்கத்திலிருந்து வெளிவந்த ராக்ஷஸிகள் ஸீதையை, ''யாரவன்? அவனிடம் என்ன பேசினாய்?'' என வினவினர். பிராட்டியோ அனுமனைத் தனக்குத் தெரியாது என்றும் தான் அவனிடம்

பேசவில்லை என்றும் பொய் கூறினாள்.பிராட்டியின் பதில் இதோ:
''अहिरेव ह्यहेः पादान् विजानाति न संशयः ।।
अहमप्यस्य भीतास्मि नैनं जानामि कोन्वयम् । वेद्मि राक्षसमेवैनं कामरूपिणमागतम् ।।''
(இதன் பொருளாவது: பாம்பின் கால் பாம்பறியும். இவனை இன்னாரென்றறியேன். இவனை வேண்டும் உருக்கொண்டுவந்த ராக்ஷசனாகவே நான் பார்க்கிறேன். நானும் இவனிடம் பயப்படுகிறேன்.) பிராட்டி உண்மையைக் கூறியிருந்தாலும் அவளுக்கு கேடேதுமேற்பட வாய்ப்பின்றியிருக்க, பொய் கூறியது, ராக்ஷஸிகளை ராவணனிடமிருந்து காக்கவேயாம். இவள் உண்மை கூற, ராக்ஷஸிகளும் அவற்றை அப்படியே ராவணனிடம் முறையிட்டால், காவல் சோர்வைக் காரணமாக்கி ராவணன் அவர்களைக் கொல்ல வாய்ப்புள்ளதாலாம்.

2) அனுமனிடமிருந்து ராக்ஷஸிகளைக் காத்தது:

ராவணவதமான பின்பு திருவடி சோபனம் சொல்ல அசோகவனம் வருகிறார். ஆங்குள்ள பிராட்டியை சித்ரவதை செய்துள்ள ராக்ஷஸிகளைக் கண்ணுற்று கோபமுற்று, அவர்களை நலிய பிராட்டியின் அனுமதியைக் கோருகிறார். அப்போது திருவடியைப்பார்த்து பிராட்டியின் பேச்சிதோ:
''राजसंश्रयवश्यानां कुर्वन्तीनां पराज्ञया । विधेयानां च दासीनां कः कुप्येत्? वानरोत्तम !।।''
(இதன் பொருளாவது: விதேயர்களாயும், அரசனையண்டி வாழுபவர்களாயும், தாஸிகளாயுமுள்ளவர்கள் அரசனின் கட்டளைப்படி நடப்பார்களேயானால், அவர்களிடம் கோபம் கொள்ளலாமோ?)

மேலுமவள், தன்னை பாபம் செய்த பாமரப் பெண்ணைப்போலே எண்ணி பேசும் பேச்சிதோ:
''भाग्यवैषम्यदोषेण पुरा दुश्चरितेन च । मयैतत् प्राप्यते सर्वं स्वकृतं ह्युपभुज्यते ।।''
(இதன் பொருளாவது: முன்செய்த முழுவினையால் என்னால் இத்துன்பமடையப்பட்டிருக்கிறது. மனிதர்கள் தான் செய்த வினையைத் தானே அனுபவிக்கிறார்கள்!)

மேலுமவள் கூறும் சரம ஸ்லோகமிதோ:
''पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम! । कार्यं कारुण्यमार्येण न कश्चिन्नापराध्यति ।।''
(இதன் பொருளாவது: (உன் நினைவால்) அவர்கள் பாபிகளாகவுமாம்; (என் நினைவால்) அவர்கள் புண்யவான்களாகவுமாம்; ஆர்யர்கள்-வித்வான்கள் பழிதீர்த்துக் கொள்ளார்கள்; கருணையே காட்டுவர்; (நெல்லுக்கு உமியுண்டு; நீருக்கு நுரையுண்டு; புல்லிதழ் பூவுக்குமுண்டு; தூதுவனாய் வந்து ஊரெரிப்பாருண்டோ? பெருமாள் சன்னிதியிலே மானை ஆசைப்படுவாருண்டோ? 'அகலகில்லேன்

இறையும்' என்பவளைப் பத்து மாதம் பிரிந்திருக்கலாமோ? - (தவறில்லாதவற்றையெல்லாம் தவறாகக் காட்டுகிறாள் காண்மின்!) தவறு செய்யாதார் யாருளரிவ்வுலகில்?)

பிராட்டி திருவாய்மலர்ந்தருளிய மூன்று ஸ்லோகங்களை மட்டுமடியேன் கூறியுள்ளேன்; எல்லா ஸ்லோகங்களையும் பாராயணம் செய்யும் போது அவை கல் நெஞ்சையும் உருக்கும். ப்ரபத்தியில் நம்பிக்கை பெறாதார் இந்த சர்கத்தை அவசியம் பாராயணம் செய்யவேண்டும். இதுகூறும் கம்பனின் கவியமுதமிதோ:

யானிழித்த வினையினினிவ்விடர்
தானடுத்தது தாயினுமன்பினோய்!
கூனியிற்கொடியாரலரேயிவர்.
போனவப்பொருள் போற்றலை புந்தியோய்!

இப்பாடலின் பொருளாவது: பெற்ற தாயினும் என்னிடம் அதிக அன்புகொண்டவனே! தேர்ந்தஅறிவுடையவனே! நான்செய்ததீவினையின் பயனாகவே எனக்கு இத்துன்பம் வந்துள்ளது; அதற்கு இவர்கள் ஓர் நிமித்தமே; இவர்கள் கூனியைவிடக் கொடியவர்கள் அல்லரே?

இப்பாடலில் கூறப்பட்டவையெல்லாம் அடியேன் எடுத்துக் காட்டிய வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டவையே. ''கூனியிற்கொடியாரலரேயிவர்'' என்றது மட்டும் வால்மீகியால் கூறப்படாது கம்பனால் கூறப்பட்டுள்ளது. வால்மீகி கூறாததைக் கூறினான் எனத் தள்ளாமல் அவனின் நோக்கத்தை ஆராய்ந்தால் மிகவும் ரசமாயிருக்கும்.அதாவது, ஜனகன் ஸஹதர்மசரி என ஸீதையை ராமனுக்கு மணம் முடித்தபோது கூறினான். அதாவது ஸஹ-சமானமான-ஒரே தர்மத்தை அனுஷ்டிப்பவளாகக் கூறினான். அதாவது ராமனின் தர்மமே பிராட்டிக்கும் தர்மமென்றபடி. அவ்வாறாயின், கூனியின் கொடுந்தொழிலினாலேயே எல்லா தீமைகளும் (தான் சிறைவாசம் பெற்றதுமுதல்) நடந்தேறியிருக்க, அந்த பெரும்பாபியான கூனியையே என் கணவன் ஹிம்சிக்காதபோது, அவன் மனைவி என்று பெயர்பூண்டு, சிறிய தவற்றை, அதுவும் ஏவலால் செய்த இவர்களைத் தண்டித்தல் முறையாகாது என்ற பிராட்டியின் திருவுள்ளத்தைக்காட்டவே கம்பன், ''கூனியிற் கொடியாரலரேயிவர்'' என்றான். ''लघुतरा रामस्य गोष्ठी कृता'' (இராமனுடைய கோஷ்டி தாழ்த்தப்பட்டது) என்ற ஸ்ரீபட்டரின் ஸ்ரீசூக்தி ஆழ்ந்த பொருளுடைத்து எனக் காட்டவே இவ்வளவு விவரிக்கப்பட்டது.

அயோத்தியில் வாழ்ந்த பாமரப்பெண்கள், தங்கள் கணவர்களிடம்,

''युष्माकं राघवोऽरण्ये योगक्षेमं विधास्यति । सीता नारीजनस्यास्य योगक्षेमं करिष्यति ।।''
(ஆண்களான உங்களுக்கு யோகக்ஷேமத்தை இராமன் கொடுப்பான். பெண்களான எங்களுக்கு யோகக்ஷேமத்தை ஸீதை கொடுப்பாள்) என்றனர். அவர்களுக்கு மட்டுமின்றி சிறையில் வாழ்ந்த பல பெண்களின் யோகக்ஷேமத்தை எண்ணி தான் சிறையிருந்த பிராட்டியின் ஏற்றம் மனதாலும் எட்டமுடியாததே.

இப்படி சிறையிருந்தவளுக்குக்கிடைத்தவல்லபரிசு, ''ராவணனால் தொடப்பட்டவள்; மற்றொருவன் வீட்டில் தங்கியவள்'' என்ற பட்டப்பெயர்களேயாம். (பெருமாளுக்கு ஸீதையிடம் தவறான எண்ணமில்லாவிடினும், பிரிந்ததற்குக் காரணத்தை வல்லார் வாய் கேட்டறிக.)

பதிவ்ரதையாய் பிறர்க்காக சிறையிருந்தவள், தன்னை மெய்ப்பித்துக்கொள்ள நேரிட்டபோது, தீயில் விழுமுன் கூரிய வார்த்தை இதோ:

यथा मे हृदयं नित्यं नापसर्पति राघवात् । तथा लोकस्य साक्षी मां सर्वतः पातु पावकः ।।
यथा मां शुद्धचारित्रां दुष्टां जानाति राघवः । तथा लोकस्य साक्षी मां सर्वतः पातु पावकः ।।
कर्मणा मनसा वाचा यथा नातिचराम्यहम् । राघवं सर्वधर्मज्ञं तथा मां पातु पावकः ।।
(எப்போதும் என் மனம் ராமனைவிட்டு விலகாதது உண்மையானால், முக்கரணங்களாளலும் நான் தூய்மையானவளென்பது உண்மையானால், என்னை நெருப்பு சுடவேண்டாம். (இல்லையேல் எரித்து நாஶம் செய்யட்டும்)).

இந்நிலைகளெல்லாம் ராமனுக்கு ஏற்படவில்லையே. ஆகையாலேயே ''सीतायाः चरितं महत्'' *என்றான் வால்மீகி பகவான்.*

।। शुभं भूयात् ।।

அடையாளம்

பெருமாள் சிறியதிருவடியைப் பிராட்டியிடம் தூதனுப்பினார். க்ருஷ்ணாவதாரத்தில் பாண்டவர்களுக்காகத் துர்யோதனனிடம் தூதுசென்றவனே அனுமனைத் தூதுவனாகத் தேர்ந்தெடுத்ததால் அனுமனிடம் தூதுவனுக்குண்டான தகுதிகளெல்லாம் பொருந்தியிருந்தன என்பது புலனாகிறது.

தூதுவன் இருவகைப்படுவான். ஒருவன் ''கூறியது கூறுவான்'' எனப்படுவான். மற்றொருவன் விடுத்த திசைக்கருமம் திருத்தி என்கிறபடியே ''தானே வகுத்துக்கூறுவான்'' எனப்படுவான்.

ஓர் திறமையற்றவனை வேறுவழியின்றி தூதுவிட நேரிடில், தான் தெரிவிக்க எண்ணியதை ஓலையாலோ அல்லது கிளியைப் பயிற்றுவிக்குமாப்போலே பயிற்றுவித்தோ தூதனுப்பவேண்டும். நல்ல ஓர் அமைச்சனைப்போலே திறமையும், மதியும், தூய்மையும், மெய்மையும், சொல்லாற்றலும் கொண்டவவனைத் ''தானே வகுத்துக் கூறுவான்'' எனலாம்.

தூது என்பது மூவர் சம்பந்தப்பட்டது. தூதுவிடுபவன், தூதுவன், தூதுசெய்தியைப் பெறுபவன் என்பதாமது. உதாரணமாக பண்டவர்கள், கண்ணன், துர்யோதனன் என முறையே மேல் கூறப்பட்ட மூவரை அறிக.

ஒரு கண்ணோட்டத்தில்,கண்ணனின் தூதைவிட அனுமனின் தூதே மிகவும் அரியவொன்றாகும்.

1. கண்ணண் பாண்டவர்கள் மற்றும் துர்யோதனனிடம் பழகியவன். இருவரும் அவனுக்கு உறவினர்களுமாம். ஆனால் தாயாரும் திருவடியும் ஒருவரையொருவர் அறியாதவர்களிறே. தாயார் இலங்கையை அடைந்தபின்பிறே பெருமாளுக்கும் திருவடிக்கும் சமாகமம் ஏற்பட்டது.''वानराणां नराणां च कथमासीत् समागमः ? - வானரர்களுக்கும் மனிதர்களுக்கும் எவ்வாறு சம்பந்தமேற்பட்டது?'' என்று பிராட்டி வினவினாள் அல்லவா?

2 . அனுமன் தூது சென்றதோ வேற்றுநாட்டு சிறையிலிருக்கும் ஓர் பெண்ணிடம்.

3 . கண்ணனின் தூது இரு அரசர்களுக்கிடையே. அனுமனின் தூது பிரிந்துள்ள கணவன் மனைவியருக்கிடையே.

இவைபோல்வன பிறவும் அறிக.

ஆகையால் திருவடிக்கு முதலில் தான் ராமனால் அனுப்பப் பட்டவனே என்கிற நம்பிக்கையை பிராட்டியிடம் ஏற்படுத்தவேண்டிய

அரிய பெரிய செயலிருந்தது. அது கண்ணனுக்கில்லை.

சீதையும் அனுமனிடம் ஐயமுற்று தன் கணவனின் திருமேனியையும் திருக்குணங்களையும் விளக்குமாறு கேட்டதற்குக் காரணம் உண்மையில் அவன் பெருமாளிடமிருந்து வந்தவனா என்பதை உணரவேயாகும். ஆம். புதியதொரு குரங்கைப் பார்த்து ''ऋश्यं ऊरू? ऋश्यं बाहू? – ராமனின் திருத்தோள்கள் எப்படிப்பட்டவை? திருத்துடைகள் எத்தகையன? '' என்றாள் அல்லவா!.

ராஜாக்களுக்கிடையே தூது செல்ல ஒருவனிடம் ஓலை கொடுத் தனுப்பினால் கூட முடியும். ஆனால் கணவன் மனைவியருக்கிடையே தூது செல்பவனிடம், அதிலும் புதிதாய் ஒருவனை அனுப்பும்போது ஓலை மட்டும் கொடுத்தனுப்பினால் போதாது. ஒரு சில அடையாளப் பொருட்களையும் கொடுத்தனுப்ப வேண்டும். ஆகையால் தான் பெருமாள் தன் மோதிரத்தைக் கொடுத்தனுப்பினார்.

ஓர் சிறந்த அறிவுடையவன், தன் பேச்சாற்றலால் பொய்யாகத் தன்னைத் தூதுவனாகக் கூறி நம்பவைக்கவும் வல்லவனாவான். ஆகையால் அடையாளப் பொருட்கள் உண்மையான தூதுவனை அறிய உதவுகின்றன. பிராட்டி பெருமாளின் மோதிரத்தைக்கண்டு பெருமாளையே கண்டதாக மகிழ்ந்து அனுமன் உண்மையான தூதுவனே என்றுமறிந்து உகந்தாள்.

இவ்வாறான அடையாளப் பொருட்களிலும் உற்று நோக்கில் சந்தேகமெழ வாய்ப்புண்டாம். அடையாளப்பொருட்களைப் போன்றே வடிவமைத்து நம்பிக்கையை எற்படுத்தவும் முடியுமிறே. ராமன் உயிருடன் இருக்கும்போதே அவன் மாயசிரசை காட்டினானன்றோ ராவணன்? கண்ணனைப் போன்றே ஶங்கசக்ரத்தை ஏந்தி வேடம் பூண்ட ஒருவனையும் நாம் புராணத்தில் காணவில்லையா? இந்நிலையில் தனிமையிலே நடந்த ஓர் நிகழ்ச்சி அடையாளமாகும்.

இனி மஹாகவி காளிதாஸனின் மேகஸந்தேஶத்திலமைந்த ஶ்லோகம் ஒன்றைப் பார்ப்போம்.

அதற்குமுன் மேகஸந்தேஶத்தைப்பற்றி சிறிது கூறி பின் அந்த ஶ்லோகத்தை விளக்குகிறேன்.

இந்நூல் குபேரனுடைய ஶாபத்தால் தன் மனைவியைப் பிரிந்து வாழும் ஓர் யக்ஷன் தன் மனைவியக் குறித்து மேகத்தைத் தூதுவிடும் வகையிலே அமைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட ஶ்லோகத்தை மஹாகவி அமைத்தவிதம் மிகவும் அழகானது. தான் தன் மனைவியிடம் சொல்ல நினைத்த

செய்தியையெல்லாம் சொல்லுகிறான். பிரிவினால் ஏற்படும் மனவேதனையால் அவள் தன் ஆரோக்யம் முதலியவற்றை இழக்கக் கூடாது என்றும், மனிதனின் வாழ்வில் துன்பங்கள் ஏற்படுவது ஓர் சாதாரண நிகழ்வுதான் என்றும், பொருமையோடிருந்து நல்வாழ்வை எதிர்நோக்குமாறும் ஆறுதல் கூறுகிறான்.

இந்நிலையில் அவனுக்கு ஓர் எண்ணம் ஏற்படுகின்றது. மேகம் தன் காதலனாலேயே அனுப்பப்பட்டதென்பதைக் காதலி எவ்வாறு அறிவாள்? என்பதாம் அது. அதற்காக தான் தன் காதலியுடன் வாழ்ந்த காலத்து தனிமையில் நடந்த நிகழ்ச்சியை அடையாளமாக தன் மனைவியிடம் கூறுமாறு மேகத்திடம் கூறுகிறான். அந்த ஸ்லோகம் இதோ:

भूयः चाह त्वमपि शयने कण्ठलग्ना पुरा मे
निद्रां गत्वा किमपि रुदती सस्वरं विप्रबुद्धा ।
सान्तर्हासं कथितमसकृत्पृच्छतः च त्वया मे
दृष्टः स्वप्ने कितव! रमयन्कामपि त्वं मयेति ।।

இதன் பொருளாவது: ''அன்றொருநாள் (போகானுபவத்திற்குப்பிறகு) நீ என் கழுத்தைக் கட்டியபடி படுக்கையிலே கிடந்தாய். நன்கு தூங்கவாரம்பித்த நிலையிலே, உரத்த குரலிலே கூச்சலுடனும் அழுகையுடனும் விழித்தெழுந்தாய். எனக்குக் காரணம் புரியவில்லை. உன்னிடம் கேட்டேன். சொல்ல மறுத்தாய். பன்முறைக் கேட்டபின், சிரிப்புடன், 'நயவஞ்சகரே! உம்மை நான் கனவிலே வேறு ஒரு பெண்ணை ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருந்த நிலையிலே கண்டேன்' என்றாயே!'' ஆம். இப்படிப்பட்ட தனிமையில் நடந்த நிகழ்வுகள் ஓர் மிகப்பெரிய அடையாளமன்றோ! இந்த ஸ்லோகத்தின் உரையிலும், ''इदानींसुस्पष्टमभिज्ञानम् आह - இப்போது மிகவும் தெளிவாக அறியக்கூடிய அடையாளத்தைக் கூறுகிறான்'' என்றும், ''सम्प्रति तस्या मेघे वञ्चकत्वशङ्कानिरासायातिगूढमभिज्ञानम् उपदिशति - இப்போது மேகம் வஞ்சனையற்றது - உண்மையாக தன் காதலனாலேயே அனுப்பப்பட்டு வந்ததே என அறிந்து அதனிடம் நம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய மிகவும் ஆழமான அடையாளத்தைக் கூறுகிறான்'' என கூறப்பட்டுள்ளது.

பெருமாளும் பிராட்டியுமாய் தனியே இருந்தபோது நடந்த நிகழ்ச்சியை ஸ்ரீபெரியாழ்வார் ஓர் அடையாளமாக அருளிச்செய்யும் பாசுரமிதோ:

அல்லியம்பூமலர்க்கோதாய்!அடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே!
எல்லியம்போதினிதிருத்தல் இருந்ததோர் இடவகையில்
மல்லிகை மாமாலைகொண்டு அங்கார்த்தது மோரடையாளம்.

அயோத்தியிலே பெருமாள் பிராட்டியுடன் இல்லறம் நடத்திவந்த காலத்து, பெருமாள் எங்கோ எழுந்தருளத் திருவுள்ளம் பற்றியிருப்பதை அறிந்த பிராட்டி, மல்லிகை மாலையாலே ராமனைக் கட்டிப்போட, தாயின் அன்பு கண்டு உரலிலே கட்டுண்ட கண்ணனைப்போலே, மனைவியின் அன்பு கண்டு ராமன் கட்டுண்டான். இது தனிமையில் நடந்தது. வேறு யாருமறியாதது. ஆகையால் இந்நிகழ்ச்சியை முக்கிய அடையாளமாக எண்ணிய பெருமாள் அதை அனுமனிடம் கூற அதை பிராட்டியிடம் திருவடி விண்ணப்பிக்கும்படியாய் அமைந்துள்ளது இப்பாசுரம்.

இந்நிகழ்ச்சி வால்மீகி ராமாயணத்திலே இல்லையே என வேண்டாம்.

இதை, ''நானும்ராமனும்பன்னிரண்டுவருடங்கள்அமானுஷமான போகங்களை அனுபவித்துவந்தோம்'' என்று பிராட்டி திருவாக்காலே சுருக்கமாக வால்மீகி கூறியதன் விவரணமாகக் கொள்ளக்கடவோம். அப்படியாகாவிடினும் மாசில் மனந்தெளிமுனிவனான வால்மீகியின் வார்த்தை ப்ரமாணமாகும்போது மாலுகந்தவாசிரியராய் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஸ்ரீஆழ்வாரின் ஸ்ரீசூக்தி ப்ரமாணமாகாது ஒழியுமோ?

இந்நிகழ்ச்சி எங்கு நடந்தது என பாசுரத்திலே கூறப்படாமையால் காட்டிலே எழுந்தருளியிருந்த காலத்தே நடந்ததாகக் கூறுவாறுமுளர். ஆயினும் இது ஸ்ரீபெரியாழ்வார் திருவுள்ளத்திற்கு மாறானது. ஏனெனில் ராமன் வில்லிறுத்ததற்கும் கைகேயி வரம் வேண்டியதற்கும் இடையிலேயிறே இப்பாசுரம் அமைக்கப்பட்டுள்ளது.

மிகவும் நம்பிக்கையை அனுமன் திறத்து ஏற்படுத்தக்கூடிய அடையாளத்தைக் கூறும் பாசுரமாகையாலே இத்திருமொழியில் இப்பாசுரம் மிகவும் முக்கியமானவொன்றாகும்.

இத்திருமொழியில் காகாஸுரவ்ருத்தாந்தத்தை ''சித்திர கூடத் திருப்ப'' என்கிற பாசுரத்திலே அடையாளமாக அருளிச்செய்துள்ளார். இந்நிகழ்ச்சி ஸ்ரீமத்ராமாயாணத்திலே பிராட்டி அனுமனிடம் அருளிச்செய்வதாக அமைந்துள்ளது. இதுவும் தனிமையில் நடந்த நிகழ்ச்சியாயினும் காகாஸுரன் மூவுலகும் தன் பிழையைத் தானே சாற்ற எல்லோருமறியும்படியாயிற்று. ஆகையால் அதிலும் ''அல்லியம்பூ'' என்ற

இப்பாசுரத்திலே கூறப்பட்ட இந்நிகழ்ச்சியே முக்கிய அடையாளமாகும்.

மற்றும் உற்று நோக்குங்கால் இப்பாசுரத்திலேயே ''விண்ணப்பம்'', ''சொல்லுகேன்'', ''கேட்டருளாய்'' என்ற மூன்று சொற்றொடர்களும், தொடர்ந்தும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆழ்வாரும் இந்நிகழ்ச்சியையே முக்கிய அடையாளமாகத் திருவுள்ளம்பற்றியுள்ளதை அறியலாகும்.

அருளிச்செயல் வேதாந்தத்தை எல்லோருமறிய ஆழ்வார்களைக் கொண்டு பகவானால் அருளிச்செய்யப்பட்டது. இதை வழிபாட்டுப் பாடல்களாகவும் ஆசார்யர்கள் அமைத்தனர். இவற்றை பல கோணங்களிலேயும் அனுபவிக்கலாம். அவற்றில் இலக்கியமாய் இவற்றை அனுபவிப்பதும் ஒன்றாகும். இவை காவியம் என்ற வகையிலோ நாடகம் என்ற வகையிலோ சேறா. ஆயினும் இவற்றை உலகின் மிக உயர்ந்த மொழியான வடமொழியின் இலக்கியநூல்களில் உள்ள நுண்ணிய பொருட்களையும் ரஸத்தையும் அனுபவிக்கும் போது திவ்யப்ப்ரபந்தத்தை பொருளோடு அறிந்தவர்களுக்கு உடனே அதே அமைப்பில் அமைந்த பாசுரம் நினைவில் வராமல் போகாது.

ஸ்ரீபெரியாழ்வார் திருமொழிப்பாசுரமும், மஹாகவியின் ஸ்லோகமும் ஒரே நோக்கத்தை உடையன என்பது ரசிக்கத்தக்கது.

।। शुभं भूयात् ।।

நன்னோய்

முன்னுரை:

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற பழமொழியை எல்லோரும் அறிவோம். நோயுற்றால் ஆயுள் குறைவதுமட்டுமின்றி வாழுங்காலத்தும் சொல்லொணாத் துயரத்தை மனிதன் அடைகின்றான். ஸ்ரீநம்மாழ்வார் ''கொன்றுயிருண்ணும் விசா(யா)தி'' என்றார். உடலில் நோய் வந்தால் நல்லறிவைப் பெறுதல், அனுஷ்டானங்களைச் செய்தல் முதலியவைகள் தடைபடுமாதலின் ஹேயமான இவ்வுடலையும் வைதிகர்களும் விரக்தர்களும்கூட பேணிக்காப்பதைக் காண்கின்றோம். சுவரிருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்? ஆகையால் நோயானது எல்லோராலும் வெறுக்கப்படக்கூடியதே.

ஆனால் ஸ்வாமி நம்மாழ்வார் எல்லோராலும் முயற்சித்துப் பெறப்படவேண்டிய ஓர் நோயைப்பற்றி அருளிச்செய்துள்ளார். அதைப்பற்றி அறியுமுன் தீய நோயைப்பற்றி அறிவோம்.

தீயநோய்:

உடலிலும் மனதிலும் ஏற்படக்கூடிய நோயை பலர் பலவாறு பிரித்துக்கூறுவார்கள். வள்ளுவன் தீரும்நோய் தீராநோய் எனவும் பிரித்துள்ளான். தீரும் நோய் நாம் உண்ணும் உணவு, நீர் மற்றும் நடத்தை முதலியவற்றால் வருவது. பழவினையால் தீராநோய்கள் ஏற்படுகின்றன.

ஶாஸ்த்ரம் நோயை ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம் மற்றும் ஆதிபௌதிகமென மூன்றாய்ப் பிரித்துள்ளது. இவற்றையே தாபத்ரயம் என்கின்றோம்.

1 ஆத்யாத்மிகம் : இது ஶரீரம் மற்றும் மனம் ஸம்பந்தப்பட்ட நோயாகும். தலைவலி, உடல்வலி முதலியன ஶரீர ஸம்பந்தப்பட்டவை. காமக்ரோதாதிகள், பைத்தியம் பிடித்தல் முதலியன மானஸிக நோய்களாகும்.

2 ஆதிபௌதிகம்: இது பஶு, பக்ஷி மற்றும் மனிதர்களால் ஏற்படும் நோயாகும். *(அமைதியை விரும்பும் நம்நாட்டிற்கே தீவிரவாதமென்னும் ஆதிபௌதிகம் வந்துள்ளதே!)*

3 ஆதிதைவிகம்: இடி, மின்னல், அதிக மழை முதலிய இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் நோய்கள் ஆதிதைவிகம் எனப்படும்.

இதன் விவரணத்தை ஸ்ரீவிஷ்ணுபுராணம் கொண்டு அறியலாம். ஸுகமும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் மற்றும் ஆதிதைவிகம் என மூவகைப்படும். மனவமைதி, பக்ஷிபஶுக்களால் ஏற்படும் நன்மைகள்,

அன்புடைய உற்றார் உறவினர்களால் வரும் ஸுகம், ஸுபிக்ஷமான மழை இவையெல்லாம் ஸுகத்திற்குக் காரணமாவதைப் பார்க்கிறோம் அல்லவா? இவையும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஏற்படுவதாலும், அளவுடையதாலும், நிரந்தரமற்றதாலும், பரமாத்மாவை அனுபவிப்பதில் தடையாயமைவதாலும் முமுக்ஷுக்களுக்கு விலக்கத்தக்கவையே.

தமிழில் பிணி என்ற சொல்லால் நோயை வழங்குகின்றோம். இது ஓர் காரணச் சொல்லாகும். பிணித்தல் - கட்டுதல். ஆதாவது ஓர் மனிதனை உடலளவிலும் உள்ளத்தளவிலும் அவன் நினைத்த செயலைச் செய்யவிடாமல் தடுத்தலால் இது இப்பெயர் பெற்றது. பக்தனுக்கு பகவானை தர்ஶிக்க ஆவலிருந்தும் காலில் உபாதையிருந்தால் கோவிலுக்குச்சென்றுபகவானைதர்ஶிக்கமுடியாமல்போகின்றதல்லவா?

மூப்பும் இப்படிப்பட்டதே. இதற்கு வைத்தியம் இல்லை; மருந்தில்லை என்பதே வித்யாசம். தனிமையில் சென்று பகவானை தர்ஶிக்க இயலாமல் வேறொருவரின் துணை தேவைப்படுவதால் வீட்டிலே முடங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படுவதுண்டல்லவா! ஆகையாலேயே ஆழ்வார்கள் மூப்பையும் (ஏன் சரீரத்தையுமே கூட) வ்யாதி எனவே வழங்களாயினர்.

நோய் வந்தால் மக்கள் மருத்துவனை அடைகின்றனர். அவன் முதலில் நோயாளிக்கு வந்துள்ள நோய் யாதென்று உறுதி செய்து, நோயாளிக்கு அந்த நோய் ஏன் வந்ததென்பதை அறிந்து, பின் அதைத் தீர்க்க மருந்தை வழங்கவேண்டும். அவ்வாறு மருத்துவம் அளிக்கவியலாத மருத்துவனால் வந்த நோயைப்போக்கவியலாதது மட்டுமின்றி புதிய நோய்கள் ஏற்படும் அபாயங்களும் உண்டு.

நன்னோய் :

ஸ்வாமி நம்மாழ்வார் கூறும் நல்ல நோயை அறியும் முன் தமிழ் இலக்கியத்தில் உள்ள ''வெறிவிலக்கு'' என்ற துறையைப்பற்றி அறிதல் அவசியமாதலின் அதனை சிறிது விளக்குகின்றேன். இதை விளக்கும் ஶ்ரீஈடு இதோ :- ''விரஹஜ்வரத்தாலே நோவுபடுகிறவளுக்கு ஆடறுப்பது, கள்ளுகப்பது பலியிடுவதாய்ப் பரிஹரிக்கப்புக, தோழியானவள், 'இது ஓர் விஷயத்தில் भावபந்தமடியாக வந்த நோயாயிற்று, மற்றொன்றாலன்று' என்று அவர்கள் செய்கிறவற்றை விலக்குகை''. இதைச் சிறிது விளக்குகின்றேன். பல பூச்சோலைகளைக்கொண்ட காட்டிற்கு ஓர் தலைவன் (அரசன்) வேட்டையாடவருகின்றான். அதே காட்டிற்கு பூக்கொய்து விளையாட தலைவி ஒருவள் வருகின்றாள். அத்தலைவனும் தலைவியும் காதலுற்று கூடி பிரிகின்றனர். பிரியும்போது அத்தலைவன்

ஊரறிய தலைவியை மணம்புரிய வருவதாக உறுதியளித்தான். ஆனால் அவன் வரத் தாமதமாயிற்று. விரஹத்தால் தலைவி வெதும்புகின்றாள். உடல் மெலிகின்றது. ஒளியிழக்கின்றாள். மூர்ச்சித்து விழுகின்றாள்.

இது கண்ட தாயார் இவளிடம் ஒருதேவதை ஆவேஶித்திருப்பதாக ஓர் கட்டுவிச்சி (குறத்தி) கூறியதை மெய்யெனக் கருதி, மகள்மேல் கொண்ட காதலால் ஆலோசியாது, கட்டுவிச்சி கூறியபடியே அந்த தேவதையை வழிபட முற்பட்டாள். கள் மற்றும் இறைச்சி முதலியன வரவழைக்கப்பட்டன. ஓர் வெறியாட்டக்காரனும் வந்தான். பூஜை தொடங்கிற்று. இந்நிலையில் தோழியானவள் தலைவிக்கு வந்திருப்பது காதல் நோயல்லது வேறன்று என்று பூசையைத் தடுத்து நிறுத்துவது வெறிவிலக்கு எனப்படும்.

தலைவியின் நிலையில் இருக்கும் நம்மாழ்வாரும் பகவானிடம் காதல் வயப்பட்டு அவனுடைய தர்ஶனம் கிடைக்காமல் மூர்ச்சித்து விழுகிறார். மேற்கூறியபடியே அவரின் தாயானவள் தேவதாந்தரம் தலைவியிடம் ஆவேஶித்து இருப்பதாக எண்ணி ஒரு குறத்தியின் சொற்படி தேவதாந்தரத்தை வழிபட முற்பட்டாள். இதைச் செவியுற்ற தலைவியின் மிக நெருங்கிய தோழியொருவள் அவ்விடம் விரைந்து வருகின்றாள். தலைவியின் தாய் மற்றும் அங்கிருந்தோரிடம், ''நீங்கள் செய்யும் வைத்தியம் பலனளிக்காது; இவள் நல்ல பரமைகாந்தி; இவளுக்கு வந்துள்ளது பகவானைப்பற்றிய காதல் நோய்; தேவதாந்தர ஆவேஶமென்பதெல்லாம் பொய்'' எனக்கூறி வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்துகின்றாள்.

தேவதாந்தரஸ்பர்ஶம் ஆத்மநாஶமென்பதை வெளியிடத் திருவுள்ளம் பற்றிய ஸ்வாமி நம்மாழ்வார், இந்த ''வெறிவிலக்கு'' என்ற துறையிலே ''தீர்ப்பாரை'' எனத்தொடங்கும் ஓர் திருமொழி (திருவாய்மொழி 4-6) அருளிச்செய்துள்ளார்.

''न प्रेतो न पिशाचो वा राक्षसो वाऽसुरोऽपि वा । भक्तियुक्तमनस्कानां स्पर्शने न प्रभुर्भवेत्।। '' (பகவத் பக்தியுடன் கூடிய மனதுடையாரைத் தொடுவதிலே ப்ரேதபிசாசராக்ஷஸ அசுரர்கள் சக்தரல்லர்கள்) என்கிற ஶாஸ்த்ரார்த்தம் இத்திருமொழியால் விளக்கப்பட்டுள்ளது.

சுருங்கச்சொல்லி விவரித்தல் மற்றும் விவரணம் கூறி சுருங்கச்சொல்லல் என்பது நம் ஆசார்யர்களின் வழக்கம். அவ்வாறே ஸ்வாமி நம்மாழ்வாரும் பின்னுரைத்த திருவாய்மொழியில் வரும் ''தீர்ப்பாரை....நன்னோயிது தேறினோம்'' என்ற திருமொழியில் பரக்கக்கூறியதையே முன்னுரைத்த திருவிருத்தத்தில் 20 மற்றும் 53வது

பாசுரங்களிலே சுருங்கவருளிச்செய்தார்.

இவ்விடத்தில் ''தீர்ப்பாரை...'' என்ற திருமொழியை ஒருமுறை அனுஸந்திக்கவும். திருவிருத்தப் பாசுரங்களை மட்டும் கீழே கொடுக்கின்றேன்.

சின்மொழிநோயோ கழிபெருந்தெய்வம்,இந்நோயினதென்-
றின்மொழிகேட்குமிளந்தெய்வமன்றிது,வேல!நில் நீ
என்மொழிகேண்மினென்னம்மனைமீர்!உலகேழுமுண்டான்
சொன்மொழி,மாலையந்தண்ணந்துழாய் கொண்டுசூட்டுமினே.

(திருவிருத்தம்-20)

வாராயினமுலையாளிவள் வானோர்தலைமகனாம்
சீராயின தெய்வ நல் நோயிது,தெய்வத்தண்ணந்துழாய்த்
தாராயினும் தழையாயினும் தண்கொன்பதாயினும்கீழ்
வேராயினும் நின்றமண்ணாயினும் கொண்டுவீசுமினே.

(திருவிருத்தம்-53)

மேற்படி பாசுரத்திலே நோய் என்ற சொல் பகவத்பக்தியைக் குறிக்கின்றது. இந்த பகவத்பக்தியாகிற நோய் அனைவருக்கும் வரவேண்டும். இந்நோய் யாருக்கு வருகின்றதோ அவர்களுக்கே ஸம்ஸாரமாகிற நோய் தீரும். இயற்கையிலே இந்நோயைப் பெற்ற பாக்யஶாலிகள் அஸத்துக்களுடன் சேர்ந்து இதைப் போக்கிக் கொள்ளக்கூடாது. இந்நோயை இயற்கையிலே பெறாதார் ஒவ்வொருவரும் தானாக வரவழித்துக்கொள்ள வேண்டும். ஸாத்விகர்களுடன் பழகுவதால் இந்நோயை எளிதில் தொற்றுவித்துக்கொள்ளலாம். இது கூறும் ஶ்ரீஈடு இதோ:
''இந்நோவுதான் பரிஹரிக்கவேண்டா. கைக்கூலி கொடுத்துக் கொள்ளவேண்டும் நோய்''

மற்றொன்றை இங்கு உற்று நோக்கவேண்டும். ''கழிபெருந்தெய்வம்'' என்றும் ''வானோர் தலைமகனாம் சீராயின தெய்வ நன்னோய்'' என்றும் எம்பெருமானையும் அவன் கல்யாணகுணங்களையுமே நோயாக ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இதற்குக் காரணம் அழ்வாருடைய பக்திக்கு விஷயம் எம்பெருமானும் அவன் குணங்களுமே ஆதலாலாகும்.
இது கூறும் உரை இதோ:
''இந்நோவுக்கும், இந்நோவுக்கு நிதானபூதனானவனுக்குமுண்டான அபேதத்தை புத்தி பண்ணி 'இதுமிக்கபெருந்தெய்வம்' என்று இது தன்னை அவனாகச் சொல்லுகிறாள்''

உலகில் நோய் வந்தால் உற்றார் உறவினர்களும் வருத்தமடைவர்.

ஆனால் பகவத்பக்தியாகிற நோய்வரின் அனைவருக்கும் ஸுகம் உண்டாகும். ஒரு சில பரம்பரை வியாதிகளும் உண்டு. இதுவரின் தாய் தந்தையர் தன் ஸந்ததிக்கு இதுவரக் கூடாது என பகவானை வேண்டுவர். ஆனால் பகவத்பக்தியாகிற நோய் ஸந்ததியில் தொடர்வதை ''ஏழாட்காலும் பழிப்பிலோம்'' இத்யாதிகளின் படியே கொண்டாடுவர்.

உலகில் ஒருசில தொற்றுநோய்வரின், அந்நோயால் பாதிக்கப்பட்ட நோயாளியிடம் பேசுதல், தொடுதல் முதலியவற்றால் இது பரவும் அபாயமிருப்பதை எண்ணி அரசாங்கத்தார் ஊரின் வெளியே ஓர் மருத்துவமனையில் (Isolation hospital) அவர்களை வைத்து மருத்துவம் செய்வர். ஆனால் பக்தியாகிற தொற்றுநோயை பக்தனிடம் பேசுதல், அவனைத் தொடுதல் முதலியவற்றால் நாம் பெறவெண்டுமென 'सदा परगुणाविष्टः द्रष्टव्यः सर्वदेहिभिः - ஶரீரமெடுத்தவர்கள் அனைவராலும் (அதன் பயனாக) எப்பொழுதும் பகவானின் குணங்களை அனுபவிப்பதனால் உண்டான மயிர்க்கூச்சல் மற்றும் கண்ண நீர் கொள்ளுதலுடைய பக்தர்கள் காணப்படவேண்டியவர்கள்'', ''संभाषा दर्शनं स्पर्शः कीर्तनं स्मरणं नतिः । पावनानि खिलैतानि साधूनामिति शुश्रुम ।। - ஸாதுக்களுடன் பேசுதல், அவர்களைப் பார்த்தல், அவர்களின் ஸ்பர்ஶம், அவர்களை நினைத்தல் மற்றும் அவர்களைத் தொழுதல் முதலியன புனிதமானது (மனிதனைத் தூய்மையாக்கவல்லது)'' மற்றும் ''साधूनां दर्शनं पुण्यं तीर्थभूता हि साधवः । कालेन फलदं तीर्थं सद्यः साधुसमागमः - தீர்த்தபூதர்களான ஸாதுக்களின் தர்ஶனம் புண்யமானது. ஸாதுஸமாகமம் உடனே பலனளிக்கவல்லது. (புனிதமாக்கவல்லது) புனித தீர்த்தங்களோ உடனே பலனளிக்கவல்லவையல்ல (பிற்காலத்திலேயே பலனளிக்கவல்லவை)'' இத்யாதிகளை இங்கே அனுசந்திக்கப் ப்ராப்தம்.

''நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச்செயல்'' என்றான் வள்ளுவன்.

இக்குறளின்படி செயல்படுபவனே நல்ல மருத்துவன் ஆவான். இப்பாசுரங்களிலே ஆழ்வார்களால் மருத்துவனின் இடத்திலே கட்டுவிச்சி வைக்கப்பட்டுள்ளாள். ஒன்றை இங்கு உற்று நோக்க வேண்டும். ஶ்ரீதிருமங்கையாழ்வார், தன் பாசுரத்திலே கட்டுவிச்சியை மருத்துவம் நன்கு அறிந்தவளாக அமைத்துள்ளார். திருநெடுந்தாண்டகம் 11வது பாசுரத்தில் தன் மகளின் நிலைகளை விளக்கி இதற்கு காரணம் யாதெனக்கேட்ட தாய்க்கு கட்டுவிச்சி ''கடல்வண்ணர் இது செய்தார் காப்பாராரே?'' என்றாள். அவ்வாறே சிறிய திருமடலிலும் கட்டுவிச்சி,

''நீரேதுமஞ்சேன்மின் நும்மகளை நோய்செய்தான்
ஆரானுமல்லன் அறிந்தேன் அவனை நான்
கூறார் வெற்கண்ணீர்! உமக்கறியக்கூறுகேனோ?
ஆராலிவ்வையம் அடியளப்புண்டதுதான்? ''

என்று தொடங்கி,

''பேராயிரமுடையான் பேய்ப்பெண்டீர்! நும்மகளை
தீராநோய்செய்தான்" என உரைத்தாள்.

ஆனால் ஸ்வாமி நம்மாழ்வார் கட்டுவிச்சியை நோயை சரியாக அறிந்துகொள்ளாத ஒருவளாக அமைத்துள்ளார். இதற்குக் காரணம் ''வெறிவிலக்கு'' என்ற துறையில் பாசுரத்தை அமைக்கவெண்ணியாகும். நோயின் காரணத்தை அறியாததால் கட்டுவிச்சியால் கள், இறைச்சி, கருஞ்சோறு மற்றும் செஞ்சோறு முதலிய தேவதாந்தரபூஜைக்கு வேண்டிய த்ரவியங்கள் வரவழைக்கப்பட்டன. இது எத்தகையது என்பதை ''உணங்கல்கெடக் கழுதை உதடாட்டம் கண்டென்பயன்?'' என வெறியை விலக்கும் தோழியின் பேச்சால் ஆழ்வார் அருளிச்செய்தார். இதன் பொருளாவது : கிராமங்களில் தான்யங்களை உலர்த்த வெயிலில் இடுவது வழக்கம். அப்போது சிறுவர்களை ஆடு முதலிய மிருகங்கள் தானியங்களை உண்ணாமல் காக்க நியமிப்பர். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஓர் சிறுவன், கழுதை தான்யத்தைத் திண்ணவந்தபோது அதை விரட்டியடிக்காமல், கழுதை தானியத்தை உண்பதைக் கண்டு ரஸிப்பதற்கு ஒப்பாய்க் கட்டுவிச்சியின் மருத்துவம் அமைந்துள்ளது என்பதாம்.

இக்கட்டுவிச்சியின் நோயின் காரணத்தை அறியாமைக்கு ஸ்ரீஈடு கூறும் உதாரணம் இதோ : ''அம்புபுக்கு வாட்டத்திலே முடிந்தாரையும் நீரிலேபுக்கு முடிந்தாரையும் முகத்திலே தெரியாதோ?'' ''மரணமடைந்தவனின் முகத்தைக் கண்டால் கூட அம்பினாலே தாக்கப்பட்டிறந்தவனா அல்லது நீரில் மூழ்கியிறந்தவனா என்பதை அறியமுடியும். அவ்வாறிருக்க மூர்ச்சையுற்றவள் முகம் கண்டு உங்களால் காரணமறியமுடியவில்லையோ?'' என்பது இதன் பொருளாகும்.

இக்கட்டுவிச்சி செய்யும் நோயின் பரிஹாரம் எத்தகையது என்பதைக் கூறும் ஸ்ரீஈடு இதோ : ''முழங்கால் தகர மூக்கிலே ஈரச்சீரைக்கட்டுவரைப்போலே''. இதன் பொருளாவது : ஈரத்துணியை அடிபட்டவிடத்திலே கட்டுவது வழக்கம். ஆனால் முழங்காலிலே ஒருவனுக்கு அடிபட மூக்கிலே ஈரத்துணியைக் கட்டுவதற்கு ஒப்பாம் இக்கட்டுவிச்சியின் செயல் என்றபடி. மூக்கிலே கட்டினால்

முழங்காலில் அடிபட்டவிடத்திலிருந்து வேளியேறும் ரத்தத்தைத் தடுக்க முடியாதது மட்டுமின்றி மூச்சுத்திணறி ப்ராணவியோகம் ஏற்படவும் வாய்ப்புள்ளதைப் போலேயாம் இக்கட்டுவிச்சியின் மருத்துவம் என்றபடி. இனி தோழி கூறும் மருந்துகள் இதோ:

1. நாமஸங்கீர்த்தனம் :

சங்கு சக்கரம் என்று இவள் கேற்க இசைக்கவேணும்.
மாயப்பிரான் கழல் வாழ்த்தவேணும்
பெருந்தேவன் பேர் சொல்ல வேணும்
கண்ணபிரான் கழல் வாழ்த்த வேணும்
வண்துவராபதி மன்னனை ஏத்தவேணும்

2. பகவத்பாகவத ஸம்பந்தமுள்ள பொருட்கள்:

தெய்வத்தண்ணந்துழாய் தார், தழை, தண்கொம்பு மற்றும் கீழ்வேர் மணியினணி நிறமாயன் தமரடி நீறு/அவர்கள் நின்ற(விடத்துள்ள)மண். (பாகவதர்களின் பாததூள்).

உலகில் மருந்து இருவகைப்படும். ஒன்று உட்கொள்வது (உண்ணப்படுவது) மற்றொன்று வெளியில் (ஶரீரத்தின்மேல்) இடுவது (ointment). தோழியும் இவ்விருவகைப்பட்ட மருந்துகளைக் கூறியுள்ளதாகக் கூறும் ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளையின் ஶ்ரீசூக்தி இதோ: ''சொன்மொழி'' என்று உள்ளே உஜ்ஜீவிக்கும் மருந்தும், ''தண்ணந்துழாய் கொண்டு சூட்டுமின்'' என்று மேற்பூசும் மருந்தும்''.

இதனால் நாமஸங்கீர்த்தனம் மாத்திரையைப்போலே உள்ளே உஜ்ஜீவிக்கும் மருந்தாம். ''தீரும் நோய் வினைகளெல்லாம் திண்ணம் நாமறியச் சொன்னோம் பேருமோராயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே'' இத்யாதிகளை இங்கே அனுஸந்திப்பது. உடுத்துக்களைந்த பீதகவாடை, சூடிக்களைந்த மாலையைச்சூடுதல் முதலியன மேற்பூசும் மருந்தாம்.

இப்பாசுரங்களிலே உள்ள தோழியின் நிலையிலே (சரியான மருத்துவம் செய்யும் மருத்துவன் நிலையிலே) ஸத்ஸம்ப்ரதாயத்துடனே அத்யாத்மக்ரந்தங்களிலே சிரபரிசயம் பண்ணின மஹாப்ராஜ்ஞர்களான ஆசார்யர்களைக் கொள்ளக்கடவது. ஸாக்ஷாத் நாராயணனே ஜீவாத்மாக்களுடைய ஸம்ஸாரம் என்கிற நோயைப்போக்க ஆசார்யரூபத்தில் உலகில் அவதரிப்பதால் மருத்துவன் நிலையிலே ஆசார்யனை இட்டாலும் எம்பெருமானை இட்டாலும் வாசியில்லை.

ஶ்ரீபெரியாழ்வாரும் ஸம்ஸாரத்தை நோயெனக்கூறி அதற்கு மருத்துவன் மாமணிவண்ணனான எம்பெருமானே என்றும், இளந்தெய்வங்களல்ல என்றும் அருளிச்செய்தார். ''मेरुमन्दरमात्रोऽपि

राशिः पापस्य कर्मणः । केशवं वैद्यमासाद्य दुर्व्याधिरपि नश्यति ।।'' ''भेषजं भिषक्'' ''हरणादेव दुःखानां हरिरित्यभिधीयते'' ''नास्ति भेषजमन्यत्र नारायणरसायनात्'' *(அளவான பாபக்கூட்டமும் கேஶவனை மருத்துவனாகக் கொண்டால் அழிக்கப்படும். துக்கங்களைப் போக்குவதனாலேயே பகவான் ஹரி என்று அழைக்கப்படுகிறான். நாராயணன் என்கிற ரஸாயனத்தைத் தவிர நோய்க்கு மருந்து வேறு கிடையாது) இத்யாதிகளை இங்கே அனுஸந்திப்பது.*

இவ்வளவாலே பக்தியாகிற நல்ல நோய், அதற்குக் காரணம், மருந்து எல்லாம் எம்பெருமானே என்பதை அறியலாம்.

மேற்கூறப்பட்ட பக்தியானது ப்ரேமபக்தியானால் அது ஒருவனை உபாயத்திலே மூட்டி மோக்ஷமளிக்கும். ப்ரபந்னனுக்குள்ள பக்தி உபாயத்தில் சேராமல் இவனை கைங்கர்யத்தில் ஊற்றமுடையவனாக்கும். ப்ரபந்னரான நம்பிறவி என்னும் நோய்க்கு ஸித்தோபாயனான எம்பெருமானே ஸாத்யோபாயனாய் (பக்தியோகத்தின் நிலையில் நின்று) மருந்தாகின்றான். அவனே எம்பெருமானார், ஸ்வாமி தேஶிகன் முதலிய ஆசார்யர்களாய் அவதரித்து க்ரந்தங்களை (சரணாகதி கத்யம், ஶ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்) அவதரிப்பித்து மருத்துவனாகவும் ஆகின்றான்.

இனி ப்ரபத்தியையே மருந்து என்றும் கூறலாம். உலகில் நோய்க்கானமருந்துகள்பெரும்பாலும்பலநாட்கள்உண்ணவேண்டிவரும். ப்ரபத்தியாகிற மருந்தோ ஒரேமுறை உண்டால் போதும். பல நாட்கள் உண்டாலும் உலகமருந்துகள் நோயை முழுவதுமாகப் போக்கும் என்னவொண்ணாது. ப்ரபத்தியாகிற மருந்தோ மஹாவிஶ்வாஸத்துடன் உண்டவர்களுக்கு உறுதியாய்ப் பலனளிக்கவல்லது. உலகிலுள்ள மருந்துகள் பத்யம்/பட்டினி முதலியவற்றை எதிர்ப்பார்க்கும். ப்ரபத்தியோ வேறொன்றையும் எதிர்ப்பாராது.

மூலிகைகள் பெரும்பாலும் காட்டிலும் மலைகளிலுமே கிடைக்கும். ஆம். அஹோபிலமலைக் காட்டிலே கிடைத்து, ஶ்ரீமதழகிய சிங்கர்கள் என்கிற மருத்துவர்களுடன் நடமாடும் மூலிகையான ஶ்ரீமாலோலன் திருவடிகளிலே இக்கட்டுரையை இட்டு தன்யனாகின்றேன்.

அறிந்தன வேதவரும் பொருள்கள் நூல்கள்
அறிந்தன கொள்கவரும்பொருளாதல்
அறிந்தனர் எல்லாம் அரியைவணங்கி
அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே.

।। शुभं भूयात्।।

ஆழ்வார்களின் நாயிகாபா(ஶ)வம்

இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளவை யாவும் பூர்வாசார்யர்களால் தனித்தனியே வெவ்வேறிடங்களில் அருளிச்செய்யப்பட்டவையே. ஓரிடத்தே சேர்த்ததே அனுபவிக்க ரஸமாயிருக்கும் என்பதால். ஸ்வாமி தேஶிகனின் த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்னாவளி, ஸ்ரீநம்பிள்ளையின் ஈடு, ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையின் உரை, அடையவளைந்தான் மற்றும் ஜீயர் அரும்பத உரை, ஸ்ரீபிள்ளைப்பெருமாள் அயங்கார் முதலியவர்களின் ஸ்ரீசூக்திகளில் இருந்து பெற்ற விஷயங்களே இவை. பூக்கள் இம்மஹனீயர்களுடையது. மாலையாய்க் கோத்தது அனுபவிக்கவே.

வேதத்தை மறை என்ற சொல்லால் நாம் தமிழில் வழங்குகின்றோம். ஆழமான பொருட்களைத் தன்னிடத்தே மறைத்துவைத்திருப்பதால் இது மறை எனப்படுகின்றது.

ஆழ்வார்களின் அருளிச்செயலைத் தமிழ்மறையென்று ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நாமும் வழங்கிவருகின்றோம். ஆகையால் இதிலும் ஆழ்பொருட்கள் மறைந்துகிடக்கின்றன என்பது தெளியலாகும். ஆகையால் இதன் பொருளை ஸதாசார்யனிடம் அடிபணிந்து கேட்டே அறியவேண்டும்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில், 'செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்தார்.

மிக சிரமப்பட்டும் அறியமுடியாத வேதத்தில் கூறப்பட்டுள்ள சில விஷயங்களைச் செய்ய தமிழ்மாலைகளான அருளிச்செயல் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காட்டுகின்றன என்பது இதனால் கூறப்பட்டது.

ஆழ்வார் பாசுரங்களை அறிந்திருந்தும் பலர் தவறான பாதையில் செல்வதையும் பார்க்கின்றோமே என்றால், ஆழ்வார் பாசுரங்களை மனப்பாடம் செய்தால் மட்டும் போதாது. நல்ல ஆசார்யனின் அடிபணிந்து அதன் பொருளை அறிதல் மிகவும் அவசியம் என்பதை 'தெளியவோதி' என்ற சொற்றொடரால் ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்தார்.

ஆகையாலேயே ஓர் வைஷ்ணவன் காலக்ஷேபம் செய்து அவசியம் அறியவேண்டிய க்ரந்தங்களில் ஒன்றாகத் திருவாய்மொழியையும் பெரியோர் சேர்த்தனர். மற்ற மூன்று க்ரந்தங்களையும்விட இது எளிதாக பகவானிடம் மனதை ஈடுபடுத்துவதும், இதை ரஸிக்க பெரும்

புலமையின் தேவையின்மையும், இலக்கியச்சுவையுடன் ஆழ்வார்கள் அருளிச்செய்ததும் இதன் தனிப்பெருமைக்குக் காரணமாயின.

வேறு ஒருவரின் நிலையிலே மாறியும் ஆழ்வார்கள் பாசுரமருளிச்செய்வதுண்டு. ஸ்ரீகுலசேகராழ்வார் தயரதனாகவும் தேவகியாகவும் கூட தன்னை நிறுத்திப் பாசுரமருளிச்செய்துள்ளார். ஸ்வாமி நம்மாழ்வாரும், கலியனும் அதிகமாக நாயிகாபாவத்தில் (தலைவியின் நிலையில்) பாசுரமருளிச்செய்துள்ளனர்.

ஸ்வாமி நம்மாழ்வார் தானான தன்மையிலும், பகவானிடம் மையலுற்ற ஓர் நாயகியின் தன்மையிலும், அவள் தன் தாய் நிலையிலும், தோழியின் நிலையிலுமருளிச்செய்த பாசுரங்கள் இலக்கியச் சுவையுடன் அனைவரின் மனதையும் மிகவும் கவருகின்றன. இப்படி நான்கு முகத்துடன் (நான்கு நிலையில்) இவர் பாசுரமருளிச்செய்ததால் இவர் திராவிடவேதமோதும் நான்முகன் என நம் பெரியோரால் புகழப்படுபவர். பிரமன் நான்கு வேதத்தையும் ஓதுபவன். இவரோ நான்கு வேதத்தின் ஸாரமான பொருட்களை நான்கு ப்ரபந்தங்களாலே அருளிச்செய்தவர்.

நாயிகாபாவம் என தலைப்புக் கொடுத்திருப்பினும் தோழி மற்றும் தாயின் நிலையையும் உட்கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இம்மூன்று நிலையிலுமுள்ள பா(ஈ)வத்தின் ஒற்றுமையையும், சொற்களின் ஒற்றுமையையும் கருதியாகும்.

ஆழ்வார்கள் தானான தன்மையிலே அருளிச்செய்த விஷயத்தையே நாயிகாபாவத்திலும் அருளிச்செய்துள்ளனர். பொருள் ஒன்றாயினும் நாயிகாபாவத்திலுள்ள பாசுரங்கள் அதிக இலக்கியச் சுவையுடன் விளங்குவதிலிருந்தே நாயிகாபாவத்தின் பெருமையை உணரலாம்.

ஓர் உதாரணம் பார்க்கலாம். 'அடிமைத்தலைநின்றார் திருத்தாள் வணங்கி இம்மையே பயனே இன்பம் யான் பெற்றது' என்ற தானான தன்மையிலே அருளிச்செய்த பாசுரத்தின் பொருளையே, 'வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப்பாதம் பணிந்து இவள் நோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய்' என அருளிச்செய்தாலும் இப்பாசுரங்களை அனுபவிக்கும் போதும், உரைகளை ஸேவிக்கும்போதுமுள்ள வாசியை நாம் நன்கு உணரலாம்.

ஆழ்வார்களின் திருவுள்ளத்தை அறியாதார் பாசுரத்தின் பொருளை விரஸமாக்குவராதலின் அது தன்னை விளக்கவே மிகவும் சுருக்கமாக நாயிகாபாவத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள சில சொற்களுக்கும், பாசுரங்களுக்கும், திருமொழிகளுக்கும் உள்ளுரைப்பொருள் யாதென அறிவது இன்றி அமையாதது.

தமிழின் பொருள் இலக்கணத்திலே அகப்பொருள் மற்றும் புறப்பொருள் என இரு பிரிவுண்டு. அகப்பொருள் சிற்றின்பத்தை முக்கியமாகக் கூறுவதாயினும், சிறுபாம்புக்கடிக்கு மருந்தாகப் பெருங்காயத்தை வாழைப்பழத்தினுள் வைத்துக்கொடுக்கும் தாயைப்போலே, ஆழ்வார்கள் பேரின்பம் பயக்கும் பகவதனுபவத்தை அகப்பொருளினாலே அருளினர். இதுதன்னையே 'அன்யாபதேசத்தாலே பேசுகிறார்' என்ற உரைவாக்கியங்கள் காட்டுகின்றன. அதாவது ஆழ்வார் தன் நிலையை / தான் கூறவந்ததை நேராகக் கூறாமல் வேறு தன்மையை ஏறிட்டுக்கொண்டு பேசுகிறார் என்பது இதன் பொருளாகும். ஆகையால் இப்படிப்பட்ட பாசுரங்களுக்கெல்லாம் உள்ளுரைப்பொருள் ஒன்று உண்டென்பதை அறியலாம்.

காதலும் பக்தியும்:

காதலிலும் பக்தியிலும் உள்ள உணர்வு ஒன்றுதான். காதல் கடவுள், பெரியோர் முதலியவர்களிடம் வைக்கப்படும்போது பக்தி என்று வழங்கப்படுகின்றது. ஆகையால் விஷயத்தைப்பொறுத்து வேற்றுமை உண்டெனினும் உணர்வில் ஒன்றென்பதில் விவாதமில்லை. காதலனும் காதலியும் சந்திக்கவெண்ணும் போது தனிமையை விரும்புவர். ஆனால் பக்தனுக்குக் கூட்டம் தேவையாகின்றது. 'நீராடப் போதுமீர்!', 'தொண்டீர் எல்லீரும் வாரீர்!' என்னக்கடவதான காதல் அல்லவா? அல்பமான காதல் ராகப்ராப்தமாகும். அதாவது தானே வருவதாகும். ஆனால் பக்தியோ வேண்டிப்பெறப்படுவதாய் இருக்கின்றது. இத்தகைய வேற்றுமைகளும் உணர்வடியாக வந்ததன்று; விஷயமடியாக வந்ததே.

உணர்வடியாக ஒற்றுமை பாரீர். கண்ணொடு கண்சேர்ந்தே, அதாவது உருவம் கண்டே காதல் மலர்கிறது. பக்தனும் முதலில் பகவானின் உருகண்டே பக்தியைப் பெறுகின்றான். காதல் முதிர்ந்தால் தூக்கம் கலைகின்றது; உடல் மெலிகிறது. இது பக்தனுக்கும் பகவதனுபவம் முதிர்ந்த நிலையிலே சிறிது பிரிவு ஏற்படும்போது உருவாகின்றது. காதல் வயப்பட்டவனுக்கும் பக்தனுக்கும் மற்றவிஷயங்களில் ஈடுபாடின்மையைக் காணமுடிகின்றது. ஓர் நிலையில் இருவருமே வெட்கமிழந்து தன் உணர்வை வெளிப்படுத்துவர். 'மொய்மாம்பூம்பொழில்பொய்கை'யின் படியே தன் பக்தியை வெளிப்படுத்தாதவனின் பிறப்பு வீண் அல்லவா? காதலித்தவர்களும் ஒன்றுகூடியபின் பிரிவை விரும்பார்கள். அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றியாயிரம் பல்லாண்டென்பான் பக்தன்.

காதலும் களவொழுக்கமானால் கேடு விளைப்பது. பக்தியும் வகுத்தவிஷயத்திலன்றி ஆகுமாயின் ஜீவனுக்குக் கேடுவிளைப்பதே.

ஆண் பெண்நிலையை (பெண்ணின் மனநிலையை) எய்துதலின் காரணம்:

இலக்கியங்கள் பலவற்றில் சிலர் இவ்வாறான மனநிலையை எய்தியதைக் காணலாம். இரமானின் திருத்தோள்களைக்காணும் எல்லா ஆடவரும் பெண்மையை எய்துவர் எனக் கூறினான் கம்பநாட்டாழ்வான். திருவரங்கத்தந்தாதி என்ற நூலில் பிள்ளைபெருமாள்ஐயங்காரும், 'ராகவா! உன் வடிவழகு கண்டால் மன்மதனும் மடவாராக ஆதரம் செய்வான்' எனக் குறிப்பிட்டுள்ளார். இங்கு 'மடவாளாக' என்னாதே 'மடவாராக' என்று பன்மையில் கூறியுள்ளது ஸௌபரி என்ற ருஷியைப்போலே, மன்மதனும் பலவுடல் கொண்டனுபவிக்கவேண்டும் படியான திருமேனி அழகுடையவன்ராமன்என்றார். மன்மதன்மனம்மாறுவதில்அதிசயமென்! புலனடக்கத்தையே தனக்கு நிரூபகமாகக்கொண்ட யோகிகளுக்கும் இந்நிலைதான் என 'பத்தாயிரம் மன்மதன்களின் அழகைத்திரட்டிய நிலையுடைய கண்ணனின் அழகைக்கண்டு, புலனடக்கம் படைத்துள்ள யோகிகளும் பெண்மையை மனதாலே அடைந்தனர் ' என ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீயாதவாப்யுதயத்தில் அருளிச்செய்தார். தண்டகாரண்யவாஸிகளாயிருந்த ருஷிகளே பின்பு ஆயர் மடவாராக பிறந்தனர் என்று வழங்குவதும் உண்டு. அவ்வாறே பெண்களும் ஆண்மையை (ஆணின் மனநிலையை) எய்தியதையும் காணலாம். த்ரௌபதியின் வடிவழகில் மயங்கிய பெண்கள் தன் மனதால் ஆண்களின் நிலையை அடைந்தனர். இது கூறும் ஸ்வாமி தேஶிகனின் த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்னாவளி ஶ்லோகம்:

पाञ्चालीगात्रशोभाहृतहृदयवधूवर्गपुम्भावनीत्या
पत्यौ पद्मासहाये प्रणयिनि भजतः प्रेयसीपारतन्त्र्यम्।
भक्तिः शृङ्गारवृत्त्या परिणमति मुनेः भावबन्धप्रथिम्ना
योगात् प्रागुत्तरावस्थितिरिह विरहो देशिकास्तत्र दूताः।।

ஆழ்வாரின் ஆராத பக்தி ஆராக்காதலாக வெளிப்பட்டது. தன் பக்தியின் நிலையை சிருங்காரச் செயல்களாலே இலக்கியச் சுவையுடன் வெளிப்படுத்துகின்றார். பக்திக்கும் காதலுக்கும் உணர்வு ஒன்றே. பகவானிடத்திலே லயித்த மனம் ஒருகணம் வெளிவந்தால் அதுவே (காதலனின்) பிரிவாம். அந்த அனுபவம் தொடர்வதே (காதலனுடன்) கலவியாம். பிரியும் போது தூது அனுப்பும் காதலர்களின் நிலையே தான்

பகவானை அடைய ஆசார்யனை அடையும் பாகவதனின் நிலையாம்.

இனி நாயிகாபாவத்தில் பயன்படுத்தப்படும் சில சொற்களுக்கு உள்ளுரைப்பொருள் யாதென அறிவோம். (சில விடங்களிலே இப்பொருள் கொள்ளவியலாது. அவ்வோவிடங்களில் இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள நோக்கம் கண்டு பொருள்கொள்ளவேண்டும்)

1) தலைவன் மற்றும் தலைவி

உள்ளுரைப் பொருள் : தலைவன் என்ற சொல் போஷி/ஸ்வாமியான எம்பெருமானைக் குறிக்கும். தலைவி என்ற சொல் போஷனான/தாஸனான ஜீவனைக் குறிக்கும்.

காரணம்: ஜீவர்களனைவரும் எம்பெருமானுக்கு உரியவர்களாதலும், ஜீவர்களனைவருக்கும் எம்பெருமனைக்குறித்துள்ள அடிமையும், உண்மை நிலையில் ஜீவன் எம்பெருமானின் சேர்க்கையில் இன்பமும், எம்பெருமானின் பிரிவில் துன்பமடையவேண்டியவனாதலும்.

2) முலை / கொங்கை

உள்ளுரைப் பொருள் : பக்தி.

காரணம்: இது பகவதனுபவத்துக்கும் பகவானின் அனுபவத்துக்கும் காரணமாகிறது. ஜீவன் பகவானை அனுபவிப்பதற்கும், பகவான் பக்தனை மஹாத்மா என்கைக்கும் இதுவே காரணமிறே. முலை எவ்வாறு பெண்களுக்கு (स्तनकेशवती नारी என்கிறபடியே) லக்ஷணமாகின்றதோ, அவ்வாறே பகவத்பக்தியே ஜீவனுக்கு அழகு சேர்ப்பது. முலை என்பது பகவத் பக்தியைக் குறிக்குமாயின் 'தடமுலை' (பெரிய முலை) முதலியன பரம பக்தியைக்குறிக்கும்.

3) (மை தீட்டப்பட்ட தலைவியின்) கண்கள்:

உள்ளுரைப் பொருள் : எம்பெருமானைப் பற்றிய அறிவு.

காரணம்: எம்பெருமானைப்பற்றிய அறிவே ஆத்மாக்களுக்கு அழகு சேர்ப்பதாலாகும்.

4) மெல்லிடை / மின்னிடை

உள்ளுரைப் பொருள் : உலகவிஷயங்களில் ஆசையின்மை (விரக்தி)

காரணம்: (இருவருக்கும்) மெலிந்திருப்பதாலும், அழகு சேர்ப்பதாலும்.

5) ஆபரணங்கள்.

உள்ளுரைப்பொருள் : ஒருவனுக்கே ஆட்பட்டிருப்பதைக் (பாரமைகாந்த்யத்தைக்) காட்டும் அடையாளங்கள். ஆத்மகுணங்கள் ஆகவுமாம்.

காரணம் : (இருவருக்கும்) அழகு சேர்ப்பதால்.

6) நீராட்டம்/ சுனையாடுதல்.

உள்ளுரைப்பொருள் : கலவி (பகவதனுபவம்)

காரணம் : சுட்டெரிக்கும் வெயில் காலத்தில் தடாகத்தில் மூழ்கி எழுவது போலே, ஸம்ஸார தாபத்தைப் போக்கிச் ஸுகமளிப்பதிறே பகவதனுபவம்.

7) தூது

உள்ளுரைப்பொருள் : ஆசார்யனின் செயல்.

காரணம்: பகவானைப் பற்றி நமக்கு உபதேஸிப்பதாலும், நம்மை சேர்த்துக்கொள்ளும்படி பகவனை இறைஞ்சுவதாலும்.

8) தூதுவன்

உள்ளுரைப்பொருள் : ஆசார்யன்.

காரணம்: ஏழில் கூறப்பட்டதே.

9) தூதுவிடப்படும் அன்னம்

உள்ளுரைப்பொருள் : ஆசார்யன்.

காரணம்:

1. பாலையும் நீரையும் பிரிக்கும் ஆற்றல் உடையது அன்னம். ஆசார்யன் ஸாராஸாரவிவேகமுடையவன்.
2. அன்னம் வெண்ணிறமானது. ஆசார்யனும் தூய்மையானவன் (வெண்மை தூய்மையைக் குறிக்கும்).
3. அன்னம் நடையழகுடையது. ஆசார்யனும் நடத்தை அழகுடையவன்.
4. அன்னம் சேற்றிலே அமராது. பூவிலேயே அமரும். இவனும் தாழ்ந்தவற்றில் கால் வையான்.

10) தூதுவிடப்படும் குயில்

உள்ளுரைப்பொருள் : ஆசார்யன்.

காரணம்: அழகிய குரலையுடையது. ஆசார்யனும் எம்பெருமானைப் பற்றி மிகவும் இனிமையாகப் பேசுபவன்.

11) கிளி

உள்ளுரைப்பொருள் : ஆசார்யன்.

காரணம்: 1. 'நின்பசுஞ்சாமநிறத்தன்' என்கிறபடியே அழகிய நிறமுடையது. ஆசார்யனும் எம்பெருமானையே நினைப்பதாலும் பேசுவதாலும் எம்பெருமானின் சாரூப்யத்தை அடைந்திருப்பவன் என்பது இதனால் கூறப்பட்டது.

2. கிளிக்கு (பொதுவாக பறவைகளுக்கு) இரு சிறகுகள் உண்டு. இவனுக்கும் ஜ்ஞானம், அனுஷ்டானம் என இரு சிறகுகள் உண்டு.

3. கிளி சொன்னதையே திருப்பிச்சொல்லும். ஆசார்யர்களும், தான்

ஆசார்யனிடமிருந்து கற்றதையே (அவன் கருத்துக்கு வேறுபாடின்றி) தன் ஶிஷ்யனுக்கு உபதேஶிப்பான்.

12) வண்டு

உள்ளுரைப்பொருள் : ஆசார்யன்.

காரணம்: 1. வண்டுகள் பல மலர்களை நாடி மகரந்தத்தை உண்கின்றன. அவற்றால் பூக்கள் வாடுவதில்லை. ஆசார்யனும் வேதநூலுக்குக் கேடின்றி அவற்றின் ஸாரமான பொருளை அனுபவிப்பவன்.

2. 'ஆழிவரிவண்டு' என்றபோது திருவாழி, திருச்சங்கு மற்றும் திருமண்காப்பு தரித்திருப்பதைக்கூறியபடியாம்.

13) தென்றல்

உள்ளுரைப்பொருள் : ஆசார்யன்

காரணம்: ஆசார்யனும் குளிர்ந்தவனாயிருப்பவன். (குளிர்ச்சி, இங்கு நீர்மையைக் குறிக்கின்றது)

14) தலைவன் வேட்டைக்குப் புறப்படுகை

உள்ளுரைப்பொருள் : பகவான் ஹிரண்யராவணாதிஸம்ஹாரத்தின் பொருட்டு நாட்டில் பிறக்கை.

15) தோட்டம் /உத்யானம் /பெய்தகாவு

உள்ளுரைப்பொருள் : லீலாவிபூதி.

16) பூக்கொய்துவிளையாடுகை

உள்ளுரைப்பொருள் : ஜீவன் 'அற்பசாரங்களவை சுவைத்து' என்கிறபடியே விஷயப்ரவணனாகை.

17) தைவயோகத்தாலே கண்கலவியுண்டாவது

உள்ளுரைப்பொருள் : யாத்ருச்சிக ஸுக்ருதமடியாக (தற்செயலாக ஏற்பட்ட புண்ணியத்தின் பலன் அடியாக) வந்த பகவானின் கடாக்ஷம்.

18) தோழிமார்

உள்ளுரைப்பொருள் : பரமபாகவதர்கள் ('தீர்ப்பாரை' என்கிற திருமொழியில் வரும் தோழியை நினைக்கவும்).

19) நீளிரவு

உள்ளுரைப்பொருள் : பகவானை அடைவதில்/அனுபவிப்பதில் ஏற்படும் காலவிளம்பம்.

20) மடலூர்தல்

உள்ளுரைப்பொருள் : பக்தன் பகவானை பலாத்கரிக்கை.

தமிழர்கள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நான்கையும் பெண்மைக்கு இலக்கணமாகக் கூறுவர். அவற்றின் உள்ளுரைப்பொருள்

இதோ:

21) மடம் (அடக்கம்)

உள்ளுரைப்பொருள் : பாகவதர்களின் பவ்யதையைக் காட்டும்.
காரணம்: பெரியோர்கள் ஸன்னிதியில் தன்னை ஏதுமறியாதாரைப் போலே நினைத்தல்/நடத்திக்கொள்ளல்.

22) நாணம் (வெட்கம்)

உள்ளுரைப்பொருள் : பாகவதர்கள் ஏதேனும் தவறு செய்துவிட நேரிட்டால் மனம் வெதும்பி ஒதுங்குவர்.

23) அச்சம் (ஓர் பெண் கணவன், தந்தை முதலியவர்கள் தவிர்ந்த மற்ற ஆடவர் கொண்ட விடத்திற்குச் செல்ல பயப்படுகை) உள்ளுரைப்பொருள் : பாகவதர்கள் அஸாத்விகர்களுடன் கூட பயப்படுகை.

24) பயிர்ப்பு (மற்ற ஆடவர்களின் உடல், துணி முதலியன சிறிது தன்மேல் படுவதையும் அருவருத்தல்/வெறுத்தல்) உள்ளுரைப்பொருள் : தேவதாந்தரஸ்பர்ஶம் ஸஹியாமை. தாழ்ந்தோரையும் அவர்களால் வரும் பொருட்களையும் வெறுத்தலுமாம்.

தமிழர்கள் ஆண்மையின் இலக்கணத்தையும் அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என நான்காய் வகுப்பர். அவற்றின் உள்ளுரைப்பொருள் இதோ:

25) அறிவு (தலைவனின் ஸமீசீன ஜ்ஞானம்)

உள்ளுரைப்பொருள் : எம்பெருமானின் ஸர்வஜ்ஞத்வம் குறிக்கப்படுகின்றது.

26) நிறைவு (தலைவனின் விபூதி).

உள்ளுரைப்பொருள் : எம்பெருமான் உபயவிபூதியைத் தனக்கு ஐஶ்வர்யமாகக் கொண்டிருத்தல் குறிக்கப்படுகின்றது .

27) ஓர்ப்பு (நிரூபண ஸாமர்த்த்யம்)

உள்ளுரைப்பொருள் : எம்பெருமானின் ஸத்யஸங்கல்பத்வம் குறிக்கப்படுகின்றது.

28) கடைப்பிடி(கைவிடாமை)

உள்ளுரைப்பொருள் : தன் காலில் விழுந்தோரைக் கைவிடாமை குறிக்கப் படுகின்றது. பகவான் அச்சுதன் அல்லவா?

இவ்வளவாக அருளிச்செயலிலும் அதன் உரைகளிலுமுள்ள சில சொற்களுக்கு மட்டும் உள்ளுரைப்பொருள் கூறப்பட்டுள்ளன. சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் மட்டுமின்றிக்கே நாயிகாபாவத்திலமைந்துள்ள

திருமொழிகளுக்கும் கூட சமுதாயமாக உள்ளுரைப்பொருள் உண்டு.

எடுத்துக்காட்டாக திருவாய்மொழி நான்காம் பத்து ஆறாம் திருமொழியான ''தீர்ப்பாரை'' என்ற திருமொழிக்கு உள்ளுரைப்பொருள் கூறும் ஸ்ரீநம்பிள்ளையின் அமுதமொழி இதோ:

''இது தன்னில் ஓடுகிறதென்? என்னில்: அஜ்ஞானதசையிலும் தேவதாந்தரஸ்பர்ஶமும் ஸத்தயா பாதகமாய்,பகவந்நாமசங்கீர்த்தனமும் பாகவதஸஹவாசமும் ஸத்தயா தாரகமுமாம்படி ஆழ்வாருக்கு வைஷ்ணவத்வம் முறுகினபடி சொல்லுகின்றது.''

இவ்வாறே ''ஏறாளும்'' எனத்தொடங்கும் நான்காம் பத்து எட்டாம் திருமொழியில், தலைவனால் உபேக்ஷிகப்பட்ட தானும் தன்னுடைமையும் தனக்குத் தேவையில்லை என அந்யாபதேஶத்தாலே அருளிச்செயப்பட்ட திருமொழிக்கு உள்ளுரைப்பொருள் யாதெனவியம்பும் ஸ்ரீநம்பிள்ளையின் ஸ்ரீசூக்தி இதோ: ''அவனுக்குவேண்டாத நானும் என் உடைமையும் வேண்டா எனக்கு'' என்று ஆத்மாத்மீயங்களில் நசையற்றபடியை அந்யாபதேஶத்தாலே அருளிச்செய்கிறார்''.

இந்த திருமொழியின் உள்ளுரைப்பொருளை ஸ்ரீஆளவந்தார் न देहமென்ற ஶ்லோகத்திலே அருளிச்செய்தார்.

அருளிச்செயலின் ஆழங்காண்பது அவ்வளவு எளியசெயலில்லை. இதை எழுதியதற்குக் காரணம், ஆழ்வார் பாசுரங்கள் தமிழ்ப்பாட்டுக்கள்தானே என்ற அலட்சியப்போக்கு நீங்கவும், அவர்களின் திருவுள்ளம் தெரியாவிடின் பண்டிதர்களை அடைந்து தெளிவுபெறவேண்டுமென்ற எண்ணமும் நமக்கு வரவேண்டும் என்பதற்காகவேயாம்.

।। शुभं भूयात् ।।

ஆத்மாபஹாரம்

ஆத்மாபஹாரம் என்ற சொல் ஆத்மாவைத் திருடுதல் என்ற பொருள் படும். முதலில் திருடுதல் என்றால் என்னவென்று பார்ப்போம். திருடுதலுக்கு चौर्यम् *(சௌர்யம்)* என்றும் तस्करता *(தஸ்கரதா)* என்றும் வடமொழியில் சொற்களுண்டு. चोरस्य भावः, अथवा चोरस्य कर्म - திருடனின் செயலுக்கோ அல்லது அவன் எண்ணத்துக்கோ கள்ள(வ)ம் எனப் பொருளாகும். तस्करः என்ற சொல் तत् करोति என்ற விரிவைப்பெறும். அதாவது, 'அதைச் செய்பவன்' என்பதே அச்சொல்லுக்கு நேர்ப்பொருளாம். திருடுதல் மிகத்தாழ்வான செயலாதலால் 'அது' என இங்கு குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், வாலிபத்தை 'அது' என்ற சொல்லால் 'வேதநூல் பிராயம்' எனத் தொடங்கும் பாசுரத்திலே குறிப்பிட்டதைப் போலாமிது.

உலகிலுள்ள அனைத்து மதங்களுமே *(சார்வாக மதம் நீங்கலாக)* திருடக்கூடாது என போதிக்கின்றன. மனிதர்களும் திருடனைக்கண்டால் பயப்படுகின்றனர். அரசாங்கமும் சிறை தண்டனை விதிக்கின்றது. இதனால் அனைவரும் திருட்டை இழிவான செயலாகக் கருதுவது அறியலாகும்.

'अन्यदीय वस्तुनि स्वकीयत्वबुद्धिः - பிறர் பொருளைத் தன்னுடையதாக நினைத்தல்' என்பது கள்வம் எனப்படும். இதனால் ஒருவன் மற்றொருவனின் பொருளைத் தன்னுடையதாகவெண்ணிய நிமிடத்திலேயே திருடனாகிறான் என்பது கூறப்பட்டது. பரம விரக்தனுக்கே இப்படிப்பட்ட எண்ணம் தோன்றாது. ஆனால் பாமரர்களில் பலருக்கு இப்படிப்பட்ட எண்ணம் உதித்தாலும், பய உணர்வினாலோ அல்லது தெய்வ நம்பிக்கையாலோ அத்தகையதன்நினைவைமாற்றிக்கொள்வர். இவர்களும்இருவகைப்பட்ட எண்ணங்களுக்கிடப்பட்ட காலத்திலே திருடர்களேயாவர். ஆயினும் இவர்களின் உணர்வைப் பிறர் அறியவியலாதாகையால் இவர்களைத் திருடன் என யாரும் அழைப்பதில்லை.

மேற்படி எண்ணத்திலே மாற்றம் அடையாதவர்கள் பிறர் பொருளைத் தன்னுடையதாக மாற்றிக்கொள்கின்றனர். இதனால் இவர்களுக்கு காயிகமான சௌர்யமும் ஏற்படுகின்றது. ஆகையால் தற்போதுகாயிகமான திருட்டைப் பின்வருமாறு விளக்குவோம். 'अन्यदीयवस्तुनः तदनुमतिं विना अपहरणम् – பிறர்

பொருளை அவர்களின் அனுமதியின்றி எடுத்துக்கொள்ளல்'. மேலுள்ள விளக்கத்தில், 'तदनुमतिं विना – பொருளையுடையவனின் அனுமதியின்றி' என்ற சொல்லை உற்று நோக்கினால், கோடி ரூபாயை ஒருவன் அனுமதியுடன் எடுத்துக்கொண்டால் அது திருடாகாது. ஆனால் ஒரே ரூபாயாயினும் அது அனுமதியின்றி எடுத்துக்கொள்ளப்படுமானால் அது களவாகக் குறைவில்லை.

பொதுவாக திருடவேண்டுமென்ற எண்ணம் ஏழ்மையாலும் பேராசையாலுமே ஏற்படுகின்றது. பசியால் உயிர்போகும் தருவாயில் ஒருவன் உணவுப்பொருளைத் திருடுவது இயற்கையே. பேராசையால் திருடப்படும் பொருள் சேமித்துவைக்கப்படுவதாய் இருக்கும். காற்றையோ ஒளியையோ யாரும் திருடுவதில்லை. ஏனெனில் அவை எல்லோர்க்கும் எளிதாகக் கிடைப்பதாலும், சேமிக்கமுடியாதவையாய் இருப்பதாலும்.

சேமித்து வைக்கப்படக்கூடிய பொருளானாலும் தன்னால் அனுபவிக்கமுடியாத பொருளை யாரும் களவுகொள்ளமாட்டார்கள். எழுத்தறிவே இல்லாத ஒருவன் புத்தகத்தைத் திருடுவானோ? உலகில் களவினால் பொருளையிழந்தவனையே பரிதாபத்துடன் பார்ப்பர். உண்மையில் திருடனே பரிதாபத்துக்குரியவன். ஏனெனில் திருடன் உண்மையில் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்கின்றான். அவனுக்குத் தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான்மை எப்பொழுதும் இருக்கும். ஒரு பொருளைக்களவு கொள்வதற்கு முன்னும் பின்பும் பயத்திலே இருப்பான் இவன். பின் களவு கொண்ட பொருளைத் தான் பயன்படுத்தும் போதும் மற்றவர்கள் இது நம்முடையதல்ல என்பதை அறிந்துவிடுவார்களோ என்ற பயமும் இவனுக்கு ஏற்படும்.

உலகில் ஒருவன் செய்யும் களவினாலே பலர் பாதிக்கப் படுவதுண்டு. இராவணன் ஸீதையைக்களவுகொண்டதால் இலங்கையே அழிந்ததல்லவா?

ஜீவாத்மாக்களின் ஆத்மாபஹாரம்:

உலகிலுள்ள ஜீவாத்மாக்கள் பிறர் பொருளைத் திருடுகின்றார்கள். களவுக்கு பிறர்பொருளைத் தன்னுடையதாக நினைத்தல் என்று கொடுக்கப்பட்ட விளக்கத்திலே பிறர் என்ற சொல் தன்னைப் போன்ற மற்ற ஜீவாத்மாக்களையும் குறிக்கலாம். அல்லது பகவானையும் குறிக்கலாம். பிறர் என்ற சொல்லுக்கு பகவான் பொருளாகும்போது, அக்களவை ஆத்மாபஹாரம் என்னலாம்.

ஆத்மாபஹாரத்தை விளக்கும் மஹாபாரதத்தின் (சகுந்தலையின்)

ஸ்லோகம் இதோ:

योऽन्यथा सन्तमात्मानं योऽन्यथा प्रतिपद्यते । किं तेन न कृतं पापं? चोरेणात्मापहारिणा ।।

பெருமாளுக்கே உடைமையான தன்னை (ஆத்மாவை) வேறாக (அதாவது ஆத்மா ஸ்வதந்த்ரனென்றோ, அல்லது பகவான் தவிர்ந்த மற்றையோர்க்குரியவனென்றோ) நினைப்பவன், எந்த பாபத்தைத்தான் செய்யாதவன்? என்பது இதன் பொருளாகும். இந்த ஸ்லோகத்தின் பிற்பகுதியை உற்று நோக்கவும். உலகில் பிறன் மனையைத் திருடியவனைப் பணம் திருடியவனென்பதில்லை. அவ்வாறே பணத்தைத் திருடியவனைப் பிறன்மனையைத் திருடியவனென்பதில்லை. ஆனால் ஆத்மாபஹாரியை எல்லாக் களவையும் செய்தவனாக இந்த ஸ்லோகம் கூறுகின்றது. ''किं तेन न कृतं पापं?'' என்ற சொற்றொடருக்கு ''எந்த பாபம் இவனால் செய்யப்படவில்லை?'' எனப் பொருளாகும். இது எவ்வாறு பொருந்தும் எனக் கேள்வி எழலாம். இதற்கு பதிலை ஆத்மாபஹாரத்துக்கும் மற்ற அபஹாரங்களுக்குமுள்ள காரண காரிய நிலையைக்கொண்டு அறியலாம்.

ஒருவன் தன்னை சரியாக உணர்ந்தால், அதாவது பகவானுக்கு தாஸனாக உணர்ந்தால், தான் செய்யும் களவு தன் ஸ்வாமியான எம்பெருமானுக்குத் தன்னிடம் நிக்ரஹத்தை எற்படுத்துமென எண்ணி, பிறர் பொருளில் ஆசைவைக்கமாட்டான். ஆகையால் ஒருவன் தன்னை உள்ளபடியறியாதபோதே பிறர் பொருளைக் களவு கொள்கின்றான். இது கூறும் ஸ்ரீவிஷ்ணுபுராண ஸ்லோகமிதோ:

कनकमपि रहस्यवेक्ष्य बुद्ध्या तृणमिव यस्समवैति वै परस्वम् ।
भवति च भगवत्यनन्यचेताः पुरुषवरं तमवेहि विष्णुभक्तम् ।।

''மனிதநடமாட்டமில்லாத ஓர் காட்டிலே ஓர் பெரிய தங்கக்கட்டி விழுந்துகிடக்க, அதை மனதினால் புல்லெனக் கருதி எடுத்துக் கொள்ளாமல் செல்பவனே புருடர்களில் சிறந்தவனான விஷ்ணுபக்தன் ஆவான்'' என்பது இதன் பொருளாகும்.

விளக்கமுடியாத எதோ ஓர் காரணத்தால் புத்திகெட்டு நாம் பிறர் பொருளைக் களவுகொண்டபின் அதினின்று மீள ஒரே வழியே உளது. ஆதாவது களவு கொண்ட பொருளை அதை உடையவனிடம் திருப்பிக்கொடுத்து மன்னிப்புக் கேட்டலேயாம்.

உலகில் திருடப்பட்ட பொருளின் மதிப்பைப் பொறுத்து தண்டனை வழங்கப்படுகின்றது. ரத்னத்தைத் திருடினால் அதிக தண்டனையும், வைக்கோல் விறகு திருடினால் குறைந்த தண்டனையையும் வழங்குவதைக் காண்கின்றோம்.

உலகில் யாருடைய பொருளைத் திருடுகின்றோம் என்பதன் அடிப்படையிலும் தண்டனை வழங்கப்படுகின்றது. ராணியின் கழுத்திலுள்ள நகையை திருடினால் அதிக தண்டனையும், யாரோ ஓர் பெண்ணிடம் திருடினால் குறைந்த தண்டனையையும் வழங்குவதைக் காண்கின்றோம்.

நாமும் மிக உயர்ந்த ஆத்மா என்கின்ற எம்பெருமானுடைய பொருளை நம்முடையதாக எண்ணி அதன் பயனாக ஸம்ஸாரமென்கிற பெருஞ்சிறையிலே அடைபட்டுக்கிடக்கின்றோம். இதினின்று மீள ஒரே வழி ஆத்மஸமர்ப்பணம் பண்ணுதலேயாம்.

ஓர் நல்ல ஆசார்யன், தன் ஶிஷ்யனுக்கு எம்பெருமானிடம் அதிக பற்றையும் மற்ற பொருள்களில் அதிக விரக்தியையும் ஏற்படுத்தி ஶிஷ்யனைத் திருடனாகாமல் காக்கின்றான். இந்நிலையை ஸ்ரீநம்மாழ்வார் ஸம்பந்தத்தினாலே தாம் பெற்றதாக ஸ்ரீமதுரகவியாழ்வார், ''நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும், நம்பினேன் மடவாரையும் முன்னெலாம், செம்பொன்மாடத் திருக்குருகூர் நம்பிக்கன்பனாய், அடியேன் சதிர்த்தேன் இன்றே'' என அனுஸந்தித்தார். (நம்புதல் என்பதற்கு இங்கு ஆசைபடுதல் என்று பொருள்).

பகவானின் ஆத்மாபஹாரம்:

பகவான் சேதனர்களின் ஆத்மாவைத் திருடுகிறான். அதனால் எம்பெருமானும் திருடனா? அவனும் திருடுதலாகிய நீசத் தொழில் புரிபவனா? என நினைக்கவேண்டாம். சற்று பொறுத்திருக்கவும்.

உலகிலுள்ள சேதனாசேதனங்களனைத்தும் எம்பெருமானின் பொருட்களாகையால், ''பிறர் பொருளைத் தன்னுடையதாக நினைத்தல்'' என்கின்ற களவுக்குக் காட்டிய விளக்கம் அவன் திறத்துப் பொருந்தாது. கண்ணனாய் வெண்ணையுண்டதும், தான் உண்ட மீதியை ப்ரஸாதமாக ஆயர்களுக்குக் கொடுக்கையிலும், அவர்கள் கை பட்ட வெண்ணையைத் தான் அமுதுசெய்வதில் உள்ள ஆசையிலும், தன்னை அவர்கள் அனுபவிக்க ஓர் வாய்ப்பளிக்கையிலும் நோக்குடையது. வெண்ணையும் ஆயர்களும்கூட அவன் பொருள்தானே? கூர்ந்து நோக்கில் அவன் பொருளான வெண்ணையை அவனை உண்ணவிடாமல் தடுத்த ஆயர்களே கள்ளராவார்கள்.

ஸ்ரீநம்பிள்ளை, ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை முதலிய உரையாசிரியர்கள் காட்டும் கண்ணனின் கள்வம் மிகவும் அழகியவொன்றாகும். இதைச்சற்று விளக்குகின்றேன். ஆழ்வார்களுக்கு எம்பெருமானின் திருமேனியில்,

அதுவும் அர்ச்சையில் அதிகக் காதல் உண்டு. ''ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே'' என்று கூறி, திருமேனியைக்கொட மறுத்த எம்பெருமானிடம் ''வாழ்ந்தேபோம் நீரே'' என்றாரே திருமங்கையாழ்வார்!

''सकृत्वदाकारविलोकनाशया तृणीकृतानुत्तमभुक्तिमुक्तिभिः महात्मभिः'' என பகவானின் திருமேனியைக் கண்ணாரக்காணவேண்டுமென்கின்ற ஆசையினாலே புல்லென நினைக்கப்பட்ட போகமோக்ஷங்களையுடைய மஹாத்மாக்கள் என ஸ்ரீஆளவந்தாரருளிச்செய்தது திருமங்கையாழ்வார் போன்றவர்களையேயாம். ''सकृत्वदाकारविलोकनेन'' என்னாதே ''सकृत्वदाकारविलोकनाशया'' என்றருளிச்செய்ததால் போகமோக்ஷங்களை புல்லாகவெண்ண திருமேனியைப் பார்க்கவும் வேண்டா; பார்க்கவேண்டுமென்ற எண்ணமே அமையும் என்பது கூறப்பட்டது.

இனி அருளிச்செயல் உரைகளிலுள்ள சில வாக்யங்களைக் காணலாம்.

1. அவனுடைய ஆத்மாபஹாரமிருக்கிறபடி. (ஆத்மா : சரீரம்)

2. அபஹாரமாவது ஒருவனுக்காயிருக்குமத்தை அவனுக்கு ஆகாதபடி மறைக்கை. ஆஸ்ரிதனுக்கு அனுபாவ்யமான வடிவை அவனுக்குக் கொடாதொழிகையிறே ஈஸ்வரனுக்கு அபஹாரமாவது.

இங்கு ஒன்றை உற்று நோக்க வேண்டும். ஆழ்வார்களின் பகவதனுபவம் ஒப்புயர்வற்றதாய் இருக்கும். இவர்களின் ஸ்ரீஸூக்தியை அனுபவிக்க விரும்பும் நமக்கும் ஓர் தனி மனோபாவம் தேவைப்படுகின்றது. முன்பு நாம் களவுக்குக் கண்ட ''பிறர் பொருளைத் தன்னுடையதாய் நினைக்கை'' அல்லது ''பிறர் பொருளை, அதை உடையவனின் அனுமதியின்றி எடுத்துக் கொள்ளுகை'' என்ற விளக்கங்கள், ''ஒருவனுக்காயிருக்குமத்தை அவனுக்காகாதபடி மறைக்கை'' என மாற்றியருளிச்செய்யப்பட்டுள்ளது.

அதாவது மற்றொருவனால் அனுபவிக்கப்படவேண்டிய பொருளை தான் கவரவேண்டாம். அவனை அப்பொருளை அனுபவிக்கவிடாமல் தடுத்தலும் திருட்டிலே சேரும் என்பது இதனால் அறிவிக்கப்பட்டது. இங்கு மற்றொன்றையும் அறியவேண்டும். நம் பொருளையும்கூட நாம் பிறருக்கென்று ஸங்கல்பித்துவிட்டால், அதன்பிறகு அதை நாமே அனுபவிப்பதும் கூட கள்ளம் தான். எடுத்துக் காட்டாக, நாம் சம்பாதித்த பணத்தை ஓர் தர்மகார்யத்துக்கென்று எழுதிவைத்தபின், அப்பொருளை நாமே அனுபவிப்பதும் திருட்டிலே சேரும்.

இனி விஷயத்திற்கு வருவோம். எம்பெருமானின் திருமேனி எம்பெருமானுடையதுதான். ஆனால் அதனால் அவனுக்கு யாதொரு பயனுமில்லை. அவன் திவ்யமங்களவிக்ரஹத்துடன் எழுந்தருளியிருப்பதே பக்தர்கள் தன்னை அனுபவிப்பதற்காகத்தான். இதைக் கூறும் ஸ்ரீஸ்தவனகரின் ஸ்தோகமிதோ:

''न ते रूपं नचाकारो नायुधानि न चास्पदम् । तथापि पुरुषाकारो भक्तानां त्वं प्रकाशसे ।।

ஹே பகவானே! உன்னுடைய திவ்யாத்மஸ்வரூபமும், திவ்யமங்களவிக்ரஹமும், திவ்யாயுதங்களும், ஸ்ரீவைகுண்டமும் உனக்காகவில்லை. இவையெல்லாம் உன் பக்தர்களுக்காகவே உள்ளது. இப்படி அனைத்தையும் பக்தர்களுக்காகவே கொண்டுள்ள நீ புருஷஸூக்தத்தினால் ப்ரதிபாதிக்கப்படுபவனாயும் எழுந்தருளி இருக்கின்றாய்'' என்பது இதன் பொருளாகும். ''ते रूपं न ते, ते आकार: न ते, ते आस्पदम् न ते, अपि तु भक्ताम् '' என்று அன்வயம் கொள்ளவேண்டும்.

இனி தன் ஆற்றாமையைத் திருமூழிக்களம் என்னும் மலையாளதிவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் அறிவிக்குமாறு தூதுவிடும் ஸ்ரீபராங்குசநாயகியின் பாசுரமிதோ:

''திருமேனியடிகளுக்குத் தீவினையேன் விடுதூதாய்
திருமூழிக்களமென்னும் செழுநகர்வாழணிமுகில்காள்!
திருமேனி அவட்கருளீரென்னக்கால் உம்மைத்தன்
திருமேனி ஒளியகற்றித் தெளிவிசும்புகடியுமே''
(அணி -அழகான ; அடி - ஸ்வாமி)

''ஓ மேகங்களே! பெரும்பாவம் செய்துள்ள நான் உங்களை அழகிய திவயமங்களவிக்ரஹத்தையுடைய ஸ்வாமியிடம் தூதாக அனுப்புகின்றேன். நீங்கள் அவ்வூரிலே வாழும் பாக்யம் பெற்றவர்கள். அவ்வூருக்கு விரைவில் நகர்ந்து செல்லும் பாக்கியம் பெற்றவர்கள். அவனைப்போன்றே அழகிய நிறம் பெற்றவர்கள். அவனிடம் சென்று, 'உனக்கு உன் திருமேனியால் பயனேதுமின்றிக்கேயிருக்க, பக்தர்களுக்ககாவன்றோ திருமேனியுடன் விளங்குகின்றாய். அவ்வாறிருக்க உன்னைக் காணவிரும்பி நீ கிடைக்காததால் மிகவும் மெலிந்து வாடும் தலைவிக்கு நீ உன் திருமேனியை அருளாவிட்டால் நீயும் கள்வனாகாயோ?' என்று கூறுங்கள். ந்யாயம் நம்மிடமிருக்க பயமென்? அவ்வாறு நீங்கள் அவனை கேள்வி கேட்டால் உங்களைத் தண்டித்துவிடுவானா? பார்க்கலாம். என்பது இப்பாட்டின் பா(ஹா)வார்த்தமாகும்.

உண்மையில் உங்கள் நிறத்தையும் மாற்றி ஆகாயத்திலிருந்து

வேறிடத்திற்கு அனுப்பமாட்டான் என்பதை ''தெளிவிசும்புகடியுமே?'' என்பதற்கு, ''கடியாது'' எனப்பொருள் கொண்டறியவேண்டும்.

உண்மையில் எம்பெருமான் கள்வனில்லை. இப்படிப்பட்ட அழகிய அருளிச்செயலாகிய அமுதம் நம்போல்வர்க்குக் கிட்டவேண்டுமென்றெண்ணியே ஆழ்வார்களுக்குத் தன் திருமேனியை கள்வனைப்போலே மறைத்தான். அவர்கள் பாசுரமிட்டபின்பு, ''என் அவாவறச்சூழ்ந்தாயே'' (நீயானபடியே வந்து சூழ்ந்தாய்! என் மனோரதமும் ஒருபடியே முடிந்தது) என்று அவர்களே கூறும்படித் தான் திருமேனியை முழுமையாக கொடுத்தான் என்பது அறியத்தக்கது.

।। शुभं भूयात् ।।

ஆதியான் அடியாரும் அடிமையின்றித் திரிவாரும்

முன்னுரை:

ஸ்ரிய:பதியாலே மயர்வற மதிநலமருளப்பெற்ற ஸ்ரீபெரியாழ்வார் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானின் அடியார்களின் பெருமையையும், அவ்வெம்பெருமானிடம் அன்பு பூண்டு உய்ந்துபோகாமல் பாபிகளாய்த் திரியுமவர்களின் தாழ்வையும் நான்காம் பத்து நான்காம் திருமொழியில் பரக்க அருளிச்செய்துள்ளார். ஸ்ரீவிஷ்ணுபுராணம் மூன்றாவது அம்ஸம் எழாவது அத்யாயத்திலும் பாகவதர்களின் பெருமையும் அபாகவதர்களின் சிறுமையும் பேசப்பட்டுள்ளது. அடியேனின் சிற்றறிவுக் கெட்டினவளவிலே இந்த அத்யாயத்தின் பொருளை இங்கு கூறுகிறேன்.

தலைப்பின் பொருள்:

மேற்குறிப்பிட்ட ஸ்ரீபெரியாழ்வார் திருமொழியின் திருநாமப்பாட்டிலுள்ள சொற்றொடரே இக்கட்டுரைக்குப் பெயராக அமைக்கப்பட்டுள்ளது. இதன் பொருளை முதலில் அறிவோம்.

ஆதியான் : ''स एको नारायण आसीत्, न ब्रह्मा, न ईशान: – படைப்புக்கு முன் நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனோ சிவனோ அன்றில்லை'' என்ற வேதவாக்கின்படி ஆதிபகவனாய் இருந்தவனை ஆதியான் என்ற சொல் குறிக்கிறது.

''अचिदविशिष्टान्प्रलये जन्तूनवलोक्य जातनिर्वेदा ।
करणकलेबरयोगं वितरसि वृषशैलनाथकरुणे त्वम् ।।

திருவேங்கடத்தானின் கருணையே! அசித்தோடொக்க அசித்தாய்க் கிடந்த ஜந்துக்களுக்கு (உபாயானுஷ்டானம் செய்து இவை உஜ்ஜீவிக்கட்டும் என்று எண்ணி) கரணகளேபரங்களைக் கொடுத்தாய்'' என்கிறபடியே படைப்புத் தொழிலைச் செய்தவன் என்றபடி.

அடியார் : ''विचित्रा देहसंपत्तिरीश्वराय निवेदितुम् । पूर्वमेव कृता...'' என்கிறபடியே அவனை அடையக் கொடுத்த கரணகளேபரங்களை அவனை அடைய உபயோகப்படுத்தி தன்யரானவர்கள். அடியார் என்ற சொல்லுக்கு ''பகவச்சேஷத்வஜ்ஞானரஸிகர்'' என ஸ்வாமி தேஸிகனாலே பொருளுரைக்கப்பட்டது. 'भागवत:' (பாகவதன்) என்ற சொல், 'भगवत: अयम्' (பகவத: அயம்) என்ற விரிவைப்பெறும். இதற்கு 'பகவானின் ஸம்பந்தப்பட்டவன்' என்று பொருளாகும். ஆனால்

ஸம்பந்தமெப்படிப்பட்டது என்பதை இச்சொல் விளக்கவில்லை.

உலகிலுள்ள சேதனாசேதனங்களெல்லாம் பகவானின் ஸம்பந்தம் பெற்றவையே. பகவானுக்கு சேதனாசேதனங்களெல்லாம் ஶரீரமல்லவா? அவ்வாறாயின் நாத்திகர்களும் பாகவதன் என்ற சொல்லால் குறிப்பிடப்படவேண்டியவராவர்களே? உலகவழக்கில் நாம் பரமைகாந்திகளையே பாகவதன் என்ற சொல்லால் குறிப்பிட்டுவருவது எவ்வாறு கூடும்? என்ற கேள்வி எழக்கூடும். இதற்கு பதிலாவது, பாகவதன் என்ற சொல்லுக்கு லக்ஷணை(ஆகுபெயர்)யால் பொருள்கொள்ள வேண்டுமென்பதாம்.

அதாவது பாகவதன்என்ற சொல்லுக்கு 'பகவத்ஸம்பந்தமுள்ளவன்' என்று மட்டும் பொருள் கொள்ளாமல் 'பகவச்சம்பந்தஜ்ஞானமுள்ளவன்' எனப் பொருள் கொள்ளவேண்டும்.

இவ்வாறு பொருள் கொண்டாலும் குறையுண்டாம். பகவத்ஶேஷத்வஞானம் ஶாஸ்த்ரம் ஓதியே அறியவேண்டியவொன்றாகும். பாக்யமின்மையால் பக்தியின்மையால் ஶாஸ்த்ரம் ஓதியும் ஶேஷத்வத்தை ஹேயமாக நினைப்பாரையும் உலகில் காண்கிறோம். 'भक्त्या शास्त्रात् वेद्मि जनार्दनम्' *(பக்தியோடு கூடின ஶாஸ்த்ரத்தினால் பகவானை அறிகிறேன்)* என்ற த்ருதராஷ்ட்ரனைக் குறித்த ஸஞ்ஜயனின் வாக்கை நோக்கவேண்டும். அதாவது த்ருதராஷ்ட்ரனுக்கு பக்தியில்லாத வெறும் ஶாஸ்த்ரஜ்ஞானமிருந்ததால் பகவானை உள்ளபடி அறியமுடியாமல் போயிற்று. ஸஞ்ஜயனான தனக்கோ பக்திஸஹக்ருதமான ஶாஸ்த்ரஜ்ஞானமிருந்ததால் பகவானை உள்ளபடி அறியமுடிந்தது என்று இதன் பொருளாகும்.

'வரியடைவே கற்று அவனை அறிந்தவனல்லேன். பக்திஸஹக்ருத ஶாஸ்த்ரத்தாலே அவனை அறிந்தேன்' என்கிறது ஶ்ரீஈடு. அப்படியானால் ஶாஸ்த்ரஜ்ஞானம் தண்ணியதோ என எண்ணவேண்டாம். ஶாஸ்த்ரஜ்ஞானத்தினாலேயே நாம் பகவானை அடைகிறோம். ஆனால் உண்மையான ஶாஸ்த்ரஜ்ஞானத்தை பக்திஸஹக்ருதமில்லாதபோது அடையமுடியாதென்பது தாத்பர்யமாகும்.

ஶ்ரீபாஷ்யகாரரும் 'भवतु मम परस्मिन् शेमुषी भक्तिरूपा' *(பகவானிடத்தில் பக்தி வடிவான அறிவு எனக்கு உண்டாகட்டும்)* என்றார். ஶ்ரீபத்மபுராணமும் 'अहं भक्तिरितिख्याता इमौ मे तनयौ मतौ । ज्ञानवैराग्यनामानौ.....' *(நான் பக்தி எனப்படுபவள் அறிவும் வைராக்கியமும் என் குழந்தைகள்)* என்று ஜ்ஞானவைராக்யங்களை பக்தியின் குழந்தைகளாகக் கூறிற்றிறே. பக்தியின்றி ஶாஸ்த்ரம் ஓதுபவர்கள் தாஸ்யத்தை அறிவார்களேயன்றி

உணரமாட்டார்கள். ஆகையால் இவர்கள் மோஷவ்ருத்தியை (கைங்கர்யத்தை) செய்யவும் இசையார்கள். இப்படிப்பட்டவர்களை பாகவதர் திரளிலிருந்து விலக்கவே ஸ்வாமி தேஶிகன் 'ரஸிகர்' என்ற ஓர் சொல்லையும் இணைத்தார்.

உண்மையான பாகவதர்களோவென்னில் முதலில் மோஷத்வஜ்ஞானம் பெற்று, அதை ரசித்து, பின்பு மோஷவ்ருத்தியை ஆசைப்பட்டு, கைங்கர்யமே யாத்ரையாய், அது கிடையாதபோது ஸத்தைகுலையும்படியாயிருப்பர்.

அடிமையின்றித்திரிவார் : கரணகளேபரங்களை பகவத்வ்யதிரிக்த விஷயங்களை அனுபவிக்க விட்டு, தொண்டுபூண்டமுதமுண்ணாதே தொழும்பராய் மேன்மேலும் பல்பிறவியெடுத்துத் திரிவோர் ஆவர்.

ஶ்ரீவிஷ்ணுபுராணத்தின் பெருமை:

1. ''वेदेषु पौरुषम् सूक्तम् धर्मशास्त्रेषु मानवम् । भारते भगवद्गीता पुराणेषु च वैष्णवम् ।।'' என்று ஒரு ப்ரசித்தமான ஶ்லோகம் உண்டு. வேதத்தில் புருஷஸூக்தமும், தர்மஶாஸ்த்ர நூற்களுக்குள் மனுஸ்ம்ருதியும், மஹாபாரதத்ததில் பகவத் கீதையும், புராணங்களுக்குள் விஷ்ணுபுராணமும் மிகவும் சிறந்தது என்பது இதன் பொருளாகும். ஆகையாலேயே ஶ்ரீஆளவந்தார் இதற்கு புராணரத்னம் எனப் பெயர்சூட்டினார்.

2. ஶ்ரீபாஷ்யகாரரால் இப்புராணம் ப்ரமாணமாக எடுத்தாளப்பட்டுள்ளது.

3. பகவத்விஷயத்தில் - பொதுவாக அருளிச்செயல் உரைகளில் அதிகம் எடுத்தாளப்பட்டுள்ளது.

4. இது ஓர் ஸாத்விகபுராணமாகும். ஸாத்விகபுராணங்களுக்கும் மற்ற புராணங்களுக்கும்மிடையேயுள்ள வேற்றுமைகளாவன:

ஸாத்விகபுராணங்களிலே வ்யக்தி நிர்தேஶம் இல்லாமல்-அதாவது இன்னாரைப்பற்றி பேசவேண்டுமென கேள்வி இல்லாமல் - ''இவ்வுலகிற்கு எது காரணம்?'' என்றாற்போல் கேள்வி கேட்கப்பட்டிருக்கும். இந்த வேறுபாட்டை உணர்த்தவே ஆழ்வார் ''இலிங்கபுராணம்'' என்னாமல் ''இலிங்கத்திட்டபுராணம்'' என்று அருளிச்செய்தார். இங்கு ''இட்ட'' என்ற சொல் ''விஷயமாகக்பட்ட'' என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஸாத்விகபுராணங்களிலே பேச எடுத்துக்கொள்ளப்பட்ட வஸ்துவின் மேன்மை ஸாதிக்கப்பட்டு, அது தவிர்ந்த மற்ற வஸ்துக்களின் தாழ்வும் நிரூபிக்கப்படும். மற்ற புராணங்கள் தான் எடுத்துக்கொண்ட வஸ்துவின் மேன்மையை ஸாதிக்காமலும்,

அது தவிர்ந்த மற்ற வஸ்துக்களின் மேன்மையைக் கழிக்காமலும் முடிவுபெறும்.

ஸ்ரீபராஶரமுனிவரின் பெருமை:

1. स होवाच व्यासः पाराशर्यः (பராஶரரின் புத்ரனான வியாஸனன்றோ சொன்னான்) என்று வேதத்திலே படிக்கப்பட்ட பெருமையையுடையவர் இவர். இங்கு வ்யாஸருக்கு பராஶரரின் மகன் என அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. உலகிலும் ''यस्य स्यात् श्रोत्रियः पिता - எவனுக்குத் தந்தை வேதாந்தமறிந்தவனோ'' எனப்படுவதுண்டல்லவா? வசிஷ்ட - ஶக்தி - பராஶர - வ்யாஸ - ஶுகர் என்னும் ஜ்ஞானபரம்பரையில் நடுநாயகமணியல்லவா இவர்.

2. ஸ்ரீஆளவந்தாரால் ''तत्त्वेन यः .. என்கிற श्लोகத்தில் தத்வத்ரயத்தை நன்கு திறம்படவிளக்கி ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை அருளிய உதாரர் எனப் புகழப்பட்ட பெருமையுடையவர் ஆவார் இவர்.

3. ஸ்ரீபராஶரரின் பெருமையை ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் திவ்யதம்பதிகளே ப்ராப்யரும் ஶரண்யரும் என்பதை விளக்குமிடத்து பின்வருமாறு அருளிச்செய்துள்ளார்:

''देवतापारमार्थ्यं च यथावत् वेत्स्यसे भवान्। पुलस्त्येन यदुक्तं ते सर्वमेतद्भविष्यति''(புலஸ்தியர் சொன்னது பலிக்கும். எது பரதேவதை என்கிற உண்மை அறிவை நீர் பெறக்கடவீர்) என்று புலஸ்த்ய வசிஷ்டப்ரஸாதத்தாலே பரதேவதாபாரமார்த்ய ஜ்ஞானமுடையராய், பெரியமுதலியார் ''तस्मै नमो मुनिवराय पराशराय'' என்று ஆதரிக்கும்படியான ஸ்ரீபராஶரப்ரம்ஹர்ஷி பரக்கப்பேசி ''देवतिर्यङ्मनुष्येषु पुन्नामा भगवान् हरिः। स्त्रीनाम्नी लक्ष्मीर्नैत्रेय नानयोर्विद्यते परम् ।। (தேவர்கள் விலங்குகள் மற்றும் மனிதர்களில் ஆணினம் ஹரியாகும் அவ்வாறே பெண்ணினம் லக்ஷ்மீயாகும். இவ்விருவரையும் தவிர வேறொரு பொருளில்லை) என்று பரமரஹஸ்யயோக்யனான ஸச்சிஷ்யனுக்கு உபதேஶித்தான்.

இனி எடுத்துக்கொண்ட தலைப்புக்கு வருவோம். ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே அடியாரின் பெருமையும் அல்லாதாரின் தாழ்மையும் யமதர்மராஜனுக்கும் அவனுடைய கிங்கரர்களுக்கும் இடையே நடந்த உரையாடலாக அமைந்துள்ளது.

உரையாடலின் விளக்கம்:

இவ்வுரையாடலில் அடியார் என்பவர்கள் யாவர்? அவர்களின் பெருமை எப்படிப்பட்டது? அவர்களின் உள்தோற்றம் எத்தகையது? வெளித்தோற்றம் எத்தகையது? அடியாரல்லார் யாவர்? முதலிய பல

கேள்விகளுக்கு பதில் விளக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமைத்ரேயர் ஸ்ரீபராஶரரைப் பார்த்து ''எத்தகையோர் ஆயுளின் முடிவில் யமனுக்கு வஶப்படுவதில்லை?'' என வினவினார். அதற்கு பதில் கூறும் முன் பண்டே இதற்கு பலர் பதிலளித்துள்ளதை ஸ்ரீபராஶரர் ஸ்ரீமைத்ரேயருக்குக் கூறினார். அதாவது:

1. நகுலனுக்கு ஸ்ரீபீஷ்மரால் கூறப்பட்டது.

2. ஸ்ரீபீஷ்மருக்கு காளிங்கன் - களிங்கநாட்டு அந்தணனொருவரால் கூறப்பட்டது.

3. அந்த அந்தணன் யாருக்கு ஆயுள்முடிவில் யமவஶ்யதை இல்லை என்பதை யமன் தன் கிங்கரர்களிடம் பேசியபோது கேட்டறிந்தவனாவான்.

(காளிங்கன் என்ற அவ்வந்தணன் ஓர் ஜாதிஸ்மரன். அதாவது சக்தி விஶேஷத்தால் முன் பிறவிகளில் நடந்ததை அறியும் இயல்புடையவன். அவன் முன் பிறவியில் நரகத்தில் வாழ்ந்தபோது யமனுக்கும் அவன் கிங்கரர்களுக்கும் நடந்த உரையாடலை நினைவில் கொண்டு ஸ்ரீபீஷ்மரிடம் கூறினான்.)

அவ்வுரையாடலில் 21 ஶ்லோகங்கள் அமைந்துள்ளன. அவற்றின் பொருளை அறிவோம்:

1) स्वपुरुषमभिवीक्ष्य पाशहस्तं वदति यम: किल तस्य कर्णमूले ।
परिहर मधुसूदनप्रपन्नान् प्रभुरहमन्यनृणां न वैष्णवानाम् ।।

பாஶக்கயிற்றைக் கையில் கொண்டுள்ள தன் படனைக் கூப்பிட்டு அவன் செவியில், ''மதுஸூதனனைச் சரணமடைந்தோர்களை அணுகாதீர். நான் மற்றையோர்களுக்கே ப்ரபு! ஸ்ரீவைஷ்ணவர்களுக்கில்லை.'' என யமன் கூறினான் - இது இந்த ஶ்லோகத்தின் திரண்ட பொருளாகும். ஸ்ரீஎங்களாழ்வான் முதல் 45ம் பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர்வரையுள்ள வைணவ ஆசார்யர்கள் கூறும் சொற்சுவை இதோ: (ஸ்ரீமத் அழகியசிங்கர் எல்லா ஶ்லோகங்களுக்கும் பொருள் அருளிச்செய்யாததாலும் (முக்யமான நான்கு ஶ்லோகங்களுக்கு மட்டும் விரிவாக உரையிட்டு மற்ற ஶ்லோகங்களின் பொருளை ஸங்க்ரஹித் தருளியுள்ளார்) ஸ்ரீஎங்களாழ்வான் மிகவும் சுருக்கமாக (ஒவ்வொரு ஶ்லோகத்திற்கும் ஓரிரு வரிகளிலே) வடமொழியில் பொருள் அருளிச்செய்துள்ளதாலும் அடியேன் எழுதவேண்டியதாயிற்று. அவ்விருவரே உண்மையில் விவரணமருளிச்செய்ய ஶக்தராவர். இந்த ஶ்லோகங்கள் மற்றுமுள்ள பெரியோர்களால் அவர்கள் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கேற்ப சிறிது சிறிதாகப் பலவிடங்களிலே

எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அடியேனின் தகப்பனார் ஸ்வாமி இவற்றின் பொருளை அருளிச்செய்ய அடியேன் பன்முறை செவிமடுத்த பாக்யஶாலியாவேன். ஸ்ரீகூரத்தாழ்வான், இங்குள்ள ''कनकमपि..'' (கனகமபி) என்றாரம்பிக்கும் ஶ்லோகத்தைத் திருவுள்ளம் பற்றியே ''यो नित्यम्'' (யோ நித்யம்) மென்ற புருஷவரரான ஸ்ரீபாஷ்யகாரர் தனியனை அருளிச்செய்ததாகவும் சாதிப்பதுண்டு. மற்றும் ஸம்பந்தப்பட்ட பல ப்ரமாணங்களையும் அடியேன் சேர்த்துள்ளேன்.

''पाशहस्तम् - பாஶக்கயிற்றைக் கையில் கொண்டுள்ள'' என்ற கிங்கரனுக்கான அடைமொழி, அவன் தன் செயலில் ஈடுபடத் தயார் நிலையில் இருந்ததைக் காட்டுகின்றது. மற்றும் ''பாஶக்கயிற்றைக் கீழே போட்டு வணங்கிய உடலுடனும் குவித்த கையுடனும் பாகவதர்கள் முன் நிற்கவேண்டும். என் முன் நிற்பதுபோல் பாஶக்கயிற்றுடன் நிற்கவேண்டாம்'' என்பதை இச்சொல் காட்டுகிறது என்றுமாம்.

''स्वपुरुषम् - தன்னுடைய வேலைக்காரனை'' என்றவிடத்துள்ள தன்னுடைய என்ற சொல் பொதுவாக உயர்பதவியிலுள்ளோர் தன் இயலாமையைத் தன் கீழ்ப்படிந்தோரிடம் கூறவிசையாராயினும், வேறு வழியின்றி யமன் தன் இயலாமையைத் தானே கூறமுற்பட்டதைக் காட்டுகிறது.

''अभिवीक्ष्य - சுற்றிலும் பார்த்து'' என்ற இச்சொல் தன்னையும் தன்படனையும் தவிர்ந்து வேறுயாரும் அவ்விடத்து இல்லாமையை உறுதிசெய்துகொண்ட பின்பே ரஹஸ்யத்தை யமன் கூறத் தொடங்கியதைக் காட்டுகிறது.

தர்மத்தின் வழி நடப்பவனும், பக்ஷபாதமற்று காலம் வந்தவாறே உயிரை உடலிலிருந்து பிரிப்பவனும் அன்றோ இப்படிப் பேசுகிறான் என்பது यमः किल वदति (யமனன்றோ) என்ற சொற்களால் காட்டப்பட்டது.

''कर्णमूले - செவியருகில்'' என்ற சொல் தன் கண்ணெதிரில் இல்லாதோர்க்கும் தன் குரல் கேட்கக்கூடாது என யமன் நினைத்ததைக் காட்டுகிறது.

இவ்விடத்தில் 45வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர் மஹாகவி காளிதாஸனின் ரகுவம்ஶமஹாகாவ்ய ஶ்லோகம் ஒன்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

तं कर्णमूलमागत्य रामे श्रीः न्यस्यतामिति । कैकेयीशङ्कयेवाह पलितच्छद्मना जरा ।।

தயரதன் காதருகில் நரைமுடி தோன்றிற்று. அது ''ராஜ்யஸ்ரீயை ராமனிடம் ஒப்படைத்து விடு'' என கைகேயியின் காதில் விழக்கூடாது

என ரஹஸ்யமாகப் பேசக் காதருகில் தோன்றி கூறியதாக ஓர் காரணம் கூறினான். இதுதன்னையே ஸ்ரீகம்பநாட்டாழ்வான் தற்குறிப்பேற்ற அணியில் பாடலாய் அமைத்தனன். அப்பாடலிதோ:

மன்னனே! அவனியை மகனுக்கீந்து நீ
பன்னருந்தவம் புரிபருவமீதெனக்
கன்னமூலத்தினில் கழறவந்தென
மின்னெனக் கருமைபோய் வெளுத்ததோர் மயிர்.

இவ்விடத்துள்ள ஸ்ரீவிஷ்ணுபுராண ஸ்லோகத்திலும், மஹாகவியின் ஸ்லோகத்திலும் உள்ள कर्णमूले என்ற சொல்லின் தமிழாக்கமாகவே (கன்னம் - கர்ணம்) ஸ்ரீகம்பநாட்டாழ்வானின் பாடலிலுமுள்ள ''கன்னமூலத்தினில்'' என்ற சொல்லுக்குப் பொருள்கொள்ள வேண்டும். தமிழ்ச்சொல்லான ''கன்னம் - தாடை'' என்ற பொருள் பொருந்தாது. அப்படியாகில் ரஹஸ்யம் சொல்லவந்ததாகக் கூறமுடியாதல்லவா?

இங்கு நமக்கொரு ஸந்தேஹம் எழ வாய்ப்புண்டு. அஷட்கர்ணமாகக் (ஆறு காதுகள் இல்லாவிடத்துக்) கூறியதை எப்படி காளிங்கனால் கேட்கமுடிந்தது? என்பதாமது. (பரம ரஹஸ்யமான இது உலகோர் அறியவேண்டியது என்ற பகவத் ஸங்கல்பத்தால் காளிங்கன் கேட்டுவிட்டான்) இதற்கு இக்கட்டுரையின் இறுதியில் பதிலை அளிக்கக்கடவோம். அது நிற்க!

சரி. அப்படி யமனால் பேசப்பட்ட ரஹஸ்யம் தான் என்ன? என்பதை ''परिहर मधुसूदनप्रपन्नान् - மதுஸூதனனை அடைந்தவர்களை விட்டுவிலகுங்கள் - அணுகாதீர்கள்'' என்ற சொற்றொடர் காட்டுகிறது. ஏனிதை உரத்த குரலில் பேசக்கூடாது? இதில் என்ன ரஹஸ்யம் உள்ளது? என்பதற்கு உரையாசிரியர்கள் கூறும் பதில்களாவன:

1) தன் இயலாமையை எல்லோருமறிவது தனக்கு இழுக்கு என எமன் எண்ணியது. (''प्रभुभिः स्वप्रभावभङ्गस्थानं न प्रकाश्यम् इति नीत्या ...कर्णमूले कथनम् – ஸ்ரீவிஷ்ணுசித்தீயம்)

2) தான் கூறப்போகும் ரஹஸ்யம் அடியார்களின் பெருமைபற்றியதாதலால், இதை நரகிலுள்ளாரும் செவியுற்று தாங்களும் பாகவதர்களாக முயற்சித்தால் தன் பதவி பறிபோகும் என யமன் எண்ணியது. எல்லோரும் பாகவதர்களானால் நரகம் புல்லெழுந்து ஒழியும் அன்றே.

3) ''ராணியிடம் ஆசைவைக்காதே'' என்ற வார்த்தை அரசன் காதில் விழுந்தாலும் அரசனின் கோபத்திற்கு ஆளாகி தண்டனை பெற

நேரிடும். ஏனெனில் இவ்வாறான எதிர்மறை வாக்கியம் அத்தொழிலில் ஈடுபடுபவனைக் குறித்தே ப்ரயோகிக்கப்படும். ''பாகவதர்களை அணுகாதே'' என்ற வாக்யமும் பாகவதர்களை நலிய எண்ணியவனைக் குறித்தே சொல்லப்படுமாகையால் தண்டனைக்குக் காரணமாகத் தட்டில்லை. ('ராஜதார ப்ராவண்ய நிஷேதமும் பிறர் அறியில் பொல்லாதே' - திருப்பாவை ஆறாயிரப்படி உரை)

இங்கு ஒன்றை உற்று நோக்கவேண்டும். பகவான் உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிய வல்லவன். அவனுக்கு யார் எதற்காக ஓர் விஷயத்தைப் பேசுகிறார்கள் என்பது தெரியாமல் போகாது. அவ்வாறிருக்க மூன்றாவது பதில் உசிதமாகத் தோன்றவில்லை. பின்பு நம் பூர்வர்கள் ஏன் இவ்வாறு உரைசெய்தனர் என்பதை நாம் ஆராயவேண்டும். இ த ற் கு பதிலாவது, அடியார்கள் திறத்து எம்பெருமானுக்குள்ள ஈடுபாட்டையும், அவர்களைப்பற்றிய வம்புப்பேச்சுக்களைக் கேட்டு எம்பெருமான் மிகவும் சீற்றமடைவான் என்பதைக் காட்டவுமேயாம்.

பாகவதாபசாரத்தின் கொடுமையை எண்ணியே, பாகவதாபசாரமும் அக்ருத்யகரணத்தில் அந்தர்பூதமாயினும், பிரித்தெடுத்து ''अकृत्यकरण...भगवदपचार..अपचारान्'' என்று ஸ்ரீபரணாகதிகத்யத்திலே ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தது. ஸ்ரீமத்பாகவதமும், ''आयुः श्रियं यशो धर्मं लोकानाशिष एव च । हन्ति श्रेयांसि सर्वाणि पुंसो महदतिक्रमः ।। - ஆயுள், தர்மம், உலகத்தின் மதிப்பு, புகழ் மற்றுமுள்ள எல்லா உயர்வையும் பாகவதாபசாரம் அழிக்கவல்லது'' என்று ஓதிற்றிறே.

இனி प्रपन्नान् என்ற சொல் ஸ்ரீமந்நாராயணனைச் ஸித்தோபாயமென அறிந்து மஹாவிஶ்வாஸத்துடன் ஸாத்யோபாயத்தை அனுஷ்டித்தவர்களைச் சொல்லுகிறது.

''परिहर'' என்ற ஏவல்வினைமுற்று பாகவதர்களின் கண்பார்வைக்கும் இலக்காக வேண்டாம் என்ற யமனின் எண்ணத்தைக் காட்டுகிறது. அதாவது ஒரு திருடன் எவ்வாறு காவலர்களின் (Police) கண்ணில் படவே பயப்படுவானோ அவ்வாறு இருக்கவேண்டும் என்று ஆணையிட்டுள்ளதைக் காட்டுகிறது. இதையே ஸ்ரீகலியனும், ''வள்ளலே! உன் தமர்க்கு என்றும் நமன் தமர் கள்ளர்'' என்றருளிச்செய்தார்.

மேலும் தன் கிங்கரர்களுக்கு ஓர் ஸந்தேஹமெழ வாய்ப்புள்ளதை அறிந்து யமன், ''प्रभुरहमन्यनृणां न वैष्णवानाम् - நான் மற்றையோர்களுக்கே ப்ரபுவாம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கில்லை'' என்கிறான். அதாவது यमः

(யம:) என்ற சொல்லுக்கு 'எல்லோரையும் நியமிப்பவன்' என்று பொருளாகும். யமயதீதி யமः (யமயதீதி யம:) என்பது யமன் என்ற சொல்லுக்கு விரிவாகும். பின்பு ஏன் நம் தலைவனான யமனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களை நியமிக்கும் அதிகாரமில்லாமல் போயிற்று? என்றதே அந்த ஸந்தேஹமாகும். இதற்கு பதில் கூறவே, தன்னை யமः என்ற சொல்லால் கூறும்போது, ''பாகவதர்களைத் தவிர்ந்த மற்றவர்களை நியமிப்பவன்'' என்றே பொருள்கொள்ளவேண்டும் என்பதை மேற்குறிப்பிட்ட சொற்றொடரால் உணர்த்தினான். யமः என்ற சொல் பகவானின் திருநாமமாக ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் கூறப்பட்டுள்ளதோடு, மனுவும் கீழ்க்கண்ட ஸ்லோகத்தில் பகவானைக் குறித்து அருளிச்செய்துள்ளார்.

यमो वैवस्वतो राजा यस्तवैष हृदिस्थितः। ते न चेदविवादः ते मा गङ्गां मा कुरून् गमः ।।

இதன் பொருளாவது: எல்லோரையும் நியமிப்பவனாயும், ஸூர்யமண்டலத்தில் இருப்பவனாயும், எல்லோர்க்கும் இனியவனாயுமுள்ள எம்பெருமானிடம் உனக்குப் பிணக்கிலையாகில் - அதாவது அவனைக் குறித்து உனக்குள்ள அடிமையை இசைந்தாயாகில், அவன் உன் உள்ளத்தில் குடிபுகுவான். பின்பு நீ கங்கையையும் குருக்ஷேத்ரத்தையும் தேடிச்செல்ல வேண்டாம். (இதனால் க்ஷேத்ரவாஸம், க்ஷேத்ராடனம் முதலியவைகள் பழிக்கப்படவில்லை; எது முக்யம் என்பது கூறப்படுகின்றது.''வதரி வணங்குதுமே'' ''சென்று சேர்மின்களே'' முதலிய அருளிச்செயலுக்கு முரண்படாமல் பொருள் கொள்ளவும்.)

''मृत्युः यस्य उपसेचनम् - எவனுக்கு யமன் ஊறுகாயோ'' என்ற கடவல்லி வாக்யமும் இதையே தெளிவுபடுத்துகிறது.''अत्ता चराचरग्रहणात्'' என்று வ்யாஸரும் ஸூத்ரமிட்டார்.''उपसेचनम् हि नाम स्वयमद्यमानं सत् अन्यस्याप्यदनहेतुः - வேறொரு உணவுப்பொருளை உண்கைக்கு ஸாதனமாய்க் கொண்டு தானும் உண்ணப்படுவதாய் இருப்பது'' என்பது ஸ்ரீபாஷ்யஸூக்தியாகும். எம்பெருமான் யமனை சாதனமாகக் கொண்டு சராசரங்களை ஸம்ஹரித்து பிறகு யமனையும் ஸம்ஹரிக்கிறான் என்பது இவ்வுபநிஷத் வாக்யத்தின் பொருளாகும்.''मृत्युमृत्युं नमाम्यहम्'' ''अमुमाहुः परं मृत्युं ...अग्निरेवावमो मृत्युः'' இத்யாதிகளை இங்கே அனுஸந்திப்பது. இப்ப்ரமாணங்களையே திருமழிசை ஆழ்வாரும் ''ஆதியானவானவர்க்கும் அந்தகாலம் நீ உரைத்தி'' என்று அருளிச்செய்தார்.

திருமழிசைவந்தசோதி இவ்விஷ்ணுபுராண ஸ்லோகத்தை,

திறம்பேன்மின் கண்டீர் திருவடி தன் நாமம்
மறந்தும் புறந்தொழாமாந்தர் -இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.

என்று மொழிபெயர்த்தருளிச் செய்தார். ஆயினும் மாசில்மனந்தெளி முனிவரான பராஶரர் பேச்சுக்கும், மாலுகந்த ஆசிரியரான திருமழிசையாழ்வாரின் வார்த்தைக்குமுள்ள வாசியை உற்றுநோக்கி ரஸிக்க வேண்டும்.

मधुसूदनप्रपन्नान् மதுசூதனனைப் பற்றியவர்களை என்பது ஸ்ரீபராஶரரின் பேச்சு. மறந்தும் புறந்தொழாமாந்தர் என்பது திருமழிசையாழ்வாரின் வார்த்தை.

மதுஸூதனனைப் பற்றாவிடினும் மற்றொருதெய்வம் தொழாதவர்களிடம் செல்லவேண்டாம் என யமனின் ஆணையாக ஆழ்வார் மாற்றியமைத்துள்ளார். இதனால் கைமுதிகந்யாயத்தாலே எம்பெருமானைப் பற்றியவர்களிடமும் செல்லவேண்டாம் என்பதும் தேறுகிறது. மறந்தும் புறந்தொழாமாந்தர் என்றதால் स्वप्नेऽपि केशवादन्यत् न पश्यति महामतिः - கனவிலும் கேஶவனைத் தவிர்ந்து மற்றொன்றைக் காணார்கள்' என்ற ப்ரமாணத்தையும் மொழிபெயர்த்துள்ளார். ஒரு பெண்ணுக்கு, கணவனுக்குச் செய்யும் பணிவிடைகளைவிட வேறுபுருடனிடம் தொடர்பற்றிருக்கையே மிக முக்கியமாம். தேவதாந்தர ஸம்பந்தமற்றோர் கன்னிப்பெண்களை ஒப்பர். அவர்கள் நல்ல புருடனை மணந்துகொள்ளத் தகுதியுடையோர். தேவதாந்தரஸம்பந்தமுடையார் அடியாராகார்.

''திறம்பேன்மின் கண்டீர்'' என்ற சொற்றொடருக்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்யும் அற்புதவிளக்கமிதோ: 'திறம்பேன்மின் கண்டீர்' : 'திறம்பாதே கொள்ளுங்கோள்' என்னும்போது நாலுபத்தோலை மறுக்கவுமாம். இதன் பொருளாவது, தன்னுடைய மற்ற ஆணைகளைவிட இவ்வாணையே மிகவும் முக்கியமானவொன்றாகும். இவ்வாணையை நிறைவேற்ற தனது மற்ற ஆணைகளை மீறலாம் என்றும், தானே தற்போது இட்டுள்ள ஆணையை மீறி நாளை ஓலையனுப்பினாலும் அவ்வோலையை கிழித்துப்போடலாம் என்றும் யமன் கூறினானாம். (It is an unamendable order of highest priority).

2 பேசநின்ற சிவன், 'अहमपि ते दासः - நானுமுனக்குப் பழவடியேன்' என்றான். அவ்வாறே யமன், நான் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் ப்ரபு இல்லை என்பதுமட்டுமின்றிக்கே எனக்கும் எம்பெருமானே ப்ரபு

என்கிறான் இரண்டாவது ஸ்லோகத்தினாலே. அது பின்வருமாறு:

अहममर(गणा)वरार्चितेन धात्रा यम इति लोकहिताहिते नियुक्तः ।
हरिगुरुवशगोऽस्मि न स्वतन्त्रः प्रभवति संयमने ममापि विष्णुः।।

இந்த ஸ்லோகத்தின் முற்பாதியாலே தான் பகவானால் நியமிக்கப்பட்டு ஆத்மாக்களுக்கு நன்மை செய்துபோருமவன் என்கிறான். இவன் செய்யும் ஹிதமாவது ஜீவாத்மாக்களுக்கு அவரவர்கள் செய்த பாபத்திற்குப் பலனாக நரக வேதனையைக் கொடுத்து பாபத்தைக் கழிக்கையாம். இந்த ஸ்லோகத்திலும், 'नियुक्तः – நியமிக்கப்பட்டவன்' 'न स्वतन्त्रः – ஸ்வதந்த்ரமற்றவன்' என்கிற சொற்களால் முன் ஸ்லோகத்தில் கூறியபடியே यमः என்ற சொல்லைத் தன் விஷயத்தில் ப்ரயோகிக்கும் போது பொருள்கொள்ளவேண்டிய முறையை யமன் அனுவதித்துக் காட்டினான்.

இந்த ஸ்லோகத்திலுள்ள धात्रा என்ற சொல் பகவானையே சொல்லும். பிரமனைக் கூறாது. धाता என்ற சொல் வடமொழியில் பிரமனைக் கூறுமாகையால், அதைத் தவிர்க்கவே 'अहममरगणार्चितेन அமரர் குழாங்களால் அர்ச்சிக்கப்படுகிற' என்ற ஓர் அடைமொழியை धात्रा என்ற சொல்லுக்கிட்டான். அமரர்கள் கூட்டத்திலே பிரமனும் ஒருவனல்லவா?

வேதமும் धाता என்ற சொல்லை பகவானைக் குறித்து ப்ரயோகித்துள்ளது. ஸ்ரீமத்ராமாயணத்தில் மந்தோதரி ராமனை ''अनादिमध्यनिधनो महतः परमो महान् । तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः ।।'' என்றாள். धाता என்ற சொல்லுக்கு போஷகன் என்று பொருளாகும். பிரமனையும் போஷிப்பவன் நாராயணனே. தன்னடியார்களைப் போஷிக்கவே சங்கு சக்கரம் அங்கையில் கொண்டானென மந்தோதரி கூறியுள்ளது மிகவும் ரஸமானது.

'हरिगुरुवशगोऽस्मि' என்ற சொல் இருவகையான விரிவைப் பெறும்.அவையாவன: 1) हरेः गुरूणां च वशगः 2) हरिरेव गुरुः, तस्य वशगः முதல் விரிவால் ஹரிக்கும் குருக்களுக்கும் வசப்பட்டவன் என்று பொருள் கிடைக்கிறது. இரண்டாவது விரிவால் ஹரியாகிற குருவுக்கு வசப்பட்டவன் என்ற பொருள் கிடைக்கிறது. முதலில் கூறியது த்வந்த்வ ஸமாஸமாகும். இரண்டாவது கர்மதாரயம் ஆகும்.

முதல் விரிவில் உள்ள குரு என்ற சொல் பாகவதர்களைச் சொல்லும். குரு என்ற சொல் ஆசார்யர்களைப் போன்றே மஹனீயர்களையும் கூறும். ஸாத்விகர்களான பாகவதர்களின் சேர்க்கை மன இருட்டைப் போக்க வல்லது. இவர்களின் சேர்க்கையன்றோ ஆசார்யனிடம் நம்மைக்

கொண்டு செல்கிறது.

ஸ்ரீபெரியாழ்வாரும், ''குற்றமின்றி குணம் பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய் செற்றமொன்றுமிலாதவர்கள்'' என திருக்கோட்டியூரிலிருப்பவரைப் புகழ்ந்தார். இப்பாசுரத்திலும் குரு என்ற சொல் ஆசார்யர்களையும் பாகவதர்களையும் கூறும்.

பாகவதர்களுக்கு இஷ்டவிநியோகார்ஹனாய் இருக்கவேண்டிய நிலையை ''அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே'' என்று ஸ்ரீபெரியாழ்வாரும், ''விலையின்றி நாமடியோம்'' மற்றும் ''ततो नः कैङ्कर्यं तदभिमतपर्यन्तमभवत्'' ஸ்வாமி தேஶிகனும் அருளிச்செய்தாரிறே. அதனால் தன்னை பகவானுக்குமட்டுமின்றி பாகவதர்களுக்கும் தாஸனாக யமன் கூறிக்கொள்கிறான் என்பது தேறிற்று.

இரண்டாவது ஸமாஸத்தால் பகவானுக்குமட்டும் தாஸனாகக் கூறிக்கொள்வதே தேறும். ஆகையால் முதல் ஸமாஸமே மிகவும் பொருத்தமுடையதாகும். அதற்கு நான்கு காரணங்களும் உள்ளன. அவையாவன:

1) த்வந்த்வஸமாஸத்தை ஸமாஸசக்ரவர்த்தி என்பர் வடநூலார். கண்ணனும் பகவத்கீதையில் ஸமாஸங்களில் நான் த்வந்த்வமாயுள்ளேன்என்றான். இப்படிக்கூறுகைக்கு ஓர் நுணுக்கமும் உண்டு. இந்த ஸமாஸத்திலேயே ஸமஸனம் பெறும் இரு (எல்லா) சொற்களுக்கும் ப்ராதான்யமுண்டு.

2) सर्वेस्मै देवा बलिमावहन्ति -பாகவதனுக்கு எல்லா தேவர்களும் (வரிகட்டுகின்றனர்) வசப்பட்டுள்ளனர் என்று வேதமும் ஓதிற்று.

3) பகவச்சேஷத்வத்தின் எல்லை நிலம் பாகவத ஶேஷத்வமாகையால், பாகவதர்களுக்கும் தன்னை வசப்பட்டவனாக யமன் கூறிக்கொள்வது சாலவும் சிறந்ததே.

4) ப்ரகரணபலத்தாலும் (யமனால் தற்போது பேசப்படுவது பாகவதர்களைப் பற்றியிருப்பதாலும்) த்வந்த்வம் யுக்தமாகிறது. இது தன்னால் நல்லடியார் திறத்து ஆதரமிக்கவடிமை இசைந்தவன் யமன் என்பது புலனாகிறது.

(குறிப்பு: இந்த ஶ்லோகத்திலுள்ள यमः என்ற சொல்லுக்கு பதிலாக समः என ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை உரையில் காணக்கிடக்கிறது. இதனால் யமன் பக்ஷபாதமில்லாமல் தன் கடமையாற்றுபவன் என்பது கூறப்பட்டுள்ளது. அவனே பாகவதர்கள் விஷயத்தில் பக்ஷபாதமாகப் பேசுவதால் தன்னை समः எனும்போது பாகவதர்கள் தவிர்ந்த மற்றையோர் விஷயத்தில் நீதிவழங்குவதில் ஸமன் என்று பொருள்கொள்ள

வேணுமென்பதைக் குறிப்பிட்டுள்ளான் என்பது தேறுகிறது.)

3) தன்னை அடைந்தவர்களுக்கு தேவதைகளையும் அடியாராக்குகிற எம்பெருமானின் பெருமையை மேலிரண்டு ஸ்லோகங்களினால் யமன் வெளிப்படுத்தும்விதம் இதோ:

कटकमकुटकर्णिकादिभेदैः कनकमभेदमपीष्यते यथैकम् ।
सुरपशुमनुजादिकल्पनाभिः हरिरखिलाभिरुदीर्यते तथैकः ।।

''எவ்வாறு ஒரே தங்கக்கட்டியே கடகம், மகுடம் மற்றும் செவிப்பூ முதலிய பல ஆபரணங்களாக மாற்றமடைகிறதோ அவ்வாறே பரப்ரம்ஹமொன்றே தேவமனுஷ்யாதி நாமரூபங்களையுடையதாக மாறுகின்றது'' என்பது மேலெழுந்தபடி நோக்கில் கிட்டும் பொருளாகும்.

இது அத்வைத ஸித்தாந்தத்தைக் காட்டுவதாகப் பலர் ப்ரமிக்கவும் கூடும். ஒன்றை நாம் இங்கு மனதில் கொண்டு இவ்வாறான பாடல்களுக்குப் பொருள் கொள்ளவேண்டும். ஸ்ரீபராஶரர் முதலியோர் வேதத்தின் விழுமிய பொருளையே புராணவடிவில் கூறவந்தவர்கள். ஆகையால் அவர்களின் ஸ்லோகங்களுக்குப் பொருள் கூறுமுன் அவர்களின் முன்பின் வாக்யங்களையும் பல வேதவாக்யங்களையும், வேதத்தின் எப்பகுதியை உபப்ரும்ஹணம் செய்வதாய் அவர்களின் தற்போதைய ஸ்லோகம் அமைந்துள்ளது என்பதையும் மனதில் கொண்டே பொருள் உரைக்கவேண்டும். இப்படி ஆராயப்புகில் இந்த ஸ்லோகம் சாந்தோக்யோபநிஷத்தில் உள்ள ஸத்வித்யாப்ரகரணத்தின் விஷயத்தை விளக்குவதாகவே அமைந்துள்ளது புலனாகும். ஆங்குள்ள உதாரணத்தையும் மாற்றாமல் ஸ்ரீபராஶரர் அருளிச்செய்தது இதற்குச் சான்றாகும்.''यथा सौम्येकेन लोहमणिना सर्वं लोहमयं विज्ञातं स्यात्'' ''यथा सौम्येकेन मृत्पिण्डेन सर्वं मृन्मयं विज्ञातं स्यात् '' முதலிய அவ்வுபநிஷத் வாக்யங்களின் போக்கிலே அமைந்தது இப்பாடலும். எல்லா உபநிஷத்துக்களையும் விட சாந்தோக்யோபநிஷத்திற்கு ஓர் தனி ஏற்றமுண்டு. உபநிஷத்துக்களுக்குள்ளும் ஏற்றத்தாழ்வு கூறுதல் முறையல்ல. எல்லாம் வேதம் தானே என நினைக்கலாம். உண்மைதான். ஆயினும் சில உபநிஷத்துக்கள் மிகவும் ஸங்க்ரஹமாக அமைந்திருப்பதால் நம்போலியர்க்கு அதின் பொருள் எளிதில் விளங்குவது கடினம். அவற்றின் பொருளையும் சாந்தோக்யோபநிஷத் போன்ற எடுத்துக்கொண்ட பொருளை மிகவும் விவரித்துக் கூறும் உபநிடதங்களின் உதவியாலேயே உணரமுடிகிறது. இந்நோக்கிலே ஏற்றம் கூறுவது தவறாகாது.

ஸத்வித்யாப்ரகரணம் ஸூக்ஷ்மசிதசித்ஶரீரியாய் இருக்கும் ப்ரம்ஹமே காரணம் என்றும் அதுவே ஸ்தூலசிதசித்ஶரீரியாய்

கார்யாவஸ்தையில் ஜகத்தாய் நிற்கிறது என்றும் தெளிவாய் ஓதிற்று.

பாலகன் ஶரீரத்திலுள்ள ஜீவனே யுவா, கிழவன் என்ற பெயரையும், வயதுக்குத்தக்க தோற்றத்தையும் பெறுகிறான். ஆனால் தோற்றத்திலோ பெயரிலோ உள்ள வேற்றுமை ஜீவனில் பேதத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. யௌவனாவஸ்தையை அடைந்த ஜீவனுக்கு பால்யாவஸ்தையிலிருந்த ஜீவனே காரணமாகிறான். இவ்வாறே ஸ்தூலநிலையிலுள்ள ஜகத்துக்கும் ஸூக்ஷ்மநிலையிலிருந்த ப்ரம்ஹமே காரணமாகிறது. இதனால் இருநிலையையடைகிற உலகிற்கு இருநிலைகளிலும் ப்ரம்ஹமே ஶரீரியாயுள்ளது (ஆத்மாவாயுள்ளது) என்பது தேறிற்று.

तत्त्वमसि என்ற வாக்யத்திலுள்ள तत् என்ற சொல் சூக்ஷ்மநிலையில் சிதசித்ஶரீரியாயிருந்த ப்ரம்ஹத்தைக் கூறிற்று. त्वम् என்ற சொல் ஸ்தூலநிலையில் சிதசித்ஶரீரியாய் இருக்கிற - (ஶ்ரீவேதகேது என்கிற நாமரூபத்துடன் விளங்குகிற ஜீவனுக்கும் ஆத்மாவயுள்ள) ப்ரம்ஹத்தைக் கூறிற்று. असि என்ற வினைச்சொல் இவ்விரு நிலைகளிளும் உள்ள சிதசித்துக்களுக்கும் ஆத்மாவாய் உள்ள ப்ரம்ஹம் ஒன்றே என்பதைக் காட்டியது. அதாவது இருநிலைகளிலுள்ள ப்ரம்ஹத்திற்கு அபேதம் கூறப்பட்டதேயன்றி சிதசித்துக்களுக்கும் ப்ரம்ஹத்திற்கும் அபேதம் கூறப்படவில்லை என்றபடி.

மற்றுமோர் நுண்ணிய விஷயத்தை இங்கு நாம் மனதில் கொள்ளவேண்டும். உபநிஷத்திலும், இந்த ஶ்லோகத்திலுமுள்ள உவமையை மட்டும் மனதில் கொண்டு ப்ரம்ஹம் ஜகத்துக்கு உபாதான காரணம் (Material Cause) மாத்திரமே என்று இங்கு கூறப்படுவதாய் எண்ணவேண்டாம். உபநிஷத்திலுள்ள அத்விதீயம் என்ற சொல்லைப்போல் இந்த ஶ்லோகத்திலுள்ள ஏக சப்தமும் பகவானைத் தவிர்ந்த மற்றொன்று ஜகத்திற்கு நிமித்தகாரணமில்லை (Intellectual cause) என்பதைக் காட்டுகிறது. இதனால் ப்ரம்ஹமே ஜகத்திற்கு உபாதான காரணமுமாயும் நிமித்தகாரணமுமாயும் உள்ளது என்றபடி.

4) படைக்கப்பட்ட பொருட்கள் ப்ரளயதசையிலே அவனிடமே லயமடைவதை கீழ்வரும் ஶ்லோகம் கூறுகிறது.

क्षितितलपरमाणवोऽनिलान्ते पुनरपि यान्ति यथैकतां धरित्र्याः ।
सुरपशुमनुजातयः तथान्ते गुणकलुषेण सनातनेन तेन ।।

ஸுபாலோபநிஷத்திலுள்ள तमः परे देव एकी भवति என்ற வாக்யவிஷயத்தை

இந்த ஸ்லோகம் கூறுகின்றது.

(குறிப்பு : 1. अनिलः என்ற சொல் காற்றைக் குறிக்கும். ஓரிடத்தில் நில்லாதது என்ற பொருளுடைய காரணச் சொல்லாகும். 2. முக்குணங்களின் ஸாம்யாவஸ்தையில் ப்ரளயம் ஏற்படும். விஷமாவஸ்தையில் படைப்பாகும்)

பூமியிலுள்ள மிகச்சிறிய துகள்கள் காற்றடித்தவாறே ஆகாயத்தில் பறந்து பரவியும், காற்று நின்றவாறே மீண்டும் பூமியில் விழுந்து ஒன்றாவதும்போல், படைக்கப்பட்ட பொருட்களெல்லாம் ப்ரளயதசையில் பகவானுடன் ஒன்றிவிடுகின்றன என்பது இந்த ஸ்லோகத்தின் பொருளாகும்.

மேல் ஸ்லோகத்தால் பகவானின் மோக்ஷப்ரதத்வம் பேசப்படவிருக்கிறது. ஆகையால் ''जन्माद्यस्य यतः'' என்ற ஸூத்ரத்தின் பொருள் பேசப்பட்டதாயிற்று. அதாவது ஜகத்ஜன்மாதிகாரணம் ப்ரம்ஹலக்ஷணம் என்றபடி. அதுவே உபாஸ்யமுமாம் என்றபடி.

5) அடியார்களைவிட்டு பகவானையும், பகவானைவிட்டு அடியார்களையும் பற்றி பேசமுடியாதாகையாலே, அடியார்கள் பெருமையைப் பேசிவரும் வேளையில் மேலிரண்டு ஸ்லோகங்களினாலே பகவானின் பெருமைபேசி ஸிம்மாவலோகன ந்யாயத்தாலே மீண்டும் அடியார்களின் பெருமையைப் பேசத்தொடங்குகின்றான்.

हरिमर(गणा)वरार्चितांघ्रिपद्मं प्रणमति यः परमार्थतो हि मर्त्यः ।
तमपगतसमस्तपापबन्धं व्रज परिहृत्य यथाग्निमाज्यसिक्तम् ।।

''मोक्षमिच्छेत् जनार्दनात् - மோக்ஷத்தை ஜனார்தனனிடமிருந்து விரும்புவாயாக'' என்கிறபடியே பகவானே மோக்ஷத்தை அளிக்கவல்லவன் என்பது இதனால் கூறப்படுகின்றது. இந்த மோக்ஷப்ரதத்வம் என்ற குணம்,''हरिः हरति पापानि दुष्टचित्तैरपि स्मृतः - கெட்ட எண்ணமுடையவர்களாலும் தான் நினைக்கப்பட்டால் (கட்டடிக்கப் புல்லு விலகுமாப்போலே) பகவான் பாபத்தைப் போக்கக்கூடியவர்'' என்கிறபடியே ஹரிஸ்தத்தாலும், ''अपगतसमस्तपापबन्धम् - போக்கடிக்கப்பட்ட அனைத்துபாபத்தின் கட்டையுடையவர்கள்'' என்ற மனிதனுக்கிட்ட அடைமொழியாலும் கூறப்பட்டது.

இங்குள்ள प्रणमति என்ற சொல் முதல் ஸ்லோகத்திலுள்ள प्रपन्नान् என்ற சொல்லையும், த்வயமந்த்ரத்திலுள்ள प्रपद्ये என்ற தன்மை ஒருமை வினைமுற்றையும், திருமந்த்ரத்திலுள்ள உபாயபரமான नमः என்ற சொல்லையும், சரமஸ்லோகத்திலுள்ள व्रज என்ற ஏவல் வினை

முற்றையும் கூறுகிறது.

परमार्थतः என்ற சொல் கர்மயோகஜ்ஞானயோகங்களை அங்கமாகக் கொண்ட பக்தியோகத்தை அனுஷ்டித்து வீடுபெறவியலாமல், உபேயமான பகவானையே பக்தியோகஸ்தானத்திலே நிறுத்தி - அதாவது உபாயமாக வரித்து ஒருமுறை அனுஷ்டிக்கப்படவேண்டிய ப்ரபத்தியோகத்தின் ஸ்வரூபமறிந்த அதிகாரியைக் காட்டுகிறது.

இங்குள்ள अपगतसमस्तपापबन्धम् என்ற சொல் ''सर्वपापेभ्यो मोक्षयिष्यामि - எல்லா பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்'' என்ற சரமஶ்லோகத்தின் சொற்றொடரைக் குறிக்கிறது. மோக்ஷவிரோதியான புண்யமும் பாபதுல்யமாகையாலே தனித்து புண்யஶப்தப்ரயோகம் இங்கு செய்யப்படவில்லை. ஐஹிக ஆமுஷ்மிக ஸுக ஹேதுவான புண்யங்களை பொன்னாலான விலங்கென்று ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்தாரிறே. இவை நரகவேதனையைப்போலேயின்றி ஸுகரூபமாயிருந்தாலும் நிரதிஶயானந்தரூபமான மோக்ஷத்திற்கு தடையானது பற்றி அவ்வாறு கூறப்பட்டது. ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலேயே புண்யபாபங்களிரண்டும் மோக்ஷத்திற்கு தடையானது என்பதை சிந்தயந்தீ என்ற கோபிகையின் நிலையினாலே ஸ்ரீபராஶரர் வெளியிட்டருளினார்.

तच्चित्तविमलाह्लादक्षीणपुण्यचया तथा । तदप्राप्तिमहादुःखविलिनाशेषपातका ।।
चिन्तयन्ती जगत्सूतिं परब्रह्मस्वरूपिणम् । निरुच्छासतया मुक्तिं गताऽन्या जोपकन्यका ।।

அதாவது சிந்தயந்தீ என்ற கோபிகை கண்ணனிடம் கொண்ட ஆராக்காதல் பேரின்பத்தால் புண்யமெல்லாம் கழியப்பெற்றாள். (அதாவது பகவானிடம் காதலுண்டாக அதிகபுண்யம் செய்திருக்கவேண்டும் என்றபடி) அவளின் புனிதமான காதலைப் புரிந்துகொள்ளமுடியாமல் போன வீட்டிலுள்ள பெரியோர்களால் தடுக்கப்பட்டு கண்ணனின் ஸமகாலத்தே (''வையத்து வாழ்வீர்காள்!'' என ஸ்ரீஆண்டாளும், ''இருந்த ஊரிலிருக்கும் மானிடசாதியர் எத்தவங்கள் செய்தார்களோ!'' மற்றும் ''நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர்! என்று ஸ்ரீபெரியாழ்வாரும் ஸம்போதிக்கும்படியான பேறுபெற்று) வாழ்ந்தும் அவனுடைய திவ்யமங்களவிக்ரஹத்தைக் கண்டுகளிக்கமுடியாத பெருந்துன்பத்தினால் பாபங்களெல்லாம் கழியப்பெற்றாள். அவளைப் போன்ற பரமபக்தியுக்தளுக்கு கண்ணனின் வேணுகானம் மட்டும் காதில் பட ஆயினும் அவன் உருவம் கண்ணில் விழாமல் போகும்படியான நிலையிலும் வேறொன்று சித்ரவதையாகுமோ? (சிந்தயந்தீ முதலான இடைச்சிகள் முன்ஜன்மங்களில் ஓர் உபாயவிஶேஷத்திலே மூண்டு ப்ராரப்தகர்மவிஶேஷங்களினாலே சில ஜன்மங்கள் பெற்று அந்திம

ஶரீரமாக இடைச்சிகளாய்ப் பிறந்து மோக்ஷமடைந்த மஹநீயர்கள் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இடைச்சிகளில் சிலர் ராமாவதாரத்தில் ருஷிகளாய் (பெண்ணுடையுடுத்து திவ்யமங்களவிக்ரஹத்தை அனுபவிக்க ஆசைப்பட்டவர்கள்) இருந்தவர்கள் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

''हरिममरगणार्चितांघ्रिपद्मम्'' என்றது பிரமன் முதலான எல்லா தேவதைகளாலும் கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம் தீபம்கொண்டு தொழும்படியான திருவடிகளையுடையவன் எம்பெருமான் என்பதைக் கூறிற்று. இதனால் திருவடிகளின் போக்யத்வமும் எம்பெருமானின் பரத்வமும் ஸூசிக்கப்பட்டன.

मर्त्य ஶப்தம் இறப்பதற்கே பிறக்கிற மானிடஜாதியைக் குறிக்கிறது. अमर ஶப்தம் நெடுநாள் வாழும் அமரரைச் சொல்லிற்று. இப்படி வெகுநாள் வாழுமமரரோடு சிலநாள் வாழும் மானிடரோடு வாசியற மோக்ஷம் பெற வேண்டியடையப்படவேண்டிய பொதுநின்ற பொன்னங்கழல்களையுடையவன் எம்பெருமான் என்பது கூறப்படுகின்றது.

यथाग्निमाज्यसिक्तम் என்பது யமபடர்கள் எவ்வாறு பாகவதர்களை விட்டு வெகுதொலைவு செல்லவேண்டும் என்பதற்கு உவமையாகும். அதாவது ஹோதாவானவன் ஹோமம் செய்வதிலுள்ள ஆர்வத்தால் அக்னியருகில் உட்கார்ந்து ஹோமம் செய்யும்போது, நெய்யுடன் கூடிய அக்னி கொழுந்துவிட்டெரியும்போது ஹோமகுண்டத்தைவிட்டு எவ்வாறு விலகிநிற்பானோ அவ்வாறே ப்ரபன்னர்களின் பெருமையறியாது அவர்களை அணுகவாசைப்பட்டாலும், அவர்களின் பெருமையை தற்போது அறிந்துள்ள நீங்கள் வெகுதூரம் விலகிச் செல்லுங்கள் என யமன் பணிக்கிறான்.

6) இவ்வாறு கூறிய யமனைக் குறித்து, ''சரி. நாங்கள் அப்படியே செய்கிறோம். ஆனால் நாங்கள் முதலில் பாகவதர்களை அறிந்தபின்பன்றோ அவர்களை விட்டு விலகவியலும். ஆகையால் அடியார்களை எப்படி அறிவது என்பதை விளக்கவேண்டும்'' எனக் கேட்டனர் யமபடர்கள். ஶ்ரீபகவத்கீதையில் அர்ஜுனன் மூன்று குணங்களையும் தாண்டியிருப்பவனுடைய அடையாளங்களையும் ஆசாரங்களையும் விளக்குமாறு (कैर्लिङ्गैः किमाचारैः (கீதை 14-21) என்று) கண்ணனிடம் கேட்டான். कैर्लिङ्गैः என்றதனால் அவ்வதிகாரியின் மனதின் ஶாந்தி முதலியவைகளும், किमाचारैः என்றதனால் அவன் வெளிநடத்தையும்

கேட்கப்பட்டது. அர்ஜுனனின் கேள்வியின் நோக்கிலே அமைந்ததாம் யமபடனின் இக்கேள்வியும். அவர்களின் வார்த்தை இதோ:

इति यमवचनं निशम्य पाशी यमपुरुषस्तमुवाच धर्मराजम् ।
कथय मम विभो! समस्तधातुः भवति हरिः खलु यादृशोऽस्य भक्तः।।

இந்த ஸ்லோகத்திலுள்ள தர்மராஜன் என்ற சொல் யமனைக் கூறுகிறது. ஸ்ரீபொய்கையாழ்வாரும், ''உயிரும் தருமனையே நோக்கும்'' என யமனை தருமன் என்ற சொல்லால் குறித்துள்ளதை நோக்கலாம். மேலுள்ள பதினைந்து ஸ்லோகங்களினால் (7முதல் 21வரை) யமன் ஸ்ரீவைஷ்ணவர்கள் எத்தகையோர் என்பதை விளக்குகின்றான். இடையே நான்கு ஸ்லோகங்களினால் (15முதல் 18வரை) அவைஷ்ணவர்களின் தன்மையையும் கூறுகின்றான். அதாவது அந்வயத்தாலும் வ்யதிரேகத்தாலும் வைஷ்ணவர்களின் லக்ஷணம் கூறப்படுகின்றது.

7) न चलति निजवर्णधर्मतो यः सममतिः आत्मसुहृत् विपक्षपक्षे ।
न हरति न च हन्ति किंचिदुच्चैः सितमनसं तमवेहि विष्णुभक्तम् ।।

வர்ணாஸ்ரமதர்மத்தை விட்டு சிறிதும் விலகாமை முதல் வைஷ்ணவ லக்ஷணமாகக் கூறப்பட்டுள்ளது. ''जगत् कर्तुः महेशस्य दिव्याज्ञाकारिणो वयम् । इति नित्यक्रिया कुर्युः नरा ये वैष्णवास्तु ते ।। - ஜகத்கர்தாவான பகவானின் திவ்யாஜ்ஞை என எண்ணி எவர்கள் நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்கிறார்களோ அவர்களே வைஷ்ணவர்கள் ஆவர்'' என்பது இதன் பொருளாகும்.

ஸ்ரீபராஸரராலேயே, वर्णाश्रमाचारवता पुरुषेण परःपुमान् । विष्णुराराध्यते पन्थाः नान्यः तत्तोषकारकः ।। வர்ணாஸ்ரமதர்மத்தை அனுஷ்டிக்கும் புருடனால் விஷ்ணு ஆராதிக்கப்படுகின்றான். பகவானை சந்தோஷப்படுத்த வேறுவழிகள் கிடையாது'' என்று கூறப்பட்டுள்ளது. மற்றும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலேயே இதே அம்சத்தில் மேலுள்ள அத்யாயங்களில் (8முதல் 12வரை)வர்ணாஸ்ரமதர்மங்களைப் பற்றியும் ஸம்ஸ்காரங்களின் அவசியத்தைப் பற்றியும் ஸ்ரீபராஸரர் பரக்கப் பேசியுள்ளார் என்பதையும் அறியவேண்டும். க்ருஷ்ணனையும் பலராமனையும் கம்சனிடம் அழைத்துச் செல்லும் வழியில் ஸ்ரீஅக்ரூரர் ஆன்னிக கர்மாக்களைச் செய்தமை போன்றவற்றை ஸ்ரீபராஸரர் அருளிச்செய்ததும் கர்மானுஷ்டானத்தின் முக்யத்வத்தை உணர்விக்கவேயாம். இவருக்கு ''कृतपूर्वाह्निकक्रियम्'' என அடைமொழியிடப்பட்டதிறே. அனுஷ்டானமேயின்றி ப்ரவசனம் பண்ணுவோர் உணர்ந்து திருந்தவே இவ்வடைமொழியாம்.

ஆகையால் ''सर्वधर्मान् परित्यज्य - எல்லா தர்மங்களையும் விட்டு'' என்ற சரமஸ்லோகத்திலுள்ள सर्वஶப்தத்தாலே வர்ணாஸ்ரமதர்மங்கள் கழிக்கப்படவில்லை என்பது தெளிவாம்.

வர்ணாஸ்ரமதர்மங்களை அறியாமலேயே வாழ்ந்து வருகின்றோம். அறிந்தபின்பன்றோ அனுஷ்டிப்பது? இந்நிலையில் நாம் வைஷ்ணவனா? என்ற கேள்விக்கு பதில் ''இல்லை'' எனவே இருக்கும். வர்ணாஸ்ரமதர்மங்களை அறிந்து அனுஷ்டிக்க நினைப்போர்க்கும் உற்றாரும் சுற்றமும் உதவுவதில்லை. ''மனதால் சுத்தமாக இருந்தால் போதும்'' என்ற வெட்டிப்பேச்சைப் பேசி பலர் தான் செய்யும் தவற்றை நியாயப்படுத்திக் கொள்கின்றனர். வர்ணாஸ்ரமதர்மங்கள் மக்களைப் பிளவு படுத்துவதாகக் கூறப்படும் பொய்ப்ரசாரங்களுக்கும் பஞ்சமில்லை. உண்மையில் இவை மனித இனத்தை ஒன்றுபடுத்தவே வந்தவை என்பதை ஶாஸ்திரம் கொண்டு உணரலாம்.

புருஷஸூக்தத்தில் வர்ணத்தைப்பற்றி பேசப்படுவதால் அதையும் வெறுக்கின்றனர். வர்ணாஸ்ரமதர்மங்கள் ப்ராம்ஹணர்களால் தாங்கள் பிழைப்பதற்காக எழுதிவைக்கப்பட்டவை என்று கூறுபவர்கள், க்ஷத்ரியர்கள் தேசத்தை ஆளவேண்டும் எனவும் ப்ராம்ஹணர்கள் உஞ்ச வ்ருத்தியால் பிழைக்கவேண்டுமெனவும் எழுதிவைத்திருப்பார்களா என்பதை சற்று யோசிக்கவேண்டும். மற்றவர்களை ஆளவேண்டுமென்றல்லவா மனிதன் ஆசைப்படுவான். அது நிற்க!

सममतिः आत्मसुहृत् विपक्षपक्षे : எல்லாம் பகவானின் விபூதி என்கிற எண்ணமுடையவனாயிருப்பதால் தனக்கு அனுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற எல்லோரிடமும் ஒரே மனதுடன் இருந்து, தனக்கு தீங்கிழைப்போர்க்கும் நன்மையே விரும்புபவனாய் பாகவதன் இருப்பான் என்பது இதனால் கூறப்பட்டது.''भूतसुहृत्तमान् ..नमस्ये शिरसाऽसकृत्'' இத்யாதி ப்ரமாணங்களில் இது ஸ்பஷ்டம்.

न हरति : மற்றவர்களின் பொருளை இவன் அபஹரிப்பதில்லை. இது ஒன்பதாவது ஸ்லோகத்தில் விவரிக்கப்படவிருக்கிறது.

न हन्ति : மற்ற உயிர்களை இவன் கொல்லமாட்டான். ஹிம்சிக்கமாட்டான். ஏதோ ஒரு பாம்பு ஏதோ ஒரு தவளையை முழுங்கமுற்பட்டபோது தவளையின் குரல் கேட்டு நம்மைக்கண்டு தன்னைக் காக்கவேண்டிதான் வேண்டுகிறதோ என மிகவும் வருந்தின ஸ்ரீகூரத்தாழ்வானை நினைப்பது.

இவன் மட்டும் இவ்வாறிருக்க என்ன காரணம்? என்பதை ''उच्चैः

सितमनसम्'' *என்ற சொற்றொடர் காட்டுகின்றது. மிகவும் வெண்மையான மனதுடையவன் என்பது இதன் பொருளாகும். இதையே ''வெள்ளுயிர்'' என ஸ்ரீபெரியாழ்வார் அருளிச்செய்தார். காமக்ரோதாதிகளின்றி கருணைகொண்டமனமே வெண்மையான மனமாகும். பிறர் துன்பத்தைப் போக்கவேண்டுமென்ற ஆவலே கருணை எனப்படும். ஆனபின்பு இவர்களால் எப்படி பிறரை ஹிம்ஸிக்கமுடியும்?*

8) இக்கலியுகத்தில் நாம் காமக்ரோதாதிகளின்றி இருப்பினும் நம் உற்றாரும் சுற்றமும் அவற்றால் பூர்ணர்களாயிருக்கக் காண்கின்றோம். அவர்களுடன் வாழுவதும் கடினம். அவர்களை விடுவதும் கடினம். இந்நிலையில் இக்கலியிலும் மேற்கூறியபடி வைஷ்ணவலக்ஷணத்துடன் இருப்பது முடியுமா? என்ற சந்தேஹத்திற்கு யமனின் பதிலிதோ:

कलिकलुषमलेन यस्य नात्मा विमलमतेः मलिनीकृतस्तमेनम् ।
मनसि कृतजनार्दनं मनुष्यं सततमवेहि हरेरतीव भक्तम् ।।

இக்கலியிலும் இடைவிடாது ஜனார்தனனை மனதில் வைத்தால் மனதில் மலம் தட்டாது. ''सकलभुवनमध्ये निर्धनास्तेऽपि धन्याः निवसति हृदि येषां श्रीहरेर्भक्तिरेका । हरिरपि निजलोकं सर्वथातो विहाय प्रविशति हृदि तेषां भक्तिसूत्रोपनद्धः ।। *எவன் மனதில் ஸ்ரீஹரியின்பக்திமட்டுமே உள்ளதோ அவனே ஏழையாகிலும் உலகிலுள்ள எல்லோரைக்காட்டிலும் தன்யனாவான். ஹரியும் தன்னுலகைவிட்டு பக்தியாகிறகயிற்றால் கட்டப்பட்டவனாய் அவன் மனதில் புகுந்து விடுகிறான்'',* ''*பனிக்கடலில்... ஓடிவந்தென் மனக்கடலில் வாழவல்ல..*'' *இத்யாதிகளை அனுசந்திக்கவும்.* ''*கலியும் கெடும்*'' ''*கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும்..மாயப்பிரான் கண்ணன்*'' *என்று ஸ்வாமி நம்மாழ்வாரும் அருளிச்செய்தாரன்றோ!* ''त्रेतायुगप्रवर्तितकार्तयुगवृत्तान्त! - *த்ரேதையில் நடத்திக்காட்டப்பட்ட க்ருதயுகதர்மத்தையுடையவனே!*'' *என்று ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்தபடி, அவனை உபாஸிப்பவர்களுக்கும்* ''कलिः कृतयुगम् तस्य - *எவன் மனதில் பகவான் இருக்கிறானோ அவனுக்கு கலியே க்ருதயுகமாகும்*'' *என்றபடி வாழக் குறைவில்லை.*

இக்கலியிலும் பரமைகாந்தி தர்மம் அனுஷ்டிக்கமுடியுமா? அனுஷ்டிக்கலாமா? என கேள்வியை எழுப்பி அதற்கு பதிலையும் ஸ்வாமி தேஶிகன் பின்வருமாறு அருளிச்செய்தார்: ஸத்வோத்தரரான அதிகாரிகள் எந்த யுகத்தில் வாழ்ந்தாலும் பரமைகாந்தி தர்மத்தை அனுஷ்டிக்கக் குறைவில்லை. ''यस्तु कार्तयुगो धर्मः न कर्तव्यः

कलौ युगे – கார்த்தயுக தர்மத்தை கலியில் அனுஷ்டிக்கக் கூடாது'' என்ற ப்ரமாணத்திற்கு ''स महात्मा सुदुर्लभः – அப்படிப்பட்ட மஹாத்மாஎனக்குக்கிடைப்பதறிது''என்கிறபடியே அதிகாரிகிடைப்பதின் அருமையிலே நோக்கெனவும், தீர்க்ககாலப்ரம்ஹசர்யம் முதலிய கலியுகத்துக்கென்று விஶேஷித்து நிஷேதிக்கப்பட்ட தர்மங்களிலே நோக்கெனவும் பதிலருளிச்செய்தார். ''कलौजगत्पतिं विष्णुं सर्वस्रष्टारमीश्वरम्। नार्चयिष्यन्ति मैत्रय पाषण्डोपहता जनाः ।। ஜகத்பதியாயும், எல்லோரையும் படைத்தவனாயும், உபயவிபூதியையுடையவனாயுமுள்ள விஷ்ணுவை கலியுகத்தில் மக்கள் பாஷண்டிகளாய் ஆராதிக்கப்போவதில்லை'' என்று ஶ்ரீபராஶரர் அருளிச்செய்துள்ளதும் நோக்கத்தக்கது. அல்லது பகவானைத் தொழாதவர்களை நிந்திக்கிறது என்றுமாம். ''नार्चयेत् – தொழாதே'' என விதிக்கவில்லையிறே. ''अथ परमैकान्तिनां भगवदाराधनप्रयोगं वक्ष्ये – பரமைகாந்திகள் திருவாராதனம் செய்ய வேண்டிய முறையைப்பற்றிக் கூறுகின்றேன்'' என ஶ்ரீநித்யத்தில் ஶ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்துள்ளதால் தனக்குப் பிற்பட்ட காலத்திலும் இக்கலியுகத்திலே பரமைகாந்திகளாய் பலர் வாழப்போவதை ஸூசிப்பித்தாரிறே.

9) இனி பாகவதர்களுக்கிருக்க வேண்டிய விரக்தியைப் பற்றி யமன் கூறுகின்றான். வடமொழி இலக்கணப்படி விரக்தி என்ற சொல்லுக்கு ஆசையின்மை (विगता रक्तिः) மற்றும் அதிக ஆசையுடைமை (विशेषेण रक्तिः) என்ற இரு பொருள்கள் கொள்ளலாம். ''परमात्मनि यो रक्तः विरक्तः स अपरमात्मनि'' ''மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு'' போன்ற ப்ரமாணங்களை நோக்கும்போது மனம் ஆசையின்றி இருக்காது. அது ஸத்விஷயத்தில் ஆசைகொள்ளும்போது ஆத்மக்ஷேமத்திற்கும், இந்திரிய விஷயங்களில் தர்மத்தைமீறி ஆசைகொள்ளும்போது ஆத்மநாசத்திற்கும் வழிவகுக்கிறது. ஆகையால் ஆத்மக்ஷேமத்தையே விரும்பும் ஆத்மவித்துக்களான பாகவதர்கள் அர்த்தபரவசர்களாகாமல், பகவானிடத்திலேயே ஒன்றிய மனதுடையவர்களாயிருப்பர் என யமன் கூறுகின்றான்.

कनकमपि रहस्यवेक्ष्य बुद्ध्या तृणमिव यस्समवैति वै परस्वम् ।
भवति च भगवत्यनन्यचेताः पुरुषवरं तमवेहि विष्णुभक्तम् ।।

மனிதநடமாட்டமில்லாத ஓர் காட்டிலே ஓர் பெரிய தங்கக்கட்டி விழுந்துகிடக்க, அதை மனதினால்புல்லெனக்கருதி எடுத்துக்கொள்ளாமல் செல்பவனே புருடர்களில் சிறந்தவனான விஷ்ணுபக்தன் ஆவான். பலருள்ளவிடத்து விழுந்துள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டுமென

ஆசையிருந்தும், பிறர் அதைக்கண்டு அரசாங்கத்திடம் கூறினால் தனக்கு தண்டனை கிடைக்குமென எண்ணி எடுத்துக் கொள்ளாதவன் புருஷவரனாகான் என்பதைக்காட்டவே ''रहसि - தனிமையில்'' என்றும், ''बुद्ध्या - மனதினாலும்'' என்ற சொற்கள் ப்ரயோகிக்கப்பட்டுள்ளன. (चौर्यम् – चोरस्य भावः, अथवा चोरस्य कर्म) மனதினாலே மற்றவன் பொருளைத் தன்னுடையதாக நினைத்த வளவிலேயே ஒருவன் திருடனாகிவிடுகிறான். ஆனால் அது செயலிலே முடியும்போதே பிறக்குத் தெரியவருகிறது. அடியேன் முன்பு கூறியபடி, இந்த ஸ்லோகத்திலுள்ள ''भवति च भगवत्यनन्यचेताः'' என்றது ''यो नित्यम्.. व्यामोहत:'' என ஸ்ரீபாஷ்யகாரர் தனியனில் ஸாதிக்கப்பட்டுள்ளது. ''कनकमपि..तृणमिव यः समवैति'' என கூறப்பட்டுள்ளது. ஆகையால் ஸ்ரீபாஷ்யகாரர் போன்றவர்களே புருஷவரர்களாவார்கள்.

ஸ்ரீஆளவந்தாரும், ''सकृत् त्वदाकारविलोकनाशया तृणीकृतानुत्तमभुक्तिमुक्तिभि: - ஓர்முறை உன்னைக்காணவேண்டுமென்ற ஆசையாலே புல்லென நினைக்கப்பட்ட புக்திமுக்திகளையுடைய'' என மஹாத்மாக்களுக்கு அடைமொழியிட்டாரிறே. ''புக்திமுக்திகளைத் த்ருணீகரிப்பிக்கைக்கு (புல்லென எண்ணுகைக்கு) விலோகனமும் (பகவானைப் பார்த்தலும்) வேண்டா. விலோகனாசையே (பார்க்கவேண்டுமென்ற ஆசையே) அமையும்'' என ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த உரையின் அழகு அடியேனின் சொல்லளவன்று. நன்கு ஆத்மஸ்வரூபமறிந்து, ஆத்மஸமர்ப்பணம் செய்தோர்க்கே இப்படிப்பட்ட வைராக்யம் கிட்டும். பிறர்க்கிது துர்லபம் என்பதை விளக்கும் ஸ்ரீநம்பிள்ளையின் அமுதமொழி இதோ:

''ரத்னாபஹாரம் பண்ண அஞ்சாதவன் வைக்கோலும் விறகும் களவுகாண அஞ்சுமோ? ஈஸ்வரன் தன்னுடையது என்று அபிமானித்திருக்கும் (ஆத்ம)வஸ்துவை அபஹரித்தவன், ஸாமான்யர் 'என்னது' என்று அபிமானித்திருக்கும் வஸ்துவை அபஹரிக்கச் சொல்லவேணுமோ?'' இது ஸதாசார்யரான ஸ்ரீநம்மாழ்வார் ஸம்பந்தத்தினாலே தனக்குக் கிட்டியதாக, ''நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்,..சதிர்த்தேன் இன்றே'' என ஸ்ரீமதுரகவியாழ்வார் அருளிச்செய்தார்.

10) स्पटिकमणिशिलामय: क्व विष्णु: मनसि नृणां क्व च मत्सरादिदोषः ।
न हि तुहिनमयूखरश्मिपुंजे भवति हुताशनदीप्तिज: प्रतापः ।।

ஒளியும் இருட்டும் ஒரே இடத்திலே இருக்கவொண்ணாது. அவ்வாறே ஸ்படிகமலையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு ப்ரகாஸிக்கிற

மிலாகண்டம் போலுள்ள விஷ்ணுவும் மத்ஸராதி தோஷங்களும் எவ்வாறு ஒரே மனதில் இருக்கவியலும்? குளிர்ந்த கிரணங்களை வீசும் சந்த்ரகாந்தக் கல்லருகில் உட்கார்ந்திருப்பவனை தீ பாதிப்பதில்லையே. இதையே ஸ்ரீநம்மாழ்வாரும்,

இங்கில்லை பண்டுபோல் வீற்றிருத்தல்
என்னுடைய செங்கண்மால் சீர்க்கும் சிறிதுள்ளம்
ஆங்கேமடியடக்கிவைப்பதனில் வல்வினையார்தாம்
ஈண்டடியெடுப்பதன்றோ அழகு.'' என்றும்

வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ
கானோ ஒருங்கிற்றுக் கண்டிலமால் ஆனீன்ற
கன்றுயரத் தாமெறிந்து கனியுதிர்த்தார் தாள்பணிந்தோம்
வன்துயரையாவாமருங்கு'' என்றும் அருளிச்செய்தார். ஸ்ரீபெரியாழ்வார் திருமொழியில் ''நெய்க்குடம்'' முழுவதும் இவ்விஷயத்தையே பேசுகிறது. இவ்வாறே ஸ்வாமி தேஶிகன் விஷயமாக, ஸ்ரீகுமாரவரதார்யரும்,

வினைகாள் உமக்கினி வேறோரிடம் தேடவேண்டும் எனைச்
சினமேவி முன்போல் சிதைக்கும் வகையிங்கரிது கண்டீர்
எனெனில் இராமானுசமுனி இன்னுரைசேரும் தூப்புல்
புனிதரென்புந்திபுகுந்து திகழ்ந்து பொருந்தினரே

என்று அனுஸந்தித்தார்.

11) ஸத்வம் தலையெடுத்தவர்கள் நெஞ்சில் பகவான் குடிபுகுவான். பகவான் குடிபுகுந்தால் ஒருவனிடமுள்ள தோஷங்கள் ஒழியும்; கல்யாணகுணங்கள் வளரும். மனதில் எம்பெருமான் குடிபுகுந்தால் மத்ஸராதி தோஷங்கள் ஒழியும். எம்பெருமான் மனதில் குடிபுக நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதை கூறுகின்றான் என்றுமாம்.

विमलमतिः अमत्सरः प्रशान्तः शुचिचरितोऽखिलसत्त्वमित्रभूतः ।
प्रियहितवचनोऽस्तमानमायो वसति सदा हृदि तस्य वासुदेवः ।।

எங்கும் வஸிப்பதனாதல்பற்றி பகவான் वासुः எனப்படுகின்றான். देवः என்ற சொல்லுக்கு *(பத்து பொருளுடைய இச்சொல்லின் தாதுவைக்கொண்டு)* பலவிதமான பொருள்கொள்ளலாம். ஆயினும் இங்கு ''மிகவும் ஒளிர்பவன்'' என்ற பொருளே மிகப்பொருத்தமுடையது. ஆகையால் வாஸுதேவன் என்ற சொல்லுக்கு ''எல்லாவிடத்திலும் வஸிப்பவனாய்க் கொண்டு ஒளிர்பவன்'' என்று பொருளாகும். அதாவது

சேதனாசேதனங்களில் அவன் வஸித்தும் - அவற்றிற்குச் ஶரீரியாயிருந்தும் - அவற்றின் தோஷங்களால் தொடப்படாதவனாய் இருப்பவன் என்றபடி. ஆயினும் பக்தர்களின் நெஞ்சிலுறையும்போது மிகவும் ஸந்தோஷத்துடன் எழுந்தருளியிருக்கிறான் என்பதை देवः என்ற சொல் காட்டுகிறது.

विमलमतिः - அழுக்கற்ற மனமுடையவர்கள். परदोषेषु जात्यन्धाः என்கிறபடியே பிறரிடம் குறைகாண்பதில் பிறவிக்குருடனாமிவன். अमत्सरः - பிறர் குணத்திலே தோஷபுத்தி இல்லாதவன்.''अगुणी गुणिनं द्वेष्टि गुणी गुणिषु मत्सरी । गुणी च गुणरागी च सरलः विरलः जनः ।। - குணமில்லாதவன் குணமுடையவனை வெறுக்கிறான்; பொறாமையால் குணமுடையவன் மற்றொரு குணமுடையவனை போற்றுவதில்லை; தானும் குணவானாய் மற்றொரு குணவானை நேசிப்பவன் மிகவும் அரியவன்'' என்றொரு வசனமுண்டிறே.

प्रशान्तः - ஶ்ரீஶத்ருக்னாழ்வானைப்போலே உள்/வெளி இந்திரியங்களை அடக்கியவனாக இருப்பான்.

शुचिचरितः - நல்லொழுக்கமுடையோனாயிருப்பான். நல்லோர்களின் ஒழுக்கமுடையோனாயிருப்பான். வேதத்தின்படி நடப்பதே நல்லொழுக்கமாம்.

अखिलसत्त्वमित्रभूतः – सर्वाणि तत् वपुः - எல்லாம் அவன் உடல் (எல்லாவற்றிற்கும் அவனே ஆத்மா) என்கிற அறிவுடையவனாகையாலே, எல்லாம் எம்பெருமானின் விபூதியென்றுகொண்டு எல்லா உயிர்களிடத்தும் அன்புபூண்டிருப்பான்.

प्रियहितवचनः - மாரீசன் ஹிதம் சொல்லுபவனும் அதைக் கேட்பவனும் மிகவும் துர்லபன் என்றான். பொதுவாக ஹிதம் ப்ரியமாயிராது. ப்ரியம் ஹிதமாயிராது. இவ்வதிகாரி ஹிதத்தை ப்ரியமாய் எடுத்துச் சொல்பவனாயிருப்பான்.

இங்கு प्रशान्तः என்றதால் मानसिक ஶுத்தியும், प्रियहितवचनः என்றதால் वाचिकஶுத்தியும், अखिलसत्त्वमित्रभूतः என்றதால் कायिकஶுத்தியும் சொல்லப்பட்டது. இப்படி முக்கரணங்களாலும் ஶுத்தராயிருந்தும் சிறிதும் கர்வமற்றிருப்பார்கள் என்பதை अस्तमानमायः என்ற சொல் காட்டுகின்றது. ''यः ख्यातिलाभपूजासु विमुखः'' என்ற ஸ்வாமி தேஶிகனின் மங்கள ஶ்லோகத்திலுள்ள சொற்றொடரையும், ''வஞ்சமுக்குரும்பாம் குழியைக் கடத்தும் நம் கூரத்தாழ்வான்'' என்ற இராமானுசநூற்றந்தாதியின் சொற்றொடரையும் இங்கு அனுஸந்திக்கப் ப்ராப்தம். ''குழியைக்

கடக்கும்'' என்ற பாடத்தைவிட ''குழியைக் கடத்தும்'' என்ற பாடமே சாலச் சிறந்தது. ஏனெனில் ஸ்ரீகூரத்தாழ்வான் தன் ப்ரியஹிதவச னங்களாலே தன்னை அடைந்தாரையும் முக்குரும்பறுத்தவராக்க வல்லவர் என்ற சீரியபொருள் கிடைப்பதாலேயாம்.

12) இனி வைஷ்ணவர்களின் வெளித்தோற்றம் எவ்வாறிருக்கும் என்பதை யமன் பின்வருமாறு கூறுகின்றான்:

वसति हृदि सनातने च तस्मिन् भवति पुमान् जगतोऽस्य सौम्यरूपः ।
क्षितिरसमतिरम्यमात्मनोऽन्तः कथयति चारुतयैव सालपोतः ।।

எவனுடைய இதயத்திலே பகவான் எழுந்தருளியிருக்கிறானோ அவன் தோற்றம் சௌம்யமாய் இருக்கும்.இதை ''रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टे'' என்றும், ''ब्रह्मविद इव सौम्य! ते मुखं भाति'' போன்ற வேதவாக்யங்களினால் அறியலாம். இன்றும் நாமும் நல்ல அனுஷ்டாதாக்கள் மற்றும் நாமஸங்கீர்த்தனம் செய்பவர்கள் முகத்திலே தனிப்பொலிவைக் காண்கிறோம் அல்லவா? ''கண்டேன் சீதையை கற்புக்கணியினைக் கண்களால்'' என்ற ஸ்ரீகம்பநாட்டாழ்வானின் பாடலிலுள்ள 'கண்' என்ற சொல் அனுமனின் கண்களைக் கூறவில்லை; ஏனெனில் 'கண்டேன்' என்ற வினைச்சொல்லே அதைக்கூறும்; ஆகையால் இது பிராட்டியின் கண்களைக் கூறிற்று. அதாவது ஸீதையின் கண்கள், 'அவள் கற்புடையவள் - கற்புக்கு அணி' என்பதைக் காட்டிற்று என உரையிட்ட வைணவனின் (ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரின்) அறிவுக்கூர்மை என் சொல்லளவன்று. அகத்தின் அழகு முகத்தில் தெரியாதா? அடுத்தது காட்டும் பளிங்குபோல் முகம் நெஞ்சம் கடுத்தது காட்டாதா? எம்பெருமான் எவன் இதயத்தில் எழுந்தருளியுள்ளானோ அவன் சௌம்யரூபத்துடன் இருப்பான் என்பதற்கு சிறிய மாமரம் தன் செழிப்பால் முளைத்திருக்கிற பூப்ரதேஶத்தின் ரஸத்தையுணர்த்துவதை உதாரணமாக யமன் காட்டியுள்ளான்.

ஸௌம்யரூபவான்களான இவர்கள் ஶாஸ்த்ரவஶ்யர்கள் ஆகையாலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விதிக்கப்பட்ட ஊர்த்வபுண்ட்ரதாரணாதி வெளித்தோற்றத்துடனும் இருப்பார்கள். இதனால் எவனிதயத்தில் எம்பெருமான் இல்லையோ அவன் வெளித்தோற்றத்தில் ஸ்ரீவைஷ்ணவனைப்போலிருப்பினும் அவன் ரூபம் ஸௌம்யமாக இருக்காது என்பதும் கூறப்பட்டதாயிற்று.

13) மேலும்,

यमनियमविधूतकल्मषाणां अनुदिनमच्युतसक्तमानसानाम् ।
अपगतमदमानमत्सराणां त्यज भट! दूरतरेण मानवानाम् ।।

''यமநியமாதிகளாலே போக்கடிக்கப்பட்ட பாபத்தையுடையவர்களும், இடைவிடாமல் அச்யுதவிஷயமான மனதுடையவர்களும், போக்கடிக்கப்பட்ட அஹங்காரமமகாரமாத்ஸர்யங்களை உடையவர்களுமான மனிதர்களை விட்டு வெகுதூரத்தில் செல்லுங்கள்'' என்பது இதன் பொருளாகும்.

यमनियमविधूतकल्मषाणाम् என்ற சொல் பக்தியோகநிஷ்டர்களைச் சொல்லுகிறது. பலவிடங்களில் ப்ரபந்னர்களைப் பற்றியும் பேசப்பட்டுள்ளது. ஆகையால் பொதுவாக பாகவதர்கள் யாராயினும் அவர்களின் அருகில் செல்லவேண்டாம் என்பது யமனின் கட்டளையாகும்.

14) மேலும்,

हृदि यदि भगवाननादिरास्ते हरिरसिशङ्खगदाधरोऽव्ययात्मा ।
तदघमघविघातकर्तृभिन्नं भवति कथं सति चान्धकारमर्के ?।।

சங்குவில்வாள்தண்டுசக்கரக்கையனாய் அவ்யயாத்மாவாய் அனாதியாயிருக்கிற ஹரி இதயத்திருக்கும்போது பாபங்கள் தீயினில் தூசாகும். ஸூர்யன் இருக்கும்போது இருட்டுக்கு இடமேது? விட்டுப்பிரியாத கிரணத்தோடு (பிராட்டியோடு) கூடியிருக்கிற எப்பொழுதும் உதித்தேயிருக்கிற (அஸ்தமனமற்ற) ஸூர்யனாகிற எம்பெருமான் நம் உள்ளிருளைப் (அஞ்ஞானத்தைப்) போக்கட்டும் என ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்தார். ஆகாயத்தில் திரியும் ஸூர்யன் புறவிருளையே போக்கவல்லவன். பகவனாகிற ஸூர்யனிறே அகவிருளைப் போக்கவல்லலவன். ஆகாயத்தில் திரிந்து புறவிருளைப் போக்கும் ஸூர்யனைப் பார்த்து (சாம்யபாவனையால் - போலிகண்டு இரங்கி) ''செய்யதோர் ஞாயிற்றைக்காட்டி சிரீதரன் மூர்த்தி ஈதென்னும்'' என்றார் ஸ்வாமி நம்மாழ்வார்.

இனி நான்கு ஶ்லோகங்களினால் அபாகவதர்களின் கீழ்மை சொல்லப்படுகின்றது:

15) हरति परधनं निहन्ति जन्तून् वदति तथाऽनृतनिष्ठुराणि यश्च ।
अशुभजनितदुर्मदस्य पुंसः कलुषमतेः हृदि नास्त्यनन्तः ।।

அபாகவதர்கள் மற்றவர்களின் பணத்தை அபஹரிபார்கள். ப்ராணி ஹிம்சையில் ஈடுபடுவார்கள். பொய் சொல்லுவார்கள்.

(கீழ்மைவசைவுகளே) கேட்பார் செவிசுடும்படிப் பேசுவார்கள். அஜ்ஞபத்தினால் - பாபத்தினால் உண்டான மதத்தையுடையவர்களாய் மலமுடைய மனமுடையவராயிருப்பார்கள். இவர்களிடம் பகவான் வசிப்பதில்லை.

16) மேலும்:

न सहति परसंपदं विनिन्दां कलुषमतिः कुरुते सतामसाधुः ।
न भजति न ददाति यश्च सन्तं मनसि न तस्य जनार्दनोऽधमस्य ।।

அபக்தன் பிறர்க்கேற்படும் நன்மையை ஸஹிக்கமாட்டான். மற்றவர்க்கேற்படும் தீமை கண்டு மகிழ்வான். ''நண்ணாதார் முறுவலிப்ப'' என்ற பாசுரத்தில் இப்படிப்பட்டவர்களைப் பார்த்து இவர்களோட்டை சஹவாஸம் கண்டு நொந்தே ''பணிகண்டாய் சாமாறே'' என ஸ்ரீநம்மாழ்வார் பாசுரமிட்டார். மென்மையான, மங்களமான சொற்களையே ப்ரயோகிக்கும் ஆழ்வார் திருவாக்கிலும் இப்படிப்பட்ட சொற்கள் வரவேண்டுமெனில் இவர்கள் எவ்வளவு கொடுமையானவர்கள் என அறியலாம்.

ப்ரம்ஹஜ்ஞானமுடையவர்கள் ஸத்துக்களாவர். அவர்களின் நிந்தையிலேயாமிவன் பொழுது போக்குவது. பகவதாராதனம் செய்யான். ஐயமும் பிச்சையுமிடான்.

''நா அகாரியம் சொல்லிலாதவர்'' என்றும், ''நாள்தொறும் விருந்தோம்புவார்'' என்றும், ''காசின்வாய் கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டு தேசவார்த்தை படைக்கும் வண்கையினார்கள்'' என்றும் ஸ்ரீபெரியாழ்வாராலே கொண்டாடப்பட்ட திருக்கோட்டியூர் பாகவதர்களுக்கு எதிர்த்தட்டானவன் இவன்.

இவர்கள் இதயத்து கருணாமூர்த்தியான பகவான் எப்படி உறைவான்?

17) மேலும்:

परम सहृदि बान्धवे कलत्रे सुततनयपितृमातृभृत्यवर्गे ।
शठमतिरुपयाति योऽर्थतृष्णां तमधमचेष्टमवेहि नास्य भक्तम् ।।

''உயிர்கொடுப்பான் தோழன்'' என்றொரு பழமொழியுண்டு. ''உடுக்கை இழந்தவன் கைபோலே ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'' என்றனன் பெருந்தகை. ஆனால் அபாகவதனோ பணத்தாசையால் கொண்டபெண்டிர், மக்கள், உற்றார்சுற்றத்தவர்பிறரிடமும்அன்பில்லாமல் அவர்களால் தனக்கு ஏற்படும் நன்மைக்காகவே பழகுவான். அவர்களால் தனக்கு யாதொரு ப்ரயோஜனமும் இல்லை என்ற நிலையில் அவர்களைக் கைவிடுவான். அவர்களுக்கும் கெடுதி செய்யத் துணிவான். ஆதாவது

இவர்களிடமும் உண்மையான அன்புடன் பழகமாட்டான். ''காதலால் நெஞ்சமன்பு கலந்திலேன்'' என்று ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் இவர்கள் நிலையில் தன்னை நிறுத்திக்கொண்டு கதறினார் அல்லவா! அவ்விடத்து,''முன்பு ஸ்த்ரீபதார்த்தங்களில் பண்ணிப்போந்த ப்ரேமம் அவர்கள்பக்கல் அர்த்தாதிகளை அபஹரிக்கைக்காகவாய்த்தல்லது அவர்களே உத்தேஶ்ய ரென்னும் ப்ரேமமும் இல்லை'' என்ற வ்யாக்யானம் நோக்கத்தக்கது. இப்படிப்பட்டவனை அபாகவதன் என அறிவாயாக.

இக்காலத்தில் தாய்தந்தையரையும் காப்பாற்ற நாழியில்லை என்று முதியோரில்லத்தில் சேர்த்து, தாங்கள் ஏதோ பெரிதாக சாதிக்க இருப்பதாக எண்ணுபவர்களெல்லாம் அபாகவதர்களே. இருவரும் பணத்தாசையால் வேலைக்குச் சென்று, பெற்றகுழந்தைகளையும் முன்பின்தெரியாதார் கையில் ஒப்படைத்து பாபத்தையும் சேர்த்துக்கொள்கின்றனர். பெற்றோரையும் காக்காமல், குழந்தைகளையும் பேணாத இவர்களெல்லாம் அர்த்தகாம பரவசர்கள்தானே. மஹாபாபிகள்தானே. இவர்களுக்கெல்லாம் யமனே ப்ரபு. இவர்களுக்கெல்லாம் நரகம் நிச்சயம் உண்டு. இயலாவிடில் வேலையை விட்டு பிச்சை எடுத்தாவது அவர்களைக் காப்பாற்றினால் பகவான் ப்ரீதனாய் மோக்ஷத்துக்கும் ஏதோ ஓர் வழிகாட்டுவான்.

18) மேலும்:

अशुभमतिः असत्प्रवृत्तिसक्तः सततमनार्यकुशीलसंगमत्तः ।
अनुदिनकृतपापबन्धयुक्तः पुरुषपशुः न हि वासुदेवभक्तः ।।

(अनार्यम् = अमङ्गलम् ; कुशीलम् = दुःशीलम् ; सङ्गः =विषयसङ्गः)

யமன் பொறுமை இழந்து பேசுகிறான். ஒன்பதாவது ஶ்லோகத்தில் புருஷவரனின் லக்ஷணத்தைக் கூறினான். இங்கு புருஷபஶுவின் லக்ஷணம் கூறுகின்றான்.

அஶுபமான கார்யங்களில் புத்தியுடையனாயிருப்பான். கெட்ட ஒழுக்கம் கொண்டிருப்பான். விஷயஸங்கங்களில் ஶாஸ்த்ரவரம்பை மீறிய பற்றுடன் இருப்பான். இவன் மனிதவடிவில் வாழும் மிருகமாகும். *(இவர்களை அழைத்துவாருங்கள். அவர்களைத் துன்புறுத்தித் தூயவர்களாக்குவோம் என யமனின் அபிப்ராயமாகும்.)*

19) மீண்டும் பாகவதர்களின் மேன்மையை யமன் பேசத் தொடங்கு கின்றான்:

सकलमिदमहं च वासुदेवः परमपुमान्परमेश्वरस्स एकः ।
इति मतिरचला भवत्यनन्ते हृदयगते व्रज तान्विहाय दूरात् ।।

''எனக்கு எவன் ஶரீரியோ - ஆத்மாவோ அவனே இவ்வுலகப்பொருட்களனைத்திற்கும் ஶரீரி - ஆத்மாவாயிருக்கிறான். அவனே பரமேஶ்வரனான அனந்தன்'' என்கிற விஷயத்திலே அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் இருக்கும் பாகவதர்களைவிட்டு வெகுதூரத்தில் செல்லுங்கள் என யமன் கட்டளையிடுகின்றான்.

''सकलमिदमहं च वासुदेवः'' என்ற வாக்யத்திற்கு, ''நானும் வாஸுதேவனும் இவ்வுலகமும் ஒன்றே'' என்பதே நேராகக் கிடைக்கும் பொருளாகும். இது அத்வைதசித்தாந்தத்தைக் கூறுவதாக ப்ரமிக்கவேண்டாம். சேதனாசேதனங்களுக்கும் பகவானுக்கும் ஸ்வரூபைக்யம் சொல்லுவதாகக் கருதவேண்டாம். அதாவது ''सर्वं खल्विदं ब्रह्म'' ''तत्त्वमसि'' முதலிய வேதவாக்யங்களுக்குப் பொருள்கொள்வதைப்போலே இங்கும் பொருள்கொள்ளவேண்டும். சேதனாசேதனங்களுக்கும் பகவானுக்குமுள்ள ஶரீராத்மபாவ ஸம்பந்தத்தையிட்டே இங்கு सामानाधिकरण्यम् வந்துள்ளது.

விரிவுக்கஞ்சி सामानाधिकरण्यम् பற்றி அதிகம் இங்கு எழுதப்படவில்லை. சற்று கோடிட்டுக் காட்டுகிறேன். ஒரே ஆதாரத்தையுடைய சொற்கள் समानाधिकरण சொற்கள் எனப்படும். சொல்லுக்கு ஆதாரமாவது அவற்றின் பொருளேயாம். (அதாவது பொருளற்றது சொல்லாகாது என்றபடி.) இதனால் ஒரு வாக்யத்திலுள்ள பல சொற்கள் வெவ்வேறு ப்ரயோஜனத்துடன் உபயோகிக்கப்பட்டு ஒரேவஸ்துவைக் (பொருளைக்) குறிக்குமானால் அச்சொற்கள் ஸமானாதிகரணசொற்கள் எனப்படும். இவை அனைத்தும் ஒரே வேற்றுமையுருபுடன் கூடியிருக்கும். இது விஶேஷணவிஶேஷ்யபாவம், காரணகார்யபாவம், ஶரீராத்மபாவம் கொண்டவிடங்களில் வரும். விரிவை வல்லார்வாய் கேட்டறியப் ப்ராப்தம். இந்த ஶ்லோகத்திலும் अहम् மற்றும் इदं सर्वम् ஆகியவை முதல் வேற்றுமையுடன் கூடிய சொற்களாகும். இவை वासुदेवः என்ற மற்றொரு முதல் வேற்றுமையோடுகூடிய சொல்லுடன் சேர்த்துள்ளது. अहम् என்ற சொல் 'நான்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிற ஓர் மனிதனைக் கூறிற்று. इदं सर्वम् என்ற சொல் கண்ணுக்குப் புலப்படுகிற சேதனாசேதனங்களனைத்தையும் கூறிற்று. वासुदेवः என்ற சொல் பகவானைக் கூறிற்று. இவை தனித்தனியே வெவ்வேறு ப்ரயோஜனத்துடன் உபயோகிக்கப்பட்டுள்ளன. இவை தனித்தனியே வெவ்வேறு பொருள்களையே கூறுகின்றன என்பது அனைவருக்கும்

தெரிந்தவொன்றே. ஆயின் இவை ஸமானாதிகரணசொற்களாகா எனவே நினைக்கத் தோன்றும். ஏனெனில் இவையனைத்தும் ஒரே பொருளைக் குறிக்கவில்லையே என்பதால். ஸமானாதிகரணப்ரயோகம் எங்கெல்லாம் வரும் என்பதில் ஶரீராத்மபாவமும் ஒன்றாகையாலும், ''यस्य आत्मा शरीरम्'', ''यस्य पृथिवी शरीरम्'', ''जगत् सर्वं शरीरम् ते'' முதலிய ப்ரமாணங்களால் வாஸுதேவனுக்கும் சேதனாசேதனங்களுக்குமுள்ள ஶரீராத்மபாவத்தையிட்டே ஸமானாதிகரணம் வந்துள்ளது என்பது ஸ்பஷ்டம். அதைக்கொண்டு நோக்குங்கால் இவையனைத்தும் ஒரே பொருளைக் குறிக்கத்தட்டில்லை.

ஶரீரமும் ஆத்மாவும் விட்டுப்பிரியாமல் இருப்பதாலும், ஆத்மாவே ஆதாரமாய், நியந்தாவாய், ப்ரதான பலியாய் (சேஷியாய்) இருப்பதாலும், ஶரீரத்தைச் சொல்லும் சொற்களனைத்தும் ஆத்மாவையும் குறிக்கும். ஆகையால் எல்லா சொற்களும் பகவானைக் குறிக்கும். வாஸுதேவன் சேதனாசேதனங்களுக்கு ஆத்மாவயிருப்பதால், ஶ்லோகத்திலுள்ள ''अहम्'' மற்றும் ''इदं सर्वम्'' என்ற சொற்களும் பகவானைக் குறிக்கும். இதனால் மூன்று தத்வங்களுக்கும் ஸ்வரூப ஐக்யம் பராஶரரால் கூறப்படவில்லை. எல்லாப் பொருளுக்கும் பகவானே ஆத்மா என்றே கூறப்பட்டது.

ஶரீராத்மபாவத்தையிட்டே இங்கு ஸமானாதிகரணப்ரயோகம் தன்னால் செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கவே ஶ்லோகத்திலும் வாஸுதேவன் என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. वसतीति वासुः; वसुः चासौ देवः च = वासुदेवः என்பது இத்திருநாமத்தின் விரிவாகும். எல்லாப் பொருட்களிலும் வஸித்தாலும் அவற்றின் தோஷங்களினால் தொடப்படாதவன் என்பது இதன் பொருளாகும். ''वसनात् देवनाच्चैव वासुदेवं ततो विदुः'' ''भूतेषु वसते सोऽन्तः वसन्त्यत्र च तानि यत् । धाता विधाता जगतां वासुदेवः ततः स्मृतः।।'' இத்யாதி ப்ரமாணங்களால் இதை அறியலாம்.

ஸ்ரீதிருமழிசையாழ்வார், ''உலகு நின்னொடு ஒன்றி நிற்க வேறு நிற்றி'' என இத்திருநாமத்துக்கு உரையிட்ட அழகைப் பருகவும்.

20) எம்பெருமானை அடைந்தவர்களை விட்டுச் செல்லுமாறு கூறும் யமனின் கட்டளை இதோ:

कमलनयन ! वासुदेव ! विष्णो ! धरणिधर ! अच्युत ! शङ्खचक्रपाणे !
भव शरणमिति ईरयन्ति ये वै त्यज भट ! दूरतरेण तानपापान् ।।

कमलनयन! : ''செந்தாமரைக்கண்ணா!'', ''நீரார்கமலம்போல் செங்கண்மால்'' ''कप्यासम् पुण्डरीकमेवमक्षिणी'' இத்யாதி ப்ரமாணாங்களில்

கூறப்பட்டுள்ளபடி எம்பெருமானின் திருமேனியில் ஈடுபட்டு பாகவதர்கள் கூப்பிடுவார்கள்.

वासुदेव! : இத்திருநாமத்துக்கு முன் ஸ்லோகத்தில் கூறிய பொருள் பகவானின் மேன்மையைச் சொல்லிற்று. இனி அவன் நீர்மையில் ஈடுபட்டு ''வஸுதேவனின் மகனே!'' என்று பாகவதர்கள் கூப்பிடுவார்கள்.

विष्णो! : இது विश प्रवेशने என்ற தாதுவடியாக வந்த திருநாமம். ''ஸர்வவ்யாபியே!'' என அவன் மேன்மையில் ஈடுபட்டு பாகவதர்கள் கூப்பிடுவார்கள்.

धरणिधर! : பூவராஹனே! என அழைப்பர்கள். இதனால் தன் உடைமையைக் காப்பதில் அவனுக்குள்ள த்வராதிஸயம் கூறப்பட்டது.

अच्युत! : ''அவதாரகாலத்திலும் தன்குணங்களை விடாதவனே!'' எனவும் ''காலில் விழுந்தவர்களைக் கைவிடாதவனே!'' எனவும் கூக்குரலிடுவர்கள்.

शङ्खचक्रपाणे! : ''சங்குசக்கரம் அங்கையில் கொண்டவனே!'' என்பார்கள். ''மாற்றார்க்கு ஆயுதமாய் எங்களுக்கு ஆபரணமாய் இருக்கும் ஆயுதாழ்வார்களை உடையவனே!'' என்பார்கள். ''கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்'' என்றாரிறே ஆழ்வார். ''சிலரை வஸீகரிக்க நினைப்பவர்கள் கையிலே மருந்துகொண்டு போமாப்போலே அவதாரங்கள்தோறும் திவ்யாயுதங்களோடே அவதரிக்கும்'' என்று ஸ்ரீநம்பிள்ளையைப்போலே ஈடுபடுவார்கள்.

இதனால் பாகவதர்கள் எம்பெருமானின் திருமேனி, மேன்மை மற்றும் நீர்மை முதலிய குணங்களில் ஈடுபட்டு பொழுது போக்குவர்கள் என்றாராய்த்து.

कमलनयन! மற்றும் शङ्खचक्रपाणे! என்ற இரு விளிச்சொற்களும் பகவான் திவ்யமங்களவிரஹத்துடன் கூடியவன் என்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு எம்பெருமானைக் கூப்பிட்டு शरणं भव என்று வேண்டுபவர்களைவிட்டு வெகுதூரம் விலகிச்செல்லுங்கள் என யமன் கட்டளையிட்டுள்ளான்.

उपाये गृहरक्षित्रोः शब्दः शरणमित्ययम् । वर्तते साम्प्रतं त्वेष उपायार्थैकवाचकः।। என்கிறபடியே இங்குள்ள शरणஸப்தம் உபாயபரமாகக்கடவது. அதாவது शरणஸப்தம் உபாயம், வீடு மற்றும் ரக்ஷகன் என முப்பொருளில் வருமாகிலும், த்வயத்தின் பூர்வகண்டத்திலும், சரம ஸ்லோகத்திலும் இச்சொல் உபாயம் (means) என்ற பொருளிலேயே உபயோகப் படுத்தப்பட்டுள்ளது என்பது இதன் பொருளாகும். அதாவது,

''ஸமர்த்தகாருணிகனான நீ பக்தியோகத்திலிழிய முடியாமலிருக்கிற என்திறத்து, பக்தியோகஸ்தானத்திலே நின்று, அதன் பயனான மோக்ஷத்தைத் தந்தருளவேணும்'' என பரஸமர்ப்பணம் செய்யும் அதிகாரிகள் இங்கு சொல்லப்பட்டார்களாயிற்று.

''யே ஈரயந்தி'' என்பதற்கு ''எவர்கள் உச்சரிக்கிறார்களோ/ சொல்லுகிறார்களோ'' என்று பொருளாகும். இங்க शरणं भव என்ற சொல்லை மஹாவிஶ்வாஸத்துடன் கூறுவதே ப்ரபத்தியாகும். अपापान् என்று ஸர்வபாப ப்ராயசித்தமான ப்ரபத்தியை அனுஷ்டித்தவர்களைக் கூறிற்று.

இந்த ஶ்லோகத்திற்கு ப்ரபந்னர் விஷயமாகப் பொருள்கொள்ளாமல் பொதுவாக நாமஸங்கீர்த்தனம் பண்ணுபவர்கள் விஷயமாகப் பொருள்கொண்டாலும், அர்த்தஜ்ஞானமின்றி செய்யும் நாமோச்சாரணமும் பாபங்களைப்போக்கி எம்பெருமானை (பரம்பரையாக) அடையவைக்கும் என்பதைக் கூறவந்ததாகவுமாம். ''ईरयन्तीति वचनात् अर्थज्ञानमन्तरेणापि नामोच्चारणमात्रमेव पापहरमिति सूचितम्'' என்று ஸ்ரீஎங்களாழ்வான் அருளிச்செய்துள்ளார். ''संकीर्त्य नारायणशब्दमात्रं विमुक्तदुःखाः सुखिनो भवन्ति'' என்கிற ப்ரமாணமும் நோக்கத் தக்கது. இப்பக்ஷத்தில் शरणஶப்தத்திற்கு ரக்ஷகன் என்றே பொருள் கொள்ளவேண்டும். இதனால் நாமோச்சாரணம் பண்ணுபவர்களை பகவான் பக்தி ப்ரபத்திகளில் மூட்டி ரக்ஷிப்பான் என்று தேறியது.

ஸ்வாமி தேஶிகனின் அபீதிஸ்தவத்திலுள்ள

''रमादयित! रङ्गभूरसिक! कृष्ण! विष्णो! हरे! त्रिविक्रम! जनार्दन! त्रियुगनाथ! नारायण !।
इतीव शुभदानि यः पठति नामधेयानि ते न तस्य यमवश्यता नरकपातभीतिः कुतः ?।।

(ரமாவின் கணவனே! அரங்க வாஸத்தை ரசிப்பவனே! கிருஷ்ணனே! விஷ்ணுவே! ஹரியே! த்ரிவிக்ரமனே! ஜனார்தனனே! மூயுக (ஆறு குணங்களுக்கு) நாதனே! நாராயணா! என்றவாறு அவன் திருநாமங்களை உச்சரிப்பவர்கள் யமனுக்கு வசப்படார்கள். அவர்களுக்கு நரகபயம் ஏது?'') என்ற ஶ்லோகம் இங்கு அனுசந்திக்கத்தக்கது.

21) ஒருவேளை தன் கிங்கரர்கள், தன் உபதேஶத்தைமீறி பாகவதர்களை அணுகினால், அதனால் தனக்கும் அவர்களுக்குமேற்படப்போகும் தீங்கை யமன் பின்வருமாறு கூறுகின்றான்:

वसति मनसि यस्य सोऽव्ययात्मा पुरुषवरस्य न तस्य दृष्टिपाते ।
तव गतिरथवा ममास्ति चक्रप्रतिहतवीर्यबलस्य सोऽन्यलोक्यः ।।

இதன் பொருளாவது : அவ்யயாத்மாவான பகவான் எவன் இதயத்தில் இருக்கிறானோ அவனே புருஷர்களில் மேம்பட்டவன். அவன் கண்ணெதிரில் செல்லவே எனக்கும் உனக்கும் தகுதியில்லை.அப்படி மீறி நாம் சென்றால் நம்முடைய வீர்யபலாதிகள் ஸ்ரீஸுதர்ஶனனாலே அழியப்பெறும்.

अन्यलोक्यः = अन्यलोकार्हः = वैकुण्ठलोकार्हः इत्यर्थः

இங்கு यस्य என பொதுவாகக் கூறப்பட்டுள்ளமையால் இவ்வதிகாரி எக்குலத்தில் பிறந்தவன், எங்கு வஸிப்பவன் என்பதில் நோக்கற்றமை சொல்லப்பட்டது.

''यत्र कुत्र कुले जाताः यत्र कुत्र निवासिनः। वासुदेवरता नित्यं यमलोकं न यान्ति ते ।।'', ''நம்புவார் பதி வைகுந்தம்'' ''न तस्य यमवश्यता नरकपातभीतिः कुतः?'' என்னக்கடவதிறே.

ஏழு நரகங்களுக்கும் யமனே அதிபதியாவான் என்பதை ''अपि सप्त - பாபிகள் அடையத்தக்க நரகங்கள் ஏழு'' என்றும்,''तत्रापि च तद्व्यापारादविरोधः - யமனின் ஆணை நடக்கையால் விரோதமில்லை'' முதலிய ப்ரம்ஹஸூத்ரங்கள் தெரிவிக்கின்றன. பாபிகள் யமனுக்கு வஶப்படுகிறார்கள் என்பதை தர்மஶாஸ்த்ரங்களும் கூறுவதாக ''स्मरन्ति च'' என்கிற ப்ரம்ஹஸூத்ரம் கூறுகின்றது. ஆகையால் புண்யவான்களான பாகவதர்கள் வைகுந்தத்திலேயே வஸிக்கத்தக்கவர்கள் என்பதை अन्यलोक्यः என்ற சொல்லால் யமன் கூறியுள்ளான்.

இவ்வாறாக மைத்ரேயருக்கு ஸ்ரீபராஶரர் ஆதியானடியாரின் பெருமையையும் அடிமையின்றித்திரிவாரின் தாழ்வையும் யமனுக்கும் அவன் படனுக்கும் நடந்த உரையாடலின் வாயிலாக தெரிவித்தார்.

முதல் ஶ்லோகத்தை விளக்குமிடத்தில் யமன் காதருகில் தன்படனுக்குக் கூறிய ரஹஸ்யத்தை நரகில் வாழ்ந்த காளிங்கனால் எவ்வாறு கேட்டிருக்கமுடியுமென்ற வினாவை எழுப்பி பதிலளிக்காமல் அடியேன் விட்டிருந்தேன். அதன் விடை கீழுள்ள ஶ்லோகத்தினால் செய்யப்படுகின்றது.

एतन्मुने समाख्यातं गीतं वैवस्वतेन यत् । त्वत्प्रश्नानुगतं सम्यक्किमन्यत् श्रोतुमिच्छसि? ।।
''மைத்ரேயரே ! உம்முடைய கேள்விக்கு வைவஸ்வதன் - யமன் கூறியபடி பதிலுரைத்தோம். மேலும் நீர் எம்மிடம் கேட்க எண்ணுகிற விஷயம் ஏதேனுமுண்டா?'' என்பது இதன் பொருளாகும்.

இந்த ஶ்லோகத்தில் ''वैवस्वतेन उक्तम् - யமனால் கூறப்பட்டது''

என்னாமல், ''वैवस्वतेन गीतम् - யமனால் பாடப்பட்டுள்ளது'' என்றுள்ளது. சீரிய சிங்காசனத்திருந்த சக்ரவர்த்திதிருமகன் , உலகுய்யத் திருவயிறு வாய்த்த தம் மக்கள் செம்பவளத் திருவாயாலே தன் சரிதையைத் தானே செவிமடுத்து தன்னை மறந்து புறப்பட்டு பாராயணகோஷ்டியை அடைந்தாற்போலே (துர்யோதனன் கண்ணனின் தேசால் கவரப்பட்டு, ''கண்ணன் வந்தால் யாரும் எழுந்து நிற்காமல் அவனை அவமதிக்கவேணும்'' என ஆணையிட்டதை மறந்து எழுந்து நின்றாற்போலேயும்) वदति यम: किल तस्य कर्णमूले என்று ரஹஸ்யமாக காதருகில் பேசவாரம்பித்து, பேசப்படுகின்ற விஷயத்தின் மேன்மையால் மெய்மறந்து உரத்தகுரலிலே பாகவதர்களின் பெருமையை பாடிவிட்டான் என்பது இதனால் புலனாகிறது. ஆகையால் வெகுதூரத்திலிருந்த காளிங்கனால் இது கேட்கப்பட்டுள்ளது.

முடிவுரை:

இந்த ஸ்ரீவிஷ்ணுபுராணத்தின் மூன்றாவது அம்ஶம் ஏழாவது அத்யாயத்தினால் நாம் உணர்ந்து கடைபிடிக்கவேண்டிய விஷயங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. நாம் பாகவதர்களாக வாழவேண்டும். பிறரையும் பாகவதர்களாக்கவேண்டும்.

2. எல்லோரும் ப்ரபந்னர்களாக வேண்டும்.

3. முக்கியமாக தேவதாந்தர பஜனம், ஸத்வம் தலையெடுத்து வாழவேண்டுபவர்களுக்கும், பரமைகாந்திகளாக வாழவேண்டுபவர்களுக்கும் கூடாது.

4. பாகவதாபசாரம் மிகக்கொடியது. அதைத் தவிர்க்கவேண்டும்.

5. வர்ணாஶ்ரமதர்மங்களை தேஶகாலானுகுணமாக ஶக்திக்குத் தக்கபடி அனுஷ்டிக்கவேணும்.

6. கலியுகத்தின் மேல் பழியைப்போடாமல் பரமைகாந்திகளாய் வாழவேண்டும்.

7. மற்றவர்கள் பொருளிலாசை வைக்கக்கூடாது.

8. த்ரிகரணங்களாலும் பிற உயிர்களை துன்புறுத்தக் கூடாது.

9. நமக்கின்னா செய்தார்க்கும் நன்மையே விரும்பவேண்டும்.

10. அவஶ்யமான லௌகிககார்யம் போக மற்றகாலங்களை நாமஸங்கீர்த்தனாதிகளால் போக்கவேணும்.

11. புலனடக்கத்துடன் வாழவேண்டும்.

12. ப்ரியமாயும் ஹிதமாயுமுள்ள மொழிகளையே பேசவேண்டும்.

13. பலன் கருதாது கர்மாக்களை அனுஷ்டிக்கவேண்டும்.

14. கெட்ட நடத்தையுடையோரோடு சேரலாகாது.

15. அஹங்காரமமகாரங்களற்று வாழவேண்டும்.

16. நாராயணனே நமக்கு ஸ்வாமி என்பதை வேதாந்தவல்லுநர்பால் கேட்டு இவ்விஷயத்தில் நம்பிக்கையுடன், ஆத்மாவை பகவானிடம் ஸமர்ப்பித்து நிர்பரனாய் நிர்ப(भ)யனாய் இருக்கவேண்டும்.

।। शुभं भूयात्।।

வேருக்கு நீர்

(இக்கட்டுரை 'தேஜஸ்க தர்சனம்' (மே-ஜூன்-2012) என்ற இதழில் புதுவை வேதாந்த தேஜஸ்க சபையாரால் வெளியிடப்பட்டது)

முன்னுரை:

தைத்ரீயோபநிஷத், 'मातृदेवो भव । पितृदेवो भव । आचार्यदेवो भव। *(மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ)*' என்று ஓதியுள்ளது. இதற்கு, 'தாயை தெய்வமாகவுடையவனாக ஆகக்கடவாய்!, தந்தையை தெய்வமாகவுடையவனாக ஆகக்கடவாய்!, ஆசார்யனை தெய்வமாகவுடையவனாக ஆகக்கடவாய்!' என்பது பொருளாகும். ஆகையால் தெய்வமே ஒரு ஜீவனைக் காக்க இம்மூவர் வடிவில் வந்துள்ளது என ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். இனி இம்மூவரின் பெருமையை சிறிது அறிவோம்.

தாய்:

நம்மைப் பெற்றவள் தாய். இவள் திருமணமானவுடன் கருத்தரிக்காவிடில் தவம் கிடப்பவள். கர்ப்பமானால் பத்து மாதம் சுமப்பவள். மரணவேதனைக்குச் ஸமமான ப்ரஸவவேதனையை அனுபவிப்பவள். நம் மலமூத்ரங்களை வெறுக்காமல் அகற்றி சுத்தம் செய்பவள். பாலூட்டுபவள். தாலாட்டுபவள். உணவு, உறக்கம் முதலியவற்றைத் த்யாகம் செய்து நம்மை வளர்த்து ஆளாக்குபவள்.

ஓர் சிறிய செங்கல்லை ஒரே நாள் நாம் வயிற்றில் கட்டிக்கொள்வோம். குளிக்கும்போதும், சாப்பிடும்போதும், அலுவலகம் செல்லும்போதும் அதைக் கழற்ற வேண்டாம். ஒருநாளில் நாம் படும் ஶ்ரமம் அப்பொழுது அறியலாகும். ஒரு நாளுக்கே இவ்வளவு ஶ்ரமமானால் தாய் பத்து மாதங்கள் எவ்வளவு ஶ்ரமப்பட்டிருப்பாள் என்பது அப்போது அறியப்படும். தாயை நிந்திக்க நினைப்போரும், முதியோரில்லத்தில் சேர்க்க நினைப்போரும் இந்த ஆய்வை மேற்கொண்டபின் அச்செயல்களைச் செய்யவும்.

ஸ்வாமி தேஜஸ்கன் தேவநாதனை, 'தாயும் நீயே சாயை (நிழல்) தந்து உகத்தலின்' எனக் கூறி உகக்கிறார். மரம் நிழல் தரும். வீடும் நிழல் தரும். ஆனால் அதிகக்குளிர் மற்றும் அதிகவெப்பம் முதலியவற்றிலிருந்து இவற்றால் நம்மைக் காக்கவியலாது. ஆகையாலேயே விசிறியையும், போர்வையையும் நாம் காலத்திற்கேற்றபடி வீட்டுக்குள்ளேயும் உபயோகிக்கின்றோம். ஆனால் தாயின் வயிறோ குளிரும் வெயிலும் நம்மைச்சற்றும் பாதிக்காதபடிக்காக்கின்றது. பகவானும் பிரளயகாலத்தில்

தன் திருவயிற்றில் வைத்து நம்மை இவ்வாறே காக்கின்றான். ஆகையால் அவனைத் தாய் என ஸ்வாமி தேஶிகன் விளித்தது பொருத்தமே. தாய் நமக்காகச் செய்யும் த்யாகத்தையெல்லாம் மகிழ்ச்சியுடனே செய்வதால் 'உகத்தலின்' என ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்துள்ளார்.

ஓர் க்ராமத்துப் பழமொழி என் நினைவுக்கு வருகின்றது. 'அம்மா இருப்பது அம்மணமாம்; கும்பகோணத்தில் கோதானாமாம்' என்பதே அப்பழமொழி. இது முக்கியமாக ஒருவன் செய்யவேண்டிய செயலை விட்டு முக்கியமில்லாத செயலைச் செய்யும்போது பயன்படுத்தப்படும். கோதானம் சிறந்ததுதான். அதைத் திருக்குடந்தை போன்ற ஓர் திவ்யதேசத்தில் செய்தல் மிகவும் சிறந்ததுதான். இது ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டதுதான். ஆயினும் பெற்ற தாய் தன் மானம் காக்க சரியான உடையின்றி வீட்டில் முடங்கிக்கிடக்கும்போது அவளுக்கு குறைந்த செலவில் ஓர் சேலை வாங்கிக்கொடுக்காமல், பல ஆயிரம் ரூபாய் செலவில் பசுவாங்கி தானம் செய்தால், அது பாபமாகவேயாகும். இப்பழமொழியிலிருந்து தாயைப் பேணிக்காத்தலை எல்லாவற்றையும் விட மிகச்சிறந்த தர்மமாக நம் க்ராம மக்களும் உணர்ந்திருந்ததை அறியலாம்.

இந்த க்ராமத்துப் பழமொழியை வேறுவிதமாக, 'ஈன்றோளிருக்க மணை நீராட்டி' என ஸ்ரீநம்மாழ்வாரும், 'பெற்றதாயிருக்க மணை வெந்நீராட்டுதிரோ' என ஸ்ரீகலியனும் அருளிச்செய்தார்கள். பிரளயகாலத்தில் தன்னிடத்தில் வைத்துக் காத்த (தாயான) எம்பெருமானை விட்டு மற்றோரைக் தொழுவது, தாயானவள் மூப்பு மற்றும் பிணியின் காரணமாகத் தானே குளிக்கவியலாதவளாய் இருக்கும்போது அவளுக்கு நீராட்டுதல் முதலிய பணிவிடைகளைச் செய்யாது, ஓர் மரத்தாலான பொம்மையை நீராட்டுதலுக்குச் சமம் என்பது இதன் பொருளாகும்.

இளையபெருமாள், வனவாஸத்திலிருந்தபோது ஓர் நாள், இராமபிரானிடம், 'உலகில் பெரும்பாலும் பெண்குழந்தைகள் தகப்பனின் குணங்களையும், ஆண்குழந்தைகள் தாயின் குணங்களையும் கொண்டு பிறக்கிறார்கள் என ஓர் முதுமொழியுண்டு. ஆனால் அது பரதன் விஷயத்தில் பொய்த்துள்ளது' எனக் கூறினார். இது கேட்டு இராமபிரான் 'தாயைப்பழிக்காதே. அந்த ஸ்தானம் உயர்ந்தது. உனக்குப்பிடிக்கவில்லையானால் தாயை ஏசுவதைவிட்டு பரதனின் குணங்களை மட்டும் பேசு' என இளையபெருமாளிடம் கூறியதிலிருந்து தாயின் பெருமையை அறியலாம். மகனானவன், தாய் ஏதோ ஒரு சில காரணங்களால் பதிதையானாலும் (அதாவது

நல்லொழுக்கமற்றவளாயினும்) அவள் நமக்காகச் செய்துள்ள த்யாகங்களை மட்டும் மனதில்கொண்டு அவளிடம் மரியாதையுடனே நடந்து அவளுக்குப் பணிவிடைகளைச் செய்தேயாகவேண்டும் என்ற ப்ரமாணத்தை ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீஸ்தோத்ரரத்னபாஷ்யத்தில் (உரையில்) காட்டியுள்ளார்.

தந்தை :

நம்மைப் பிறப்பித்தவன் தந்தை. தந்தையானவன் மகனுக்கு பல நாட்கள் கழித்து வரவேண்டிய நன்மையை முன்பே ஆராய்ந்து படிப்பு முதலியவற்றைச் சொல்லித் தருகின்றான். தான் பண்டிதனல்லாவிடினும் தன் மகன் பண்டிதனாக வேண்டுமென்ற ஆசை கொள்கின்றான். இதை மேற்படி மும்மணிக்கோவைப் பாசுரத்தில் ஸ்வாமி தேஶிகன், 'தந்தையும் நீயே முந்தி நின்று அளித்தலின்' என அருளிச்செய்துள்ளார். ('அளித்தல்' என்ற சொல் 'காத்தல்' என்ற பொருளில் இங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது).

இராவண வதத்திற்குப்பின் பெருமாள் ஸீதையுடனும் ஸுக்ரீவன் முதலானோருடனும் புஷ்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்புகின்றார். அப்போது விமானத்திலிருந்து கீழுள்ள இடங்களையெல்லாம், 'இது யுத்தம் நடந்த இடம், இதுதான் உனக்காக நான் கட்டிய ஸேது, இது கிஷ்கிந்தை' என்றவாறு அயோத்திவரும் வரையுள்ள இடங்களையெல்லாம் காட்டிவருகின்றார். விமானம் அயோத்தி அருகில் வரும்போது பட்டணத்தின் கட்டிடங்கள் கண்ணில் படுகின்றன. அப்போது ஸீதையை விளித்து, 'இதுதான் நாம் ஆளப்போகிற அயோத்தி' அல்லது 'நம் அயோத்தி' என்னாமல், 'राजधानी पितुर्मम (ராஜதாநீ பிதுர் மம) - என் தகப்பனின் ராஜதானி' எனக் கூறினார். தகப்பன் மறைந்து பதினான்கு ஆண்டுகள் கழித்தும் தன் தந்தையின் இடமாகவே அயோத்தியைக் கூறியதிலிருந்து ஓர் மகனுக்கு தந்தையிடம் இருக்க வேண்டிய பக்தியைக் காட்டினார்.

இரணியவதத்திற்குப் பிறகு ப்ரஹ்லாதனை பகவான் வேண்டிய வரனைக் கேட்குமாறு கூறுகின்றார். அப்போது தனக்கு பகவானிடன் இடையறாத பக்தியை வரமாகக் கேட்கிறான் பிரகலாதன். அது ஏற்கனவே அவனிடம் இருப்பதால் வேறு வரம் கேட்குமாறு பகவான் மீண்டும் கூறுகின்றார். அப்போது விஷ்ணுவிடமிருந்த கோபத்தினால் பல பாவங்களைச் செய்த தன் தந்தையை அவற்றிலிருந்து காக்குமாறு இரக்கிறான். இப்படிப் புராணங்களில் வரும் பலர் தந்தையிடம் தனயன் நடக்கவேண்டிய முறையைக் காட்டித் தந்தனர்.

ஆசார்யன் :

ஆசார்யன் என்பவன் வேதவழியில் நடந்து, நமக்கும் அறிவை ஏற்படுத்தி, நம்மையும் நல்வழியில் நடத்துபவன் ஆவான். ஒரு கோணத்தில் பார்த்தால் தாய் தந்தையரைவிட ஆயிரம் மடங்கிற்கும் மேல் இவன் உயர்ந்தவனாகின்றான். ஏனெனில் ஆயிரம் தாய் தந்தையரைவிட மேலான நன்மையை நமக்கு வேதாந்தம் வழங்குவதாகப் ப்ரமாணங்கள் உண்டு. இத்தகைய ஶாஸ்த்ரத்தை இவன் நமக்குக் கொடுப்பதால் இவன் ஆயிரத்துக்கும் மேலான தாய்தந்தையரை நமக்குக் கொடுத்தவனாகிறான் அல்லவா? பாபியான நம்மையும் சேர்த்துக்கொள்ளுமாறு நமக்காக பகவானிடம் சிபாரிசு செய்பவனல்லவோ இவன்? தாய் தந்தையர் மனிதப் பிறவியைக் கொடுத்தவர்கள். இவனோ வைணவப் பிறவியை நமக்கு அளித்தவன்.

இவன் திறத்து கைம்மாறு செலுத்தவே முடியாது. பகவான் கண்ணனாகப் பிறந்தான். எல்லாக் கல்விகளும் அவனிடமிருந்தே தோன்றினாலும், மனிதனாய்ப் பிறந்தவன் ஆசார்யனை அடைந்து நல்லுபதேஶம் பெறவேண்டும் என்பதை உலகுக்குக் காட்டவெண்ணி ஸாந்தீபினி முனிவரிடம் சில நாட்கள் பயின்றான். படிப்பு முடிந்தது. குருதக்ஷிணை கொடுக்கும் காலம் வந்தது. குருவின் மனைவி, கண்ணனை பகவான் என உணர்ந்து தான் பெற்று இழந்த புதல்வனை மீட்டுக்கொடுக்கும்படி வேண்டினாள். கண்ணனும் அவ்வாறே செய்தும் ஆசார்யன் தனக்களித்த ஜ்ஞானத்திற்கு இது கைம்மாறாகாது என கைசோர்ந்து நின்றான். இதை ஸ்வாமி தேஶிகன்,

ஏற்றி மனத்தெழின்ஞானவிளக்கையிருளனைத்தும்
மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றியுகப்பதும் புந்தியில்கொள்வதும் பொங்குபுகழ்ச்
சாற்றிவளார்ப்பதுஞ்சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே!

என அருளிச்செய்தார்.

'ஆசார்யனை உடையவனே மனிதன் (மற்றையோரெல்லாம் மிருகங்கள்)' என ஶாஸ்த்ரமும் கூறியுள்ளது. அன்பையே போதிக்கும் நம்மதமும் கூட ஆசார்யனை தன் எதிரிலேயே ஏசுபவனை முடிந்தவரை தண்டிக்கச் சொல்லுகின்றது. நிந்திப்பவன் பலஶாலியானால் காதை மூடிக்கொண்டு அவ்விடத்திலிருந்து தூரம் செல்லவும், அவனுடன் தொடர்பை முறித்துக் கொள்ளவும் சொல்லுகின்றது.

'யானைப்பாகனின் உதவியின்றி ஆனையேற முடியாது. ஆசார்யனின் ஸம்பந்தமின்றி பகவானை அடையவியலாது' என

ஸ்ரீநம்பிள்ளை என்ற ஆசார்யர் அருளிச்செய்துள்ளார்.

முடிவுரை:

கட்டுரையின் விரிவுக்கஞ்சி பெற்றோர் மற்றும் ஆசார்யனின் பெருமையை சிறிது கூறிவிடுத்துள்ளேன். தந்தைக்கும் தாய்க்கும் படிந்தவர்களாய் வாழ்வோம். மூப்புக்காலத்தில் அவர்களை பேணிக்காப்போம். முதியோரில்லங்கள் மூடப்படட்டும். எல்லோரும் ஆசார்யஸம்பந்தம் பெறுவோம். அவர்களின் நல்லுரை கேட்டு இவ்வுலகிலும் மேலுலகிலும் ஸுகம் பெறுவோம்.

இம்மூவரே ஸம்பிரதாயம் மற்றும் சமுதாயமென்ற மரத்திற்கு ஆணிவேர்போலாவார்கள். இவர்களிடம் கௌரவபுத்தியுடன் வாழ்தலே சமுதாயமென்கிற மரத்திற்கு நாம் நீர்சேர்ப்பதற்கு ஒப்பாகும்.

பணத்திற்காக தர்மத்தை விடுதல் முறையல்ல. பணத்தால் மட்டும் முன்னேறுதல் வீக்கமேயாகும். வளர்ச்சியாகாது. பண்பாட்டாலும் வளரவேண்டும். காலிலிருந்து தலைவரை உடல் வளர்ந்தால் தான் ஒருவனை வளர்ந்தவனாகக் கூறுகின்றோம். ஓர் உறுப்பு மட்டும் வளர்ந்தால் வீக்கம் என்றுதானே கூறுகின்றோம்? நாமும் தர்மத்தை விடாமல் பொருளீட்டியும் வளர்வோம்.

।। शुभं भूयात्।।

ஆழ்வார் எம்பெருமானார் தேஶிகன் அழகியசிங்கர்கள் திருவடிகளே ஶரணம்

பழவேரி ஸ்வாமி
வாழ்த்துப்பா

தோற்றம், இளவயதுக் கல்வி

புரட்டாசிப் பூரந்தனில் தோன்றிநல் ஞானத்
திரட்டைத் திருமலையில் கொண்டு - வரமாய்
அழகிய சிங்கரிடம் கைங்கர்யம் கண்ட
'பழவேரி ராஜ'ரே தஞ்சம்! 1

ஆசார்யநிஷ்டையில் ப்ரபத்தி கைகூடுதல்

நோய்கொண்டு நாளும் மெலிய சிறுவனின்
தாயென இஞ்சிமேடு சிங்கரும் - வாய்சொலாமே
சீர்சரண் மாலோலன் தாளடியில் தான்செய
சீர்கண்ட ராஜரைப் பாடு! 2

அழகியசிங்கரிடம் காலக்ஷேபம்

இஞ்சிமேடு சிங்கரின் பாதம் முறையினில்
தஞ்சமென் றடைந்து சாரந்தேர்ந்து - விஞ்சும்
கருணையால் சாரசாரம் சிட்டருக் கீந்திட்ட
சீர்பழ வேரியாரைப் பாடு ! 3

ஸாரபோதிநீ வெளியிடல்

ஆறேழாம் பட்டத் தழகிய சிங்கரின்
பாரேர்க்கும் சீருரை கேட்டெழுதி - வேறான
ராஜபுத்ரன் சேர்வகை நூலாக்கித் தந்திட்ட
ராஜகோ பாலரைப் போற்று! 4

குணத்தால் அனைவரையும் ஈர்த்தல்

நல்லா சிரியர்! அனைவர்க்கும் மெய்ப்பொருளைச்
சொல்லா திருந்த கணமில்லை - கல்விசேர்
மாந்தருக்குத் தானன்றி மற்றோர்க்கும் சிந்தையில்
சொந்தம் பழவேரி யார் ! 5

இராமாயணம் வாழ்வியலாதல்

ராமகதை இல்லாத பேச்சில்லை தருமத்தை
பாமரர்க்கும் போதிப்பார் அதுகொண்டு! - 'சேமமே
மேலுமேறும் நாடோறும் வாசி!'என்ற ராஜகோ
பாலரைப் பாடுவோ மின்று! 6

ஆசார்யன் திருநக்ஷத்ரம் கொண்டாடுதல்

நாற்பத் திரண்டாம்பட் டத்துசிங்கா! உனது
பொற்பதச் சரண்கொண்டு சீர்திருவள் ளூரிலுன்
நற்பிறவி நாளையின்றும் சீர்காணும் ராஜரைப்
பேறுஎனப் பெற்றதுன் ஆசி! 7

பெங்களூரில் காலக்ஷேபம் சாதித்தல்

காவிரி தோன்றிடு மாநிலத் தலையிலே
நூல்விரித்துப் போதுபோக்கி நாடோறு - மேவிரிவாய்
நாலுநூலும் தேடிவந்த வர்க்கீந்த ராஜகோ
பாலரைச் சிந்தைகொள் நெஞ்சே! 8

உபயவேதாந்த பரம்பரை வளர்த்தல்

வேதம றிந்தவர்க்குப் பிள்ளையாய் வாழ்வில்
வேதாந்த சாரந்தேர்ந் ததனைப் - பாதைதெளி
நாலாயி ரத்தில்காண் என்றுதன் பாலனுக்கு
பாலூட்டிய ராஜரைப் பாடு! 9

சிந்தித்தேத்தித் திரிதல்

நேர்கொண்ட பார்வைசீர் கொண்டசொல் என்றுந்தன்
பார்வெல்லும் ஞானம் இவையெல்லாம் - வேர்கொள்ளும்
தம்குருவின் பாதமே நாளும் பணிந்தேத்தும்
நம்ராஜரைக் கற்போம் இனி! 10

ஆழ்வார் எம்பெருமானார் தேஸிகன் அழகியசிங்கர்கள் திருவடிகளே ஶரணம்

குறிப்பு

குறிப்பு

ஸ்ரீ. உ.வே பழவேரி சக்ரவர்த்தி மஹாவித்வான்
ஸாரஸாரஜ்ஞ ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி

காலக்ஷேப கோஷ்டி

ஸ்ரீ டோலை கண்ணன்

பதிப்பகத்தார் :

மாறன் பதிப்பகம்

மாலோல பவனம், 56, ஆறாவது குறுக்குத் தெரு,
பாபுஸாபாளையா, பெங்களூர் 560043.
கைபேசி +919844124542